சக்தி

மாத வெளியீடு

டிசம்பர் 1953

நாலணா

38

788
4-53.



பொருளடக்கம்

டிசம்பர், 1953 மலர் 18 இதழ் 2

வாசகர்களுக்கு	...	தலையங்கம்	1
வேலை யில்லாத் திண்டாட்டம்	...	டாக்டர் ஜே. ஸி. குமரப்பா	4
இராமகாதை	...	எஸ். வையாபுரிப் பிள்ளை	6
எனது முதல் சந்திப்பு-மகாத்மா காந்தி	...	டி. எஸ். சொக்கலிங்கம்	9
பாரதி பிறந்த நாள்	...	மு. சண்முகம் பிள்ளை	13
எழும்பூர் நாற்சந்தியில்	...	நா. கி. நாகராஜன்	18
சிலை விழிக்கிறது	...	கிருஷ்ண சந்தர்	21
தொதுவர்கள்	...	வ. கண்ணன்	28
இந்தியப் பொருளாதார நெருக்கடி	...	வெ. ராமசாமி	31
இந்திய சினிமாத் தொழில்	...	வி. ரோஹிணி	34
தச்சுமரம்	...	அ. ராம்கோபால்	37
ஊழலை ஒழித்துக்கட்டிய சீன	...	வித்யா பிரகாஷ் தத்	41
ஜனப்பெருக்கக் கட்டுப்பாடு நாடகம்	...	வ. விஜயபாஸ்கரன்	44
குழந்தை இலக்கியம்	...	வை. கோவிந்தன்	50
குட்டிக் கதைகள்	...	ஈசோப்பு	51
வெற்றிலை போடுங்கள்	...	வை. கோ	55

அட்டைப்படம்: ஸ்ரீ. கே. முத்துராமலிங்கம்

தொதுவர் படம்: ஸ்ரீ. பிலோ-இருதயநாத்

★

விஜய சக்தி கார்த்திகை

வருடசந்தா ரூ. மூன்று தனிப்பிரதி அணு நான்கு

விரைவில்
வருகிறது
ஆர்.என்.ஆர்.பிக்சர்ஸ்
ஜாதகம்
தமிழ்
ஹாஸ்ய சமூகச் சித்திரம்
கே.சாரங்கபாணி • ஆர்.நாகேந்திரராவ் • டி.கே.பாலச்சந்திரன்
பி.டி.சம்பந்தம் • கே.ஆர்.செல்லம் • கே.என்.கமலம்
கே. சூர்யகலா • கே.எஸ்.அங்கமுத்து மற்றும் பலர் நடித்தது
RNR PICTURES
G.H.RAO
ஸ்டுடியோ: ஏவிஎம்
டைரக்ஷன்: ஆர்.நாகேந்திர ராவ்
கதை-வசனம்: டி.எம்.யு.பதி

பொங்கல் வாழ்த்து

ஓவிய உலகில் முடிசூடா மன்னர் கே. மாதவன் அவர்களால் வாரித் தெளிக்கப்பட்ட வண்ண ஓவியங்கள் மிளிரும்— கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரும்— கன்னித் தமிழ் கொஞ்சும் பொங்கல் வாழ்த்துக்கள் விற்பனைக்குத் தயாராகின்றன.

எல்லா ஊர்களுக்கும் விற்பனையாளர்கள் தேவை
மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர்
ஒரு ரூபாய் அனுப்பவேண்டும்.

விபரங்களுக்கு :

அணு காந்தி பாண்டியப் பதிப்பகம்

S/16 கீழ வாசல், தஞ்சாவூர்

கோயமுத்தூர் சக்தி காரியாலயம்

புத்தக வியாபாரம்
வரைடிஹால் ரோடு, கோயமுத்தூர்.

பள்ளிக்கூடம், முனிசிபாலிடி, பஞ்சாயத்து — இவைகளைச் சேர்ந்த புத்தகசாலைகளுக்கு தேவையான புத்தகங்கள் எங்களிடம் கிடைக்கும்.

சென்னை சக்தி காரியாலய வெளியீடுகள் அனைத்தும் கோயமுத்தூரில் எங்களிடம்தான் கிடைக்கும்

விலைப்பட்டியலுக்கு எழுதுங்கள்.

விஜய
கார்த்திகை

சக்தி

மலர் 18
இதழ் 2

மெய்ப் பொருள் காண்பது அறிவு

○

வாசகர்களுக்கு

●

சக்தி நவம்பர் இதழ் வெளிவந்ததும் வாசகர்களாகிய நீங்கள் அபாரமாகப் பாராட்டியிருக்கிறீர்கள். அதற்கு நன்றி. சிலர் முன் மாதிரியே எட்டணு விலையில் அதிகப் பக்கங்கள், போட்டோப் படங்களுடன் வெளியிடவேண்டும் என எழுதியிருக்கிருர்கள். அவர்களின் விருப்பப்படி இப்பொழுது செய்ய இயலாதது பற்றி வருந்துகிறேம். மக்களிடம் பணப் புழக்கம் குறைந்திருக்கிறது. ஒரே சமயத்தில் நாலணுதான் ஒருவரால் கொடுக்கமுடியும். எங்களுக்குப் போதிய வசதி ஏற்பட்டால் நாலணு விலையிலே மாதம் இரண்டு இதழ் வெளியிடலாம்.

ஒரு வருத்தமான செய்தி. வாசகரில் சிலர் நவம்பர் 'சக்தி' இதழுக்குத் தபால் நிலயத்தில் ஓரணுக் கொடுத்து 'சக்தி' பெறவேண்டிய நிலை ஏற்பட்டு விட்டதாக எழுதியிருந்தார்கள். 'சக்தி' தோன்றி பதினுன்கு வருடங்களாகிவிட்டன. தபாலில் அனுப்பக் குறைந்த கட்டணமான காலணுத் தபால் தலை ஒட்டினுல் போதும். நடுவிலே பத்திரிகை சில காலம் நின்றிருந்ததால் திரும்பவும் தபாலில் குறைந்த கட்டணத்தில் அனுப்ப அனுமதி பெற வேண்டி இருந்தது. நவம்பர் இதழ் அனுப்பும் வரை குறைந்த கட்டண அனுமதி கிடைக்கவில்லை. மக்களின் அறிவைப் பரப்புவதாக டமாரம் அடிக்கும் நம் அரசாங்கம் புத்தகப் பார்சலுக்கு (Book Post) கட்டணத்தை உயர்த்தியதால் பிரதி ஒன்றுக்கு ஓரணுத் தபால்தலை ஒட்டி அனுப்பித்தோம். நாலணு விலையுடைய பத்திரிகை அனுப்ப ஓரணு தபால் கூலி. ஏதோ சில தபால் நிலயங்களில் நிறுத்துப் பார்த்ததில் ஐந்து தோலாவுக்கு மேல் கொஞ்சம் நிறை கூட இருந்தது எனவும் அடுத்த இரண்டரைத் தோலாவுக்கு அரையணு அதிகம் செலுத்த வேண்டியதற்கு அபராதத் தொகை அரையணுவும் சேர்த்து ஓரணு வாங்கியிருக்கிருர்கள். கூட நிறையிருந்ததைக் கவனிக்காமல் குறைவான தபால் தலை ஒட்டியதற்காக ஓரணு அபராதம் கட்டியவர்கள் எங்களை மன்னிக்கவேண்டும்.

மற்றும் ஒன்று, நவம்பர் இதழில் நிறைய அச்சுப் பேய் புகுந்து விட்டது. இரண்டே நாளில் தயாரானதால் அவ்வாறு நேர்ந்து விட்டது. இனி எங்களால் இயன்ற அளவு கவனித்து வெளியிடுவோம் என்று சொல்லிக் கொள்வதைத் தவிர வேறு என்ன சொல்ல முடியும்?

'சக்தி' நவம்பர் இதழில் இன்னும் பிரதிகள் வேண்டுமென்று பலர் எழுதுகிறார்கள். எங்களிடம் எங்களுக்கு வேண்டிய சில பிரதிகள்தான் இருக்கின்றன, மேலும் அனுப்ப முடியாததற்கு வருந்துகிறோம்.

'சக்தி' நவம்பர் இதழ் எத்தனை வெளியிட்டோமோ அதைப்போல இரண்டு மடங்கு வெளியிட ஊக்கம் அளித்த வாசகர்களுக்கு எங்கள் நன்றி.

உங்களுடைய ஆதரவு மேலும் மேலும் வளர்ந்து வருமானால் இன்னும் பக்கங்களை அதிகப்படுத்தி விஷயங்களையும் அதிகப்படுத்த முடியும். ஒவ்வொரு வாசகரும் புதிதாக ஒரு வாசகரைச் சக்திக்கு அறிமுகப் படுத்துவீர்களா?

காலச் சுழல்

தூக்குத் தண்டனை: தூக்குத் தண்டனை விதிப்பது அநாகரிகம் என்று கருதப் பட்டுவரும் இந்த நாளில் அஹிம்சை வழிச் செல்லும் இந்தியாவில் தூக்குத் தண்டனை இன்னும் அமுலில் இருப்பது அவமானமாகும். இந்த நிலைமையிலிருக்க, மற்றொரு அருமையான காரியம் நம் சென்னை ராஜ்யத்தில் நடைபெற்று வருகிறது. அதாவது, தூக்குத் தண்டனை பெற்றவர்களைப் பற்றி நீதிஸ்தலத்தில் நீதிபதி தீர்ப்பு வந்ததும் பத்திரிகையில் செய்திகள் வருவது வழக்கமாயிருந்து வந்தது. இப்பொழுது சில மாதங்களாகத் தூக்குத் தண்டனை அடைந்தவர் பெயர், அவர் செய்த குற்றம், தூக்கு மரம் ஏறிய தேதி இவை பத்திரிகைகளில் துலாம்பரமாக வெளி வருகின்றன. எதற்காக இந்தச் செய்திகளை அரசாங்கம் பத்திரிகைகளுக்குக் கொடுத்து வெளியிடச் செய்கிறார்களென்று தெரியவில்லை. ஒரு வேளை இந்தச் செய்திகளைப் படித்து மக்கள் குற்றம் செய்யமாட்டார்களென்ற எண்ணமா? மக்கள் உணவுக்கும், உடைக்கும் இருக்க இடத்துக்கும் தாளம் போடும் இந்தச் சமயத்தில் இந்த மாதிரிச் செய்திகளைப் படித்தால் சாவிலே தைரியம் அதிகமாகுமே தவிரப் பயப்படமாட்டார்கள். எந்தவிதமான குற்றத்தைச் செய்யவும் தயங்கமாட்டார்கள். தினசரிப் பத்திரிகைகளில் ஒவ்வொரு நாளும்வரும் கொலை, கொள்ளைச் செய்திகளே மக்களின் நல்ல மனசைக் கெடுக்கப் போதுமே! அத்துடன் அரசாங்கம் வேறு இந்தச் செய்திகளை வெளியிடவா வேண்டும்? மேலும் கொலைகாரர்களை உண்டாக்க வேண்டும் என்ற எண்ணம் அரசாங்கத்தை நடத்துபவர்களுக்கு உண்மையிலேயே இல்லாமல் இருக்குமானால், உடனடியாக இந்தத் 'தூக்குத் தண்டனை நிறைவேற்றச் செய்திகளை' வெளியிடும் கைங்கரியத்தை நிறுத்த வேண்டும்.

சென்னையில் லைபெரரி: சென்னைக் கார்பரேஷன் லைபெரரி ஏற்படுத்துவதற்காகக் கடந்த நான்கு வருஷங்களாக, சென்னை மக்களிடம் 'லைபெரரி செஸ்' என்ற பெயரால் வரி வசூல் செய்து வருகிறது. சுமார் ஐந்து லட்ச ரூபாய் வரை வசூல் செய்யப்பட்டிருக்கிறது. லைபெரரிகளை இன்னும் மக்கள் கண்டபாடில்லை. 'லைபெரரி செஸ்' பேரால்

வசூல் செய்யப்பட்ட பணம் வேறு செலவுகளுக்கு உபயோகித்துக்கொள்ளப்படுமோ என்ற பீதி மக்களிடையே வளர்ந்து வருகிறது. விரைவில் ஏற்கெனவே நாலு வருஷங்கள் ஆகிவிட்டன. லைபெரரிகள் ஏற்படுத்த சம்மந்தப்பட்டவர்கள் காரியம் செய்ய வேண்டும், அல்லது வாங்கிய பணத்தையாவது வரி கொடுத்தவர்களிடம் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

விற்பனை வரியும் புத்தகங்களும்: உலகத்திலே நம் பாரத நாட்டைத் தவிர அறிவுக்கு வரி கிடையாதென்றே சொல்லலாம். பாரத நாட்டில்தான் புத்தகங்களுக்கு விற்பனை வரி உண்டு. இப்பொழுது அறிவு வளர்ச்சிக்கான புத்தகங்களுக்கு எத்தனையோ வகையில் தொல்லைகள் உண்டு. விற்பனை வரியும் நாலு கை மாறும்பொழுது ரூபாய்க்கு ஓரணா வரியாகிறது. ஓரணா வரி கொடுத்தால் புத்தக விலை அதிகமாகாதா? மக்கள் அதிக விலை கொடுத்து புத்தகம் வாங்க முடியுமா? அறிவுக்கு வரி கூடாது என்று பத்திரிகைக்காரர்கள் கிளர்ச்சிசெய்தார்கள். கிளர்ச்சிக்குக் காது கொடுத்துப் பத்திரிகைகளுக்கு அரசாங்கம் விற்பனை வரியை ரத்து செய்தது. புத்தகங்களுக்கு மட்டும் விற்பனை வரியை ரத்து செய்யவில்லை. ஏது காரணமோ தெரியவில்லை? புத்தகம் அறிவு பரப்பும் சாதனம் இல்லையா? பத்திரிகைக்காரர்களுக்குக் கிளர்ச்சி செய்ய சாதனம் இருக்கிறது, புத்தகக்காரர்களுக்கு அவ்வித சாதனம் ஏதும் கிடையாது என்ற காரணத்தால் புத்தகக்காரர்களின் கிளர்ச்சி அரசாங்கத்தின் காதுகளில் விழவில்லையா? அறிவுக்கு வரி விதிப்பது நியாயமில்லை என்று சொல்வதைத் தவிர வேறு என்ன சொல்லக்கூடும்?

ஜனத்தொகைப் பெருக்கக் கட்டுப்பாடு: நம் நாட்டில் ஜனத்தொகை பெருகிக்கொண்டே போகிறது. இப்படியே போனல் உணவுத் தொல்லை வரும். ஜனத் தொகைப் பெருக்கத்தைக் குறைக்க வேண்டும். ஒரு தாய் மூன்று குழந்தைகளுக்கு மேல் பெறக் கூடாது. அதற்கு மேல் பெறும் தாய்மார்களைச் சமூக விரோதிகளாகக் கருத வேண்டும்' என்று ஜனகணித கமிஷனர் ஸ்ரீ கோபாலசாமி ஐ. ஸி. எஸ். சொல்லுகிறார். விஷயம் தெரியாமல் வாய்க்கு வந்ததைப் பேசுவதை இவர்கள் உடனே நிறுத்த வேண்டும். 'இவர்கள் பயப்படும் அளவுக்கு ஜனப் பெருக்கம் ஏற்படப் போவதுமில்லை, உணவுப் பஞ்சமும் உண்டாகாது' என்று நேருஜி சொல்லியிருக்கிறார். நாட்டிலே எத்தனையோ லட்சக்கணக்கான ஏக்கர்கள் பண்படுத்தப்படாமல் இருக்கின்றன. அவைகளைப் பண்படுத்தினல் உணவுத் தானியம்ஏராளமாகக் கிடைக்கலாம். அந்த நிலங்களைப் பண்படுத்தினலும் உணவுத் தானியம் போதாது என்றுகூடச் சிலர் சொல்லலாம். சமீபகாலத்தில் ஒருசில பண்ணைகளில் விளைச்சலில் மூன்று மடங்கு, நான்கு மடங்கு அதிகமாகக் கண்டதாகப் பத்திரிகைகளில் படித்தது ஞாபகமிருக்கலாம். அந்தப் பண்ணைகளில் புது முறையில் விவசாயம் செய்தார்கள். மும்மடங்கு, நான்கு மடங்கு மகசூல் கண்டார்கள். அந்தப் பண்ணைகளைப் போலவே இப்பொழுது விவசாயத்தில் இருக்கும் நிலங்களிலும் புதிய முறைகளில் விவசாயம் செய்தால், இப்பொழுது நாட்டில் இருக்கும் மக்களைப் போல இரண்டு மடங்கு மக்களுக்கு உணவுத் தானியம் கிடைக்கலாமே.

அப்படியிருக்கும்போது பிள்ளைப் பேற்றைக் குறைக்கும் திட்டங்களுக்குப் பல லட்ச ரூபாய்களைச் செலவு செய்ய நம் யூனியன் அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. இது அநாவசியமான திட்டம். இந்தப் பயனற்ற திட்டத்துக்குச் செலவிடும் தொகையை விவசாயிகள் பயனடையும் வகையில் செலவு செய்தால் உணவுத் தானியம் அதிகம் உண்டாக்க வழியுண்டு. ஜனப் பெருக்கத்தைக் குறைக்கச் சொல்லும் கூச்சலும் ஒழியும். ★

வேலையில்லாத் திண்டாட்டம்

டாக்டர் ஜே. ஸி. குமரப்பா

வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னை பற்றி இன்றைக்கு சகஜமாகப் பேசப்படுகிறது. தேசத் தலைவர்கள் முதல் மாணவர்கள் வரை சகலரும் தினசரி விவாதிக்கின்றனர். ஆனால் எவருமே வேலையில்லாத் திண்டாட்டம் என்பது ஒரு பிரச்னையேயல்ல என்பதை ஏனோ புரிந்து கொள்வதில்லை. உண்மையைச் சொல்லப் போனால் இது நம் எல்லோரையும் பிடித்திருக்கும் ஒரு பயங்கர வியாதியாகும்.

மனிதன் உயிர் வாழப் பல தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியிருக்கிறது. தன் தேவைகளைப் பூர்த்தி செய்வதுதான் அவன் முழுநேர வேலை. இந்த வேலையில் ஈடுபடுவதன் மூலம் அவன் பயனுள்ள காரியம் செய்கிறான். ஒரு பறவை இருக்கிறது. தான் உயிர் வாழ்வதற்காக எங்கோ இருக்கும் ஒரு பழத்தைக் கொத்தித் தின்கிறது. கொட்டையை வேறோரிடத்தில் போட்டுவிடுகிறது. அதன் விருப்பம் இல்லாமலேயே அந்தக் கொட்டை செடியாகி மரமாகி வளர்ந்து பயனளிக்கிறது. விதை முளைத்துச் செடியாவதற்கு பறவை தன்னிச்சையில்லாமலேயே உதவி செய்கிறது. இதே போல நாம் நமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கே செய்யும் எந்த செயலும் அதன் முடிவுகள் எதாக இருந்தபோதிலும், அதுதான் உழைப்பு என்று கூறப்படுகிறது. இந்தச் செய்வில் எங்காவது குறைவேற்பட்டால் அதைத் தான் வேலையில்லாமை என்று அழைக்கிறோம். கூட்டுச் சமூக அமைப்பில் நம்முடைய தேவைகள் பூர்ணமாக நிறைவேற்றப் பட முடியாவிட்டால வேலையில்லாத் திண்டாட்டம் உண்டாகிறது' இது சமுதாயத்தின் வேலை மட்டுமல்ல. மூச்சைப்போல நம் எல்லோருடைய வேலையேயாகும். இச்செயவில் குறைவேற்பட்டால் நாம் சாவை நோக்கி விரைகிறோம். ஒருவன் தேவைக்கு அதிகமாகச் சாப்பிட்டால் அடிவயிற்றில் கோளாறு ஏற்படுகிறது, இந்தக் கோளாறு ஒரு பிரச்னையா? இல்லை. இது ஒரு வியாதி. இதற்கு ஒரு மாற்று முறை என்பது கிடையாது. இதை குணப்படுத்துவது சுலபம். அதிகமாகச் சாப்பிடுவதை உடனடியாக நிறுத்திக் கட்டுப்படுத்துவதுதான் இதற்கு மருந்து இதே போலத்தான் வேலையில்லாத் திண்டாட்டம் என்பது ஒரு வியாதி.

கூட்டுச் சமூக முறை என்பது உலக ரீதியானதல்ல. சமூகத்திற்குத் தேவையானவற்றை சமூகமே உற்பத்தி செய்வது ஒவ்வொரு சமுகத்திற்கும் தனித் தனியாகத் திட்டமிடப்பட வேண்டும். நம்முடைய தேவைகளை நிறைவேற்ற மற்றொரு சமூக முறையை எவ்வளவுக்கெவ்வளவு நாம் நம்பியிருக்கிறோமோ, அவ்வளவுக்கு நம் சமூகக் கட்டுக்கோப்புக்குள்ளேயே வாழ்வது என்பது மறைந்து விடுகிறது.

வேலையில்லாத் திண்டாட்டம் நிலவுகிறது என்றால், நம்முடைய செய்கைகளால் நம்முடைய தேவைகளைப்பூர்த்தி செய்ய முடியவில்லை என்றுதான் அர்த்தம். புரியும்படி சொல்லுவதனால் மற்றொரு நாட்டாரின் உழைப்பை நம்பியிருக்கிறோம் என்றுதான் சொல்ல வேண்டும். இது சமூகத்தின் சுகவாழ்வுக்கு பாதகமானது இதற்கு மாற்று வழி ஒன்றே ஒன்றுதான். நமது தேவைகளை நாமே பூர்த்தி செய்துகொள்ள வேண்டும். இதற்குத்தான் 'சுதேசி' என்று கூறுகிறோம். ஆகவே வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க 'சுதேசி' எண்ணம் வளர வேண்டும்.

நமது நாடு தோல், எண்ணெய் வித்துக்கள் முதலிய மூலப் பொருள்களை ஏராளமாக வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. இந்த மூலப் பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட சமான்களை நாம் ஏராளமாக இறக்குமதி செய்கிறோம். மூலப் பொருள்களுக்கும், உற்பத்திச் சாமான்களுக்கும் இடையில் உழைப்பு மறைந்துவிடுகிறது. இந்த உழைப்பை நாம் இவற்றின் இடையில் நுழைத்துப் பார்த்தால் வேலையில்லாத் திண்டாட்டம் என்பது ஓடி மறைந்துவிடும்.

வேறு வார்த்தைகளில் சொன்னால், நம் நாட்டில் கிடைக்கும் மூலப் பொருள்களைக் கொண்டு நமக்குத் தேவையான பொருள்களை நாமே உற்பத்தி செய்து கொள்ள வேண்டும் என்பதே. இந்த இரண்டு தொழில்கள்—எண்ணெய் பிழிவது, தோல் பதனிடுதல் இரண்டும்--நமது நாட்டிலேயே நடைபெற்றால் பல லட்சக்கணக்கான செக்குக்காரர்களுக்கும், தோல் பதனிடும் தொழிலாளிகளுக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமை

யும். இப்படித்தான் நம் மக்களுக்கு உயிர் ஊட்டும், சுயமரியாதையான தொழில்களைக் கொடுக்க முடியுமே ஒழிய தேவையற்ற வேலைகளைக் கொடுத்து சம்பளம் என்ற பிச்சைக்காசை வழங்குவதால் அல்ல; ஆகவே மூலப் பொருள்களை ஏற்றுமதி செய்து, உற்பத்தியான பொருள்களை இறக்குமதி செய்வதன் காரணமாகத்தான் வேலையில்லாத் திண்டாட்டம் வளர்கிறது. இந்த முறை எவ்வளவு காலத்துக்கு நீடிக்கிறதோ அது வரை நாம் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க முடியாது. வேலை தேடித் தருகிறோம் என்று கூறுவதெல்லாம் பயனற்ற பேச்சுக்களே.

இதே போலத்தான், நம்மிடம் உள்ள மனித சக்தியை உபயோகிக்கலாம். உழைப்பை மிச்சப்படுத்தும், இயந்திரங்களை உபயோகிப்பதாலும் 'வேலையில்லாத் திண்டாட்டம்' உண்டாகிறது. இக் குறைபாடுகளை நீக்கவேண்டும். அன்றுதான் உண்மையாக வேலையில்லாத திண்டாட்டத்தை ஒழிக்க முடியும். மக்களுக்குத் தேவையான பொருள்களை ஒரே இடத்தில் உற்பத்தி செய்யும் முறையைக் கைக் கொண்டதால் இயற்கையாக மனிதன் தன் தேவைகளைத் தானே பூர்த்தி செய்து கொள்ளவேண்டும் என்ற நியதிக்கு சீட்டுக் கொடுத்து விட்டோம் என்பதைத் தெளிவாக்குகிறது.

இவற்றையெல்லாம் ஆராய்ந்தால் நமக்கு ஒரு உண்மை புலனாகிறது. வேலையில்லாத் திண்டாட்டம் என்பது நாமே வரவழைத்துக் கொண்ட ஒரு செயலாகும். சமூகத்தை அரித்துக் கொண்டிருக்கிற இந்த வியாதியை குணப்படுத்த அரசாங்கம் எவ்வளவோ செய்யலாம்- மனிதர்கள் தங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளக் கூடிய முறையில் வேலைத் திட்டங்களை அவர்கள் வகுக்கலாம். பொது மக்களும் நம் நாட்டிலேயே உற்பத்தியான பொருள்களை வாங்கவேண்டும் என்று திடசங்கற்பம் எடுத்துக் கொள்ளவேண்டும். இந்த வியாதியைக் குறைக்க மக்களும் உதவவேண்டும். சுருக்கமாகச் சொன்னால் சுதேசி உணர்வு வளரவேண்டும் தொழில்களை மத்தியப் படுத்துதல் ஒழிய நேர்மையான சிந்தனையின் மூலம், மன அடக்கத்தின் மூலமாகவே இந்தப் பேயை விரட்டமுடியும். என்ன நடந்தாலும் இந்த பேயை ஓட்டுவோம் என்று உறுதி சொல்வோம். ●

புத்தகம்

புத்தகம் ஒன்றுதான் அழிவற்ற நிரந்தரமான பொருள்.

—ஆர். சௌதே

புத்தகம், காலமென்ற பெருங்கடலில் எழுப்பப்பட்டிருக்கும் கலங்கரை விளக்கு.

—இ. பி. விப்பல்

சில புத்தகங்களைச் சுவைத்துப் பார்க்க வேண்டும்; மற்றவற்றை அப்படியே கபளீகரம் செய்யவேண்டும்; சிலவற்றை மட்டுமே நன்றாக சுவைத்து ஜீரணம் செய்யவேண்டும்,

—பேக்கன்

வீரர்கள், ஞானிகள் இவர்களின் இதயத்தை நம் மனத்தில் பிரதிபலித்துக் காட்டுவதே புத்தகங்கள்.

—கிப்பன்

புத்தகங்கள் மட்டும் இல்லையென்றால் கடவுள் இல்லை, நீதி சகிக்க முடியாததாக இருக்கும், இயற்கை விஞ்ஞானம் குத்திட்டு அசையாமல் நின்றுவிடும், தத்துவம் முடமாகிவிடும், எழுத்துக்கள் ஊமையாகிவிடும், சகலமுமே இருண்டுவிடும்.

—பார்த்தலோனி

பாரம்பரியம் ஒரு எரி நட்சத்திரம்; ஒருதடவை கீழே விழுந்தால் மீண்டும் அதற்கு ஒளியூட்ட முடியாது. ஞாபக சக்தி ஒருதடவை தடையானால் மீண்டும் மனத்திற்கு கொண்டுவர முடியாது. ஆனால் எழுத்து என்றைக்கும் மாறாமல் ஒளிவிட்டுத் திகழ்வது. அதைச் சுற்றியுள்ள கருமேகங்கள் விலகினவுடன் மீண்டும் முன்னைவிடப் பிரகாசமாகவே இருக்கும். அதைப்போன்று புத்தகங்கள் மிகப் பெரிய பண்டகசாலை. சிலகாலம் அஜாக்கிரதையாலோ, மறதியாகவோ, நாமிருந்தாலும்மீண்டும்அதைத்திறந்தவுடன் நமக்கு வழிகாட்டத் தவறாது.

—ஜான்சன்

ஒரு புத்தகம் எழுதியவனுடைய இதயத்திலிருந்து வெளிவந்ததாக இருந்தால் நிச்சயம் மற்றவர்கள் இதயத்தைத் தொடும்.

—கார்லைல்

இராம காதை

பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை

சென்ற முப்பது ஆண்டுகளாக, கம்ப ராமாயணம் பற்றிப் பெருமுயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

மூலபாடத்தை நிர்ணயித்துச் சுத்தப் பதிப்பு வெளியிடும் முயற்சி அவற்றுள் ஒன்று. இது பலராலும் மேற்கொள்ளப்பட்டு முடிவெய்தாது நிற்கின்றது. தற்பொழுது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தாரும், சென்னைக் கலாக்ஷேத்ர நிர்வாகிகளும் இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இது நன்கு முற்றுப்பெற வேண்டுமாயின், பல பிரதேசத்துப் பிரதிகளையும் தக்க முறையில் ஒப்பிடுதல் வேண்டும். மூலபாட நிர்ணயத்திற்குரிய நியமங்களை அடிகோலிக்கொள்ள வேண்டும். கம்பராமாயணத்தையும் பூர்வ இலக்கியங்களையும் நன்கு கற்றுணர்ந்த சிலரேனும் ஒரு கலைக்கூடத்தில் ஒன்றுகூடியிருந்து ஆராய்தல் வேண்டும். ஆராய்ச்சியும் நெறிப்பட நிகழ்தல் வேண்டும். பதிப்பு முதலியன பற்றி மேல்நாட்டினர் கையாண்டுள்ள நெறிகளை நன்குணர்ந்தவர்களே இவ்வாராய்ச்சியில் தலையிடுதற்குரியர். ஆராய்ச்சி செய்வோரும் பொறுப்புணர்ச்சியோடு இவ்வேலையில் முனைதல் வேண்டும். முயற்சி மேன்மேலும் நிகழ நிகழ, புதுப்புது நியமங்களைக் கையாள வேண்டியதாயிருக்கும். இங்ஙனமாகப் பல ஆண்டுகள் ஒரே சிந்தனையாய் உழைத்து வந்தால்தான், இம் மூலபாட நிர்ணயப் பதிப்பு முற்றுப் பெறுவதாம். இதற்குரிய பொருட்செலவும், துணையாளர் உதவியும், கால அளவையும் எத்துணையாக வேண்டப்படும் என்பதை நாமே ஊகித்துக்கொள்ளலாம். இம் முயற்சியில் நாம் போராடி வெற்றி கொள்ளுதல் அவசியமே. ஆனால், இடையூறுகளும் மிகப் பல. இவற்றுள் ஒரு சிலவற்றை நண்பர் சொ. முருகப்பா அவர்கள் 'கம்பர் காவியம், அதன் நிலைவிளக்கம்' என்ற நூலில் ஆராய்ந்துள்ளார்கள். அவர்களது முடிபு இவ்வகை ஆராய்ச்சிப் பதிப்பு என்றேனும் வெளிவருமா என்ற மலைவுதான். வியாசபாரதப் பதிப்பிற்குப் பூனா நகரத்தில் செய்துவந்துள்ள முயற்சியை நோக்கினால் இம் மலைவிற்கு அவசியமில்லையென்பது சாணலாம்.

அடுத்தபடியாகக் கருதக்கூடியது யாது? இப்பொழுதுள்ள அச்சுப் பிரதிகளையெடுத்துக்கொண்டு, அவற்றோடு இரண்டொரு ஏட்டுப் பிரதிகளையும் உடன்வைத்து ஒப்புநோக்கி, பிழைகளை நீக்கி ஒருவாறு சுத்தம் செய்து ஒரு பதிப்பு வெளியிடுதலாகும்.

இந்தச் சுத்தப் பதிப்பு தமிழ்ப் பெருமக்கள் பெரும்பாலார்க்கு ஒருவாறு திருப்தி தரலாம். ஆனால், இடைச்செருகல் என்று மிகத் தெளிவாக விளங்கும் பகுதிகளும் இதில் இடம் பெற்றுவிடும். எனினும் பிழை பொதிந்துள்ள தற்காலப் பதிப்புக்களைவிட இது கொள்ளத் தக்கதாதல் வெளிப்படை. இதுபோன்ற பதிப்புக்கூட இன்னும் வெளிவரவில்லை. பலர் பதிப்பித்ததாக வெளிவந்துள்ள பிரதிகளின் தலைப்புப் பக்கத்தில் 'பல தேசத்துமுள்ள பிரதி ரூபங்களைப் பரிசோதித்துப் பிழையறப் பதிப்பித்தது' என்று காணப்படுகின்றதேயன்றி, உண்மையில் அவ்வாறு பதிப்பிக்கப் பெறவில்லை. பிழைகள் மிகுதியாய்ப் பல்கியதுதான் இவ்வுழைப்பின் பயன்.

இதனை அடுத்துச் செய்யக்கூடிய முயற்சி இராமாயணச் சுருக்கம் பற்றியதாகும். என்னிடமுள்ள 'அவசர ராமாயணம்' என்ற ஏட்டுப்பிரதி இந்நெறியைப் பின்பற்றியதே. இந்நெறியில் அச்சுப்பிரதி வெளிவந்தது 1878-ல் ஆம். இது 'வித்தியா சாலைகளின் உபயோகத்துக்காக, பிழையறப் பரிசோதிப்பித்து சென்னை ராஜதானிப் பாடசாலை புத்தக சங்கத்தாரது கருத்துக்கிணங்கப்படலக் கதைகளின் சுருக்கத்துடன் பதிப்பிக்கப்பட்டது.' பாலகாண்டத்தில் காணும் 1405 செய்யுட்களில் 1171-செய்யுட்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இச் சுருக்க நெறியைப் பின்பற்றித் தோன்றியது வ. வே. சு. ஐயரவர்களது பதிப்பு.

சுருக்க நெறியிலே நாம் கையாளுதற்குரிய நியமங்கள் சிலவற்றை இங்கே ஞாபகப்படுத்திக்கொள்ளலாம்.

i. கதை தொடர்புற அமைதல்.

ii. முக்கிய நிகழ்ச்சிகள் அனைத்தும் அவற்றிற்குரிய பூர்வாங்கத்துடன் காணப்படுதல்.

iii. கதாபாத்திரங்களின் தனிச் சிறப்பு விளங்குதல்.

iv. நூலின் அமைப்பு, பெருமை, இதிகாசம் அல்லது பெருங்காப்பியத்தின் சிறப்பியல்புகள் முதலியன புலப்படுதல்.

v. சுவையுடைய கவிதைகள் அனைத்தும் உளவாதல்.

இவற்றையும் இவைபோன்ற பிறநியமங்களையும் இயன்றவரை தழுவிச் சுருக்கம் அமைதல் நலமாகும். கம்பராமாயணம் பற்றிய அளவில், அது ஒரு பேரிதிகாசம் என்பதை நாம் மனங்கொள்ள வேண்டும். கிளைக் கதைகள் வருதல் இதிகாசத்திற்கு ஓர் இலக்கணமாகும். எவ்வகையான கிளைக் கதைகளைச் சுருக்கத்தில் வைத்துக் கொள்ளுதல் வேண்டும் என்பது பற்றியும் கலையுணர்ச்சியோடு ஆராய்ந்து கொள்ளத்தக்கன கொள்ளப்படுதல் வேண்டும்.

இதிகாசத்தின் மற்றோரிலக்கணம் அதில் வரும் தலைமைக் கதை பரம்பரைக் கேள்வி வாயிலாகவும் பிறவாறாகவும் ஒரு நாட்டிலுள்ள அனைவர்க்கும் தெரிந்ததொன்றாயிருக்கும். இராம காதை அவ்வாறுள்ள தொன்றல்லவா? எனவே, சாதாரண நாவல்களில் அடுத்து வரும் நிகழ்ச்சி யாதென அறிவதற்கு அவாவி நிற்கும் விரைவு இதிகாசம் பற்றிய அளவில் தோன்றுவதில்லை. கதையைச் சாவகாசமாய்க் கவிஞன் கூறுவான்; சில இடங்களில் விரைந்து செல்வான்; சில இடங்களில் உளங்கூர்ந்து அனுபவித்து நிற்பான். சில இடங்களில் தவழ்ந்து சென்று அயற்காட்சிகளை மனக் கண்முன் நிறுத்தி நெகிழ்ந்து தோன்றுவான். கவிதை வளமும் கதை வளமும் நிரம்பிச் செல்லும்போது, கவிதையின் போக்கு நின்று விட்டதோ என்றுகூட நாம் கருதி விடுவோம். இவ்வாறெல்லாம் செல்லும் கதியைத்தான்,

'சான்றோர் கவியெனக்கிடந்த கோதாவரி' எனக் கம்பன் உணர்த்தினான்.

கதை இங்ஙனம் செல்லு முறையிற் கம்பனது மேதாவிலாசம் தோன்றவில்லையென்று எண்ணுதல் இயல்புதானே. எனவே, ஒரு சில அறிஞர்கள் ஒவ்வொரு பகுதியிலும் சுவையும் அழகும் உடையனவாகத் தாம் கருதும் செய்யுட்களைத் தெரிந்தெடுத்து, தொடர்பிற்கு வேண்டிக் கதைப் பொருளைத் தமது சொந்த வசன நடையில் அமைத்துப் பதிப்புக்கள் வெளியிடலாயினர். வெ.ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள் வெளியிட்டுள்ள கம்பராமாயண இன் கவித்திரட்டு, ஆனந்தவிகடனில் எனது நண்பர் டி. ஸ்ரீ ஆச்சார்யா எழுதி வரும் 'சித்திர ராமாயணம்' முதலியன இந்நெறியைப் பின் பற்றி யெழுந்தன. ஆனால், கம்பனது பேராற்றலிற் பல அம்சங்கள் இவ்வகை உரையிடையிட்ட சுருக்கங்களில் காணப் படுதலில்லை, இதை யாவரும் எளிதில் உணரலாம்.

மேல் விவரித்த மூல நிர்ணயப் பதிப்பு, சுத்தப் பதிப்பு, உரையிடையிட்ட சுருக்கப் பதிப்பு என்பனவெல்லாம் ஒருபுறமிருக்க, வேறொரு பதிப்பு முயற்சி நமது நாட்டில் நடைபெற்று வருகிறது. இம்முயற்சியை மேற்கொண்டவர்கள் எனது அருமை நண்பர் ரஸிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள். திரு. முதலியாரவர்கள் கம்பனை ஆழ்ந்து கற்றவர்கள்; செய்யுளோசையை நுணித்தறிவதில் பெருந்திறல் வாய்ந்தவர்கள்; கவிதை-இன்ப நுகர்ச்சியில் எப்பொழுதும் திளைத்து வாழ்பவர்கள்; ஆங்கில இலக்கிய அறிவு நன்கு பெற்றுள்ளவர்கள்; செய்யுட் சுவையைப் பகிர்ந்தளிப்பதிலும் கற்ற செலச் சொல்வதிலும் பேராற்றல் படைத்தவர்கள். நாணய பரிசோதகனைப்போல, ஓசையின் தன்மை கொண்டே, 'இது கம்பன் பாட்டு; இது கம்பன் பாட்டு அல்ல' என்று துணிதலில் பெருந்தெளிவுள்ளவர்கள். இவர்கள் தங்கள் இயற்கையான அறிவாற்றலாலும், கல்வித் திறத்தாலும், கலையுணர்ச்சியாலும் இப்பொழுதுள்ள இராமாயணப் பதிப்பென்னும் குப்பையிலே மறைந்து கிடக்கும் மணிகளைப் பொறுக்கியெடுத்துக் கோக்க முயன்று வருகிறார்கள். இந்நிலையில் இதனைத் **தெரிவுப் பதிப்பு முயற்சி** யென்றாலே தக்கது. முதல் மூன்று காண்டங்கள் மட்டும் இப்போது வெளிவந்துள்ளன. பால காண்டத்தில் இவர்கள் பொறுக்கியெடுத்துள்ளவை 167 கவிதைகளே. தற்காலப் பதிப்புக்களிலுள்ள செய்யுட்களில், எட்டில் ஏழு பங்கிற்குமேல் கம்பனது கவிதைகளல்லவென நீக்கப்பட்டுள்ளன. இப்பதிப்பில் தொடர்ச்சியென்பது இருக்க முடியாது. பாலகாண்டக் கதைபற்றிக் கம்பன் பாடிய மற்றைப் பாடல்களெல்லாம் அழிவெய்தி விட்டன; இவற்றிற்குப் பதிலாக இப்போது காணப்படுவன அனைத்தும் இடைச் செருகல்கள் என்பது திரு. முதலியாரவர்கள் கருத்து.

இவ்வாறு கூறிய அளவில், இவர்களது முயற்சியை முற்றக் கூறியதாகாது. தெரிவுச் செய்யுட்களில் பல இவர்களது உயரிய கவிதை—லட்சியத்

திற்கு ஒத்தொழுகவில்லை. இவற்றைச் செவ்விதாக்கி, இவர்கள் கருத்துப்படி கம்பன் பாடல்களாக அமைக்கும் பொறுப்பும் முதலியாரவர்களைச் சார்ந்து விட்டது. ஆகவே அங்கங்கே திருத்தஞ் செய்யவேண்டும் அவசியம் ஏற்பட்டது. இவர்கள் வெளியிட்டுள்ள பால காண்டப் பதிப்பு முதலியன இவ்வாறு திருத்தப்பட்டவையேயாம். இதனைத் தெரிவுத் திருத்தப் பதிப்பு என்று நாம் கூறலாம்.

திரு. டி. கே. சி. அவர்களது நூதன ஆராய்ச்சி நெறியிலே செல்லாது, பழைய நெறியொன்றிலே செல்வது அன்பர் திரு. சொ. முருகப்பா அவர்களது பாலகாண்டப் பதிப்பு. இவர்கள் நீண்டகாலமாகத் தமிழ் சமுதாயத்திற்கும் தமிழுக்கும் தொண்டுபுரிந்து வருபவர்கள். கம்பராமாயணப் பதிப்புமுயற்சியில் இப்போது ஈடுபட்டிருக்கிறார்கள். இக்காவியத்தின் நிலை எவ்வாறுள்ளது என்பதை விளக்கிச் சில மாதங்கட்கு முன் ஒரு நூலும் எழுதி வெளியிட்டிருக்கிறார்கள். எனவே, இவர்களது பதிப்பு முயற்சியில் பல சிறந்த அம்சங்கள் காணப்படுதல் இயல்பே.

முதவாவது தலைமைக் கதைத் தொடர்பு இடைமுரியாமற் செல்லுகின்றது. இதனால் தொடர்பு தெரிதற்குப் பதிப்பாளரது வசனப்பகுதி சிறிதும் வேண்டியதில்லை. பிறவிஷயங்கள் எவ்வாறாயினும், கம்பன் இராமனது சரிதத்தை முற்ற எழுதியுள்ளானென்பதிற் சிறிதும் ஐயமில்லை. தொடர்புக்குரிய செய்யுட்களெல்லாம் மறைந்து விட்டன எனல் சம்பாவிதமன்று. ஆனால், இப்பதிப்பாளர் செய்ததுபோல் திருவவதாரப் படலக் கதையை நீக்கலாமா என்று சிலர் கேட்கலாம். இப்பகுதியில், கவிதை வளமில்லை; கதை வளந்தான் உள்ளது. குலமுறை கிளத்துப் படலத்திலே, அவதார வரலாறு மிக அற்புதமாகக் கூறப்பட்டுள்ளது. இப்படலம் இருக்க, திருவவதாரப் படலத்தை நீக்குதல் ஒருவகையில் தக்கதே எனத் தோன்றுகிறது. கிளைக்கதைகளும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றிலும் கவிதைவளம் காணுதல் அரிது. பூக்கொய் படலம், உண்டாட்டுப் படலம் முதலியவற்றிலும் பல பகுதிகள் நீக்கப்பட்டுள்ளன. இவையும் வேறொரு காரணத்தால் நீக்கத் தக்கனவே. அழகுணர்ச்சியில் விரஸம் தோன்றச் சிறிதும் இடங்கொடுக்கலாகாது.

கதையிலுள்ள முக்கிய நிகழ்ச்சிகள் எதுவும் இப்பதிப்பில் விடவில்லை. இது நன்ருகக் கவனிக்கத்தக்கது. இங்ஙனமே கதாபாத்திரங்களின் இயல்புகள் நன்கு விளங்கும் பகுதிகள் இப்பதிப்பில் இடம் பெற்றுள்ளன. உதாரணமாக, தசரதன் தனது முதற்புதல்வனாகிய இராமனிடத்தில் வைத்திருக்கும் பிரேமாதிசயத்தைக் கூறலாம். இன்னுமொன்று, சுவையுடைய கவிதைகள் பெரும்பாலும் இப்பதிப்பில் தரப்பட்டுள்ளன. இவற்றையெல்லாம் நோக்கும்போது, இப்பதிப்பு இராமயணச் சுருக்கமாகுமெனத் தடையின்றிக் கூறலாம்.

பாலகாண்டத்தில் இப்பதிப்பிற் காணும் செய்யுட்களை மாத்திரந்தானா கம்பன் இயற்றினனென்ற சர்ச்சை இங்கு அவசியமேயில்லை. திரு முருகப்பா அவர்கள் ஏட்டுப் பிரதிகளை ஒப்பு நோக்கியிருக்கிறார்கள். எதன் பொருட்டு என்றால், ஏதேனும் ஒரு சிறந்த பாடத்தைத் தேர்ந்தெடுப்பதன் பொருட்டே. இவர்கள் தாமே கவிதைகளைத் திருத்தி விடவில்லையென்பதும் நாம் போற்றிக் கூறவேண்டும் அம்சங்களில் ஒன்ருகும்.

இப்பதிப்பில் இராமாயணத்தின் பெயர், 'இராமகாதை' எனக் கொடுக்கப்பட்டுள்ளது. கம்பன் இட்ட பெயர் எதுவாயிருப்பினும், இப்பெயர் சுருக்கமாகவும் விளக்கமாகவும், கம்பன் தன் நூலினுள் ஆண்டுள்ளதாகவும் (செய்யுள்-2) காண்கிறது. இதனைப் பதிப்பாசிரியர் நூற்பெயராகக் கொடுத்தது பொருத்தமுடைத்தென்றே கருதுகிறேன்.

இச் சுருக்கத்தைச் சந்திபிரித்திருக்கும் முறையும், பலரும் கற்று அனுபவிக்க வேண்டுமென்ற தனிப் பெருநோக்கத்துடன் இயற்றிய உரையும் சிறப்பாகக் கூறத்தக்க அம்சங்களாம். 'கண்ணிணைக் காக்கின்ற இமையிற் காத்தனர் (126) என்பதன் உரையில் 'இந்தப் பொருளுக்கெல்லாம் இடங் கிடையாது' என்று எழுதுகின்ருர்கள். இந்த மனப்பான்மையே தற்கால உரைகாரர் மேற்கொள்ளத்தக்கது. அதிவியாக்கியானம் அதிவிருஷ்டியைப் போன்றது. இரண்டும் கேடு பயப்பதாகும். கேட்போர் வியப்புக் கடலுள் அமிழ்ந்து கரையேருவண்ணம் இராமாயணப் பிரசங்கிகள் விரித்துச் சொல்லும் அதிவிநோத வியாக்கியானங்களெல்லாம் இலக்கியச் சுவை நுகர்ச்சியில் விஷமென்றே கருதத்தக்கது.

இங்ஙனமாகப் பல வகையினும் இப்பதிப்பு சிறந்து விளங்குகிறது. ★

மகாத்மா காந்தி

டி. எஸ். சொக்கலிங்கம்

அக்காலத்தில் வெடிகுண்டு வழக்குகள் சதியாலோசனை வழக்குகள் இவைதான் பெரிய தேசீயச் செய்திகளாய் இருக்கும். சுயராஜ்யத்திற்காக பாடுபட வேண்டும் என்று விருப்பமுள்ளவர்களுக்கு என்ன வழி என்பதே தெரியாது. அதை காட்டுவாரும் யாரும் இல்லை. மகாநாடுகள் என்பவையெல்லாம் ரொம்ப ரொம்ப அபூர்வம். வருஷத்திற்கு ஒரு தடவை காங்கிரஸ் மகாசபை கூடுவதுதான் பெரிய தேசீயவிழாவாய் இருக்கும். காங்கிரஸ் மகாசபைக்கு போய் வருவது ஒன்றுதான் பெரிய தேசீயத்தொண்டாய் விளங்கி வந்தது.

தேச சேவை செய்ய வேண்டும் என்று எனக்கு ஆசை தோன்றியது. ஆனால்எப்படிச் செய்வது? அதற்குவழிதான் ஒன்றும் இல்லை. இச்சமயத்தில் ஆமதாபாத்தில் சத்தியாக்கிரக ஆசிரமம் ஒன்றை மகாத்மா ஆரம்பித்ததைப் பத்திரிகைகளில் பார்த்தேன். அதில் போய் சேருவது என்று முடிவு செய்தேன். ஆனால் எப்படிப் போவது? வீட்டில் தெரிந்தாலோ போக விடமாட்டார்கள். திருநெல்வேலி சதியாலோசனை வழக்கில் சம்பந்தப்பட்டு என் சகோதரர் இரண்டு வருஷம் ஜெயிலில் இருந்துவிட்டு வெளியேவந்தார். அதுமுதல் நான் படிக்கிறவைகளையும் எனக்குத் தபாலில் வந்த கடிதங்களையும் கவனமாய் என்வீட்டார் கண்ணோட்டம் போட்டு வந்தார்கள். அக்காலங்களிலெல்லாம் காலணா கார்டில் எழுதிபோட்டால் போதும். ஒரு ஆள் சுமை காட்லாக்குகள் வந்து சேரும். அந்தக் காட்லாக்குகளில்கூட ராஜத்துவேஷம்இருக்குமோ என்று என் வீட்டிலுள்ள சிலர் சந்தேகப்படுவார்கள். இந்த நிலைமையில் வீட்டாரின் சம்மதத்தோடு ஆமதாபாத் போவது என்பது நடவாத காரியம். எனவே தெரியாமல் புறப்பட்டு விடுவது என்று முடிவு செய்தேன்.

முதலில் ஆசிரமத்தில் சேருவதற்கான விதிகளின் விவரங்களைப் பற்றி எழுதிக் கேட்டேன். விதி விவரங்கள் டைப் அடித்து வந்ததாக ஞாபகம். அதோடு ஒரு கடிதமும் வந்தது. ஆசிரமத்தில் இடம் காலியாய் இல்லையென்றும், அநுமதி பெற்ற பின்னே அங்கு வர வேண்டுமென்றும் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்கள். இந்த அநுமதியைப்பற்றி நான் கவலைப்படவில்லை. அவ்வளவு தூரம் போன பின்பு சேர்த்துக் கொள்ள மறுத்துவிடமாட்டார்கள் என்பது என் நினைப்பு.

1917 -ம் வருஷம் மே மாதம் கடைசியில் புறப்பட்டேன். ஆமதாபாத் போவதென்றால் சென்னைக்குப் போய் அங்கே மற்றொரு ரயிலில் ஏறி பம்பாய் போக வேண்டும். பம்பாயில் இன்னொரு ரயில் ஏறி ஆமதாபாத் போய் சேரவேண்டும். ஹிந்தியோ எனக்கு கொஞ்சம்கூட தெரியாது. இதை சமாளிப்பது எப்படி? இரண்டாவது வகுப்பில் பிரயாணம் செய்தால் சாப்பாடு காரியங்களுக்கு ரிபிரெஷ்மெண்ட் ரூம்காரர்களோடு ஆங்கிலத்தில் பேசிச் சமாளிக்கலாமென்று நினைத்தேன். அதனால் சென்னைக்கு மூன்றாவது வகுப்பில் வந்து சென்னையிலிருந்து ஆமதாபாத்துக்கு நேராக இரண்டாவது வகுப்பு டிக்கட் எடுத்தேன். 62 ரூபாய் என்று ஞாபகம் பம்பாயில் போய் இறங்கியதும் ஹோட்டல் ஏஜெண்டுகள் பிரயாணிகளை வரவேற்றார்கள். அந்த ஹோட்டல்களில் மதராஸ் ஹோட்டலுக்கு போனால் தான் பாஷை, சாப்பாடு தகராறுகள் இல்லாமல் இருக்குமாகையால் மதராஸ் ஹோட்டலுக்குப் போனேன். அங்கு இரண்டு மூன்று நாட்கள் இருந்துவிட்டு ஆமதாபாத் போய்ச் சேர்ந்தேன். அங்கே சபர்மதி என்று ஒரு ஆறு ஓடுகிறது. அதன் கரையில் மகாத்மாவின் ஆசிரமம் இருந்தபடியால் அதற்கு

சபர்மதி ஆசிரமம் என்று பெயர் இருந்தது. ஆசிரமத்திற்கு நான் போனதும் மகாத்மா அங்கில்லை என்பதை அறிந்தேன். பீஹாரில் சாம்பரான் பிரதேசத்தில் தோட்ட தொழிலாளர் தகராறு ஏற்பட்டது. அச்சமயம் மகாத்மா அங்கே சட்டமறுப்பு செய்து தொழிலாளரின் குறைகளை விசாரிக்க ஒரு கமிட்டியை சர்க்கார் நியமிக்கும்படி செய்தார். அந்த வேலை சம்பந்தமாக மகாத்மா சாம்பரான் போயிருப்பதாகவும் ஆமதாபாத் திரும்ப ஒரு வாரம் ஆகுமென்றும் சொன்னார்கள். ஆசிரமத்தின் மானேஜராக ஸ்ரீ மகன்லால் காந்தி என்பவர் இருந்தார். அவர் மகாத்மாவின் ஒன்றுவிட்ட சகோதரர். அவரைப் பார்த்தேன். அவர் என்னைப் பார்த்ததும், அநுமதி பெறாமல் வரக் கூடாது என்று எழுதி இருந்தேனே என்று கேட்டார். கடைசியாகமகாத்மா திரும்பி வந்த பின்பு பேசிக்கொள்ளலாமென்றும் அதுவரை நான் அங்கே இருக்கலாம் என்றும் சொன்னார். அப்புறம்தான் எனக்கு சோதனை ஆரம்பமாயிற்று.

காலையில் ரொட்டியும் மோரும் கொடுத்தார்கள். சுலபமாய்ச் சாப்பிட்டேன். 11 மணிக்குச் சாப்பாடு ஆரம்பமாயிற்று. ஒவ்வொருவரும் தங்கள் தட்டுகளை கொண்டு போய்ச்சமையல் இடத்தில் தங்களுக்கு வேண்டிய அளவு வாங்கிக் கொள்ள வேண்டும். அறையின் மத்தியில் ஒரு நீளமான மேஜை மீது உணவுவகைகள் வைக்கப்பட்டிருந்தன. பரோட்டா, பூரி, சாதம், பருப்பு, காய்கறிகள், உப்பு, எலுமிச்சம்பழதுண்டுகள், பால், சர்க்கரை இவ்வளவும் இருந்தன. மேஜையின் ஒரு பக்கத்தில் ஸ்ரீமகன்லால் காந்தி, அவர் மனைவியார், இன்னும் சிலர் நிற்பார்கள். ஆசிரம வாசிகளின் தட்டுகளில் அவர்களுக்கு வேண்டியவைகளை எடுத்து வைப்பார்கள். மகாத்மா காந்தியும் அன்னை கஸ்தூரிபாயும் ஆமதாபாத்தில் இருக்கிற நாட்களில் அவர்களும் இந்த பரிமாறும் வேலையில் கலந்து கொள்ளுவார்கள். உணவை வாங்கிக்கொண்டு போய்த் தங்களுக்குப் பிரியமான இடத்தில் வைத்து உண்ணலாம். சாதமோ, பருப்போ, சப்பாத்தி பூரிகளோ எவ்வளவு வேண்டுமானாலும் கிடைக்கும். ஆனால் அவற்றை எப்படி சாப்பிடுவது? அதுதான் புரியவில்லை. அந்த வயதில் புரியவில்லை. இப்பொழுதாய் இருந்தால் ஒரு சிரமமும் இல்லாமல்சாப்பிடுவேன். சாதத்தில் பருப்பும், நெய்யு குழம்பும் விட்டு சாப்பிட்டு,பின்னால்மோர்ச் சாதம் சாப்பிட்டுப் பழக்கமாய் விட்டதால், அங்கே சாம்பாரையோ, ரஸத்தையோ மோரையோ காணாமல்போனது பெரிய ஏமாற்றமாய் இருந்தது. மிளகாய் என்பது ஆசிரமத்துக்குள் நுழையவே கூடாது ஆசிரம தோட்டத்திலேயே எத்தனையோ புளியமரங்கள் இருந்தும் கூட புளி என்பது சமையல் அறை பக்கமே போகக்கூடாது. உணவில் புளிப்புக்காக ஒரு எலுமிச்சை துண்டை சேர்த்துக் கொள்ளலாம். அவ்வளவுதான். அந்தவயதில் அந்தசாப்பாட்டை என்னால் சாப்பிடவே முடியவில்லை.

ஆசிரமவிதிகளில் நாக்கிற்கு அடிமையாகக்கூடாது - என்பதும் ஒன்று. உடலுக்கு அவசியமானதை உண்ண வேண்டுமே ஒழிய நாக்கிற்குருசிவேண்டும் என்பதற்காக அவசியமில்லாததை உண்ணக்கூடாது. இந்த அவசியம் இல்லாதவகையில், புளியும், மிளகாயும், சேர்ந்தவிட்டன. இந்தவித்தியாசத்தை விதியை படித்தபோது என்னால் உணர முடியவில்லை. ஆசிரம உணவு எப்படி இருக்கும் என்பதே தெரியாதபடியால் இதைப்பற்றி நான் சிந்திக்கவேயில்லை உணவு அப்படி இருக்கும் என்பதுமுன்னதாக தெரிந்திருந்தால் நான் ஆசிரமத்துக்கு போக துணிந்திருப்பேனா என்பது சந்தேகம்தான். எனவே ஆசிரம உணவு மனதில் இருந்த தேசசேவை உற்சாகத்தை ரொம்ப குறைத்தது என்றாலும் எப்படியாவது சமாளிக்கலாம் என்ற உறுதி ஒருபக்கம்இருந்து கொண்டே இருந்தது. ஒருநாள் ஆசிரமத்திற்கு வெளியே நடந்து போய் வரலாம் என்று புறப்பட்டேன். சபர்மதி ஆற்றுப் பாலம் பெரிய பாலம். அதைக் கடந்து அப்பால் போன போது வரிசையாக கடைகள் இருந்தன. அவற்றில் மிட்டாய் கடைகளை பார்த்ததும் என் உற்சாகம் மீண்டும் திரும்பியது உடலுக்கு அவசியம் இல்லாத உணவை உண்பது திருடுவதற்கு சமானம்

என்று ஆசிரமவிதி சொல்லுகிறது. என்றாலும் மிட்டாய்கடைகளை பார்த்ததும் அந்தவிதிகள் எல்லாம் மறைந்தே போயின. வேண்டிய அளவு மிட்டாய்களை வாங்கி உண்டு ஆவலைதணித்தேன். திடீரென்று நிறையமிட்டாய் சாப்பிட்டதால் இரண்டு மூன்று தினங்களில் ஜுரம் வந்தது. இதற்குள் மகாத்மாவும் திரும்பிவிட்டார்.

அக்காலத்தில் மகாத்மா இடுப்பில் பஞ்ச கச்சவேஷ்டியும், உடம்பில் நீளமான சட்டையும், தலையில் ஒரு பெரிய தலைப்பாகையும் அணிந்திருப்பார். சாம்பரானிலிருந்து திரும்பிய மகாத்மா ஆமதாபாத் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து ஆசிரமத்துக்குநடந்தேவந்தார் அவருடன் அவர் நண்பர்களின் கூட்டமும் நடந்தே வந்தது.

ரயில்வே ஸ்டேஷனில் அவரைப் பார்த்ததும், அவரைப் பார்க்க வேண்டும் என்று பல நாட்கள் நான் கொண்டிருந்த ஆவல் பூர்த்தியாயிற்று. அதனால் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. ஒரு ஆவல் நிறைவேறிற்று. அடுத்த ஆவலாகிய தேச சேவை என்பது இன்னும் பாக்கி இருக்கிறது. இதை எப்படி நிறை வேற்றுவது? மகாத்மாவுக்கு தொண்டு செய்வதைத் தவிர வேறுவழி இருப்பதாய்த் தெரியவில்லை. ஆகவே தேசத்தொண்டு செய்யும் மகாத்மாவுக்கு தொண்டு செய்வதுதான் தேச சேவை என்று தீர்மானித்தேன். மகாத்மாவின் சுற்றுப் பிரயாணங்களில் அவரோடு போவது என்று விரும்பினேன். இதை மகாத்மாவிடம் தெரிவித்தேன். அவர் ஆட்சேபனை சொல்லவில்லை. ஆனால், ஒரு நிபந்தனை போட்டார். "நீ நன்றாய் ஹிந்தி படித்துக் கொண்டால் உன்னைக்கூட்டிக்கொண்டுபோகிறேன். இல்லாவிட்டால் போகிற இடங்களில் பாஷைக் கஷ்டம் ஏற்படும்." என்று சொன்னார். மூன்று மாதங்களில் படித்து விடலாம் என்று அவரே சொன்னார். அன்றே ஹிந்தி படிக்க ஆரம்பித்தேன். ஆனால் அன்று ஆரம்பித்த ஹிந்திப்படிப்பு இன்று 36 வருஷங்களாகியும்இன்னும் பூர்த்தியாகவில்லை. ஒவ்வொரு ஜெயில் வாசத்திலும் அந்த ஹிந்தி படிப்பிற்கு புத்துயிர் ஏற்படும். வெளியே வந்ததும் மறைந்து போகும். அது வேறு கதை.

எனக்கு ஜுரம் வந்ததை மகாத்மா அறிந்ததும் என்னை அழைத்து விசாரித்தார். நாக்கை நீட்டச் சொன்னார். எதனால் ஜுரம் வந்தது என்பதை அவர் கேட்கவில்லை. கேட்டிருந்தால் மிட்டாய் சாப்பிட்டதை நான் சொல்லி இருப்பேன். அவர் கேட்காததால் நான் சொல்லவும் இல்லை. அன்று பூராவும் பாலைத்தவிர வேறு எதுவும் வேண்டாம் என்று உத்தரவிட்டார். பால் சாப்பிட்டதும் ஜுரம் மறுநாளே போய் விட்டது. ஆகார விஷயத்தில் எனக்குள்ள கஷ்டத்தை அவர் எப்படியோ தெரிந்து கொண்டார். உணவு விஷயங்களில் உள்ள ஆசிரம விதிகள் ரொம்பக்கண்டிப்பாய் அமுல் செய்யப்பட்டு வந்தன. யாருக்காவது விதி விலக்கு வேண்டுமானால் மகாத்மாவின் உத்தரவு வேண்டும். அச்சமயத்தில் பாஞ்சால வாசியான பேர் பெற்ற சுவாமி சத்தியதேவ் ஆசிரமத்தில் தங்கி ஹிந்தி கற்றுக் கொடுத்து வந்தார். அவர் ஒருவருக்குதான் மகாத்மா விதி விலக்குக் கொடுத்திருந்தார். விதி விலக்கு என்றால் பெரிய விருந்துச் சாப்பாடு என்று நினைக்காதீர்கள். அவருக்குக்கொடுக்கும் பருப்பில் ஒரே ஒரு மிளகாயும் போட்டுக் கொடுக்கும் படிஉத்தரவிட்டிருந்தார். ஒரே ஒரு மிளகாய், அவ்வளவுதான். அந்த ஒரு மிளகாய் அவ்வள பிரமாதமாக ஆசிரமத்துக்குள் விளங்கியது. சுவாமி சத்தியதேவுக்கு ஆசிரம உணவு உடம்பிற்கு ஒத்து வராமல் இருந்ததால் இந்த அநுமதியை மகாத்மா கொடுத்தார். இந்தப் பெரிய விதி விலக்கை எனக்கும் கொடுக்கும்படி மகாத்மா உத்தரவிட்டார். ஆனால் இந்த ஒரு மிளகாயினால் என்னுடைய உணவு பிரச்னை தீர்ந்து விடவில்லை.

தேவதாஸ் காந்தி அச்சமயம் அங்கே தான் இருந்தார். ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு வேலை செய்யவேண்டும் என்பது ஆசிரம விதி. அதையொட்டி அவகாசம் கிடைத்த போதெல்லாம் தறியில் நெசவு செய்வார். அவருக்குத் தமிழ் கற்றுக்கொள்ள வேண்டும் என்று விருப்பம் இருந்தபடியால் தினம் சில தமிழ் வார்த்தைகளை நான் அவ

ருக்குச் சொல்லிக் கொடுப்பது என்று ஏற்பாடாயிற்று

அக்காலத்தில் இயக்கங்களோ, பிரச்னைகளோ, பத்திரிகைகளோ அதிகமாய்க்கிடையாது.எனவே ஆசிரம வாசிகள் வாதிக்கக் கூடிய அரசியல் விஷயங்களும் கிடையாது. ஆசிர வாழ்க்கை சுமுகமாய் போய்க் கொண்டிருந்தது. மகாத்மாகாந்தி ஏதோ ஒரு வேலையாகப் பம்பாய்போவதென்று தீர்மானமாயிற்று. மகாத்மாவோடு பம்பாய் போய் ஒன்றிரண்டு நாட்கள் மதராஸி உணவை உண்டு திரும்பி வந்தால் உணவுப் பிரச்னையைச் சமாளிப்பது சுலபமாய் இருக்குமென்று எனக்குத் தோன்றியது. மகாத்மாவோடு நானும் வரலாமா என்று கேட்டேன். அவர் சம்மதித்தார். மகாத்மா அக்காலத்திலும் மூன்றாவது வகுப்பில்தான் பிரயாணம் செய்வார். பம்பாய் போய்ச் சேர்ந்ததும் நான் அவருடைய ஜாகைக்கு அப்பொழுது வரவில்லை என்றும் ஒரு நண்பரைப்பார்த்துவிட்டு அப்புறம் வருவதாகவும் மகாத்மாவிடம் சொன்னேன். மறுநாள் இரவு ஆமதாபாத் புறப்படுவதாகவும் அதற்குள் தம்முடைய ஜாகைக்கு வந்து விடுமாறும் மகாத்மா சொன்னார். சரி என்று சொல்லிவிட்டு நேராக முன்னால் நான் தங்கியிருந்த பிரின்ஸெஸ் தெரு ஹோட்டலுக்குப் போனேன். மதராஸி உணவைச் சாப்பிடும் ஆவலோடு நான் ஹோட்டலுக்குள் நுழைந்ததும் அங்கே ஒரு ஆச்சரியம் எனக்காகக் காத்திருந்தது. அந்த ஆச்சரியம் மீண்டும் நான் சபர்மதி ஆசிரமத்துக்குப் போகாமல் தடுத்து விட்டது.

ஹோட்டலுக்குள் நுழைந்ததும் முந்திய தடவை அதே ஹோட்டலில் தங்கிய போது பழக்கமான நண்பர் ஒருவர் "நல்ல ஆள் ஸார்!" என்றார். எனக்கு விஷயம் புரியவில்லை. "என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டேன். அவர் "இப்படித்தான் வீட்டிலே சொல்லாமல் வருவதா?" என்றார். "அதைப் பற்றி இப்பொழுது என்ன?" என்று கேட்டேன். அவர் விஷயத்தைச் சொன்னார். விஷயம் என்னவென்றால் என்னைத் தேடிக்கொண்டு என் தாயாரே அங்கே வந்து விட்டார். என் தாயாரும் துணைக்கு என் மைத்துனரும் வீட்டுச் சமையல்காரரோடு ஆமதாபாத் போய்ச் சேர்ந்தார்கள். பம்பாயில் அதே ஹோட்டலில் தங்கி விட்டு முதல் நாள் இரவு ஆமதாபாத் புறப்பட்டுப் போனார்கள். அதே இரவில்தான் "நான் ஆமதாபாத்திலிருந்து பம்பாய்க்குப் புறப்பட்டேன். அதனால் இருவரும் சந்திக்க முடியவில்லை.

ஆரம்பத்தில் ஆமதாபாத்துக்கு நான் வந்து சேர்ந்ததும் வீட்டுக்குக் கடிதம் எழுதினேன். அதனால் நான் இருக்கும் இடத்தைத் தெரிந்து கொண்டார்கள். இனிமேல் நானாவது ஊருக்குத் திரும்புவதாவது என்று அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் என் தாயாருக்கு பீதியை உண்டு பண்ணிப் புறப்படும்படி செய்து விட்டார்கள், பம்பாயில் இந்த விஷயத்தைக் கேள்விப் பட்டதும் சபர்மதி ஆசிரமத்துக்குத் திரும்பும் ஆசைபோய் விட்டது. அதனால் மகாத்மாவை அப்புறம் நான் பார்க்கவில்லை. மறுநாள் இரவு மகாத்மா ஆமதாபாத் புறப்பட்டார். அவரை ஆமதாபாத்தில் என் மைத்துனர் சந்தித்தார். விஷயங்களைச் சொல்லி என்னை அழைத்துக்கொண்டு போக அனுமதி கேட்டார். அச்சமயம் மகாத்மா வருத்தப் பட்டாராம். அவர் வருத்தப்பட்டதற்குக் காரணத்தையும் சொன்னாராம். அதாவது சென்னை மாகாணத்திலிருந்து ஆசிரமத்திற்கு யார் வந்தாலும் உணவு வித்தியாசத்தினால் மூன்று மாதங்களுக்கு மேல் தங்குவதில்லையாம், அச்சமயம் சென்னை வாசி ஆசிரமத்தில் யாரும் இல்லையாம். நானாவது தங்கி இருப்பேன் என்று நினைத்தாராம். என்னை அவருடைய சுற்றுப் பிரயாணங்களில் அழைத்துக் கொண்டு போக நினைத்திருந்தாராம். அவ்வளவையும் சொல்லி விட்டுக் கடைசியில் அனுமதி கொடுத்தார். இப்படியாக, மகாத்மாவுக்குச்சேவை செய்யவேண்டும் என்ற என்னுடைய முதல் ஆசை இந்த விதமாக முடிந்தது. அடுத்த மாதம் 'எனது முதல் சந்திப்பு',—பாரதியார்

'பாரதி பிறந்த நாள்' டிசம்பர் 11ந்தேதி வருகிறது. இந்த நாளைத் தமிழ் நாட்டின் தேசியத் திருவிழாவாக நாம் கொண்டாட வேண்டும். கவிஞர்களின் ஜென்ம தினத்தைக் கொண்டாட வேண்டுமென்பதே பாரதியாரின் பெருவிருப்பமாகும்.

பாரதி பிறந்த நாள்

○

வித்வான் மு. சண்முகம் பிள்ளை

பாரதியாரின் நினைவுநாளை நமது நாட்டில் பிரதி வருஷமும் செப்டம்பர் மாதம் 11-ம்தேதி தொடங்கிச் சுமார் ஒரு வாரம் வரையில் கொண்டாடி வருகிறார்கள். 1921-ம் ஆண்டு செப்டம்பர் 11-ம் தேதியன்றுதான் இம்மண்ணுலகி விருந்து பாரதியார் மறைந்தார். 'மானிடர் மரணமில்லாமல் இருக்கக் கூடும்' என்ற விஷயம் குறித்துப் பல இடங்களிலும் பேசிய அந்த மகான் மறைந்துவிட்டார். தமது பாரதி அறுபத்தாறில்,

'பார்மீது நான் சாகா
திருப்பேன், காண்பீர்!'

என்றும் (6)

'நாணத்தைக் கவலையினைச்
சினத்தைப் பொய்யை,
அச்சத்தை வேட்கைதனை
அழித்து விட்டால்
அப்போது சாவுமங்கே
அழிந்து போகும்'

என்றும் (7) மரணத்தை வெல்லும் வழி சொன்ன பெரியோனின் பூதவுடல் மறைந்துவிட்டது. ஆனால், அவர் நம்மிடையே நின்றும் மறைந்துவிடவில்லை. நமக்குத் தேவவடிவிலிருந்து வாழ்வுக்கு வழி காட்டுகிறார்.

'உண்மையான கவிதை அருமையான திரவியம். அதனால் உலகம் க்ஷேமத்தை அடைகிறது. எந்த நாட்டிலே புதிய மஹாகவி தோன்றுகின்றானோ, அந்த நாடு மஹா பாக்கியமுடையது. தமிழ்நாட்டிலே கவிதையின் புகழ் ஏறுக'

(பாரதி நூல்கள் III, பக் .380)

என்று 'கவி'என்ற தலைப்பில் பாரதியார் எழுதுகிறார். பாரதியாரின் கவிதைகளால் நாம் புத்துணர்வு பெற்றுப் புது வாழ்வு அடைந்தோம். அவரும் தமிழ் இலக்கிய உலகிலே,

'ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்த பின்னர் வாராதுபோல வந்த மாமணி'யாய்த் திகழ்கிறார்.

இம்மஹா கவி தோன்றிய நம்நாடு பாக்கியமுடையது என்பதில் தடையென்ன? பாரதியார் நம் தமிழகத்திலே ஒரு புதிய யுகத்தைத் தோற்றுவித்தார்.

சுப்ரமண்ய பாரதியை
நினைத்திட்டாலும்
சுதந்திரத்தின் ஆவேசம்
சுறுக்கென் றேறும்;
இப்ரபஞ்சம் முழுதும் நமக்
கினமாய் எண்ணும்;
'இந்தியன் நான்' என்றிடும் நல்
லிறுமாப் புண்டாம்;
எப்பெரிய காரியமும்
எளிதாய்த் தோன்றும்;
எல்லையற்ற உற்சாகம்
எழுந்து பொங்கும்;
ஒப்பரிய 'தமிழன்' என்ற
உவகை ஊறும்
உள்ளமெலாம் துள்ளியெழும்
ஊக்க முண்டாம்.
(தமிழன் இதயம்)

என்று சுப்பிரமணிய பாரதியாரை நமக்கு அறிமுகப்படுத்துகிறார் அரசவைக் கவிஞர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை. பாரதியாரை எண்ணும்போது, சுதந்திரப், தாய்நாட்டுப்பற்று, தமிழன் என்ற பெருமிதம், தாய்மொழியன்பு, சமத்துவம், சகோதரத்துவம் இந்தியன் என்றதோர் தனிப்பெருஞ் சிறப்பு; இவை யாவும் முன்னணியில் வருவது இயல்புதானே?

பாட்டுக்கொரு புலவன்
பாரதி, அடா-அவன்
பாட்டைப் பண்ணொ டொருவன்
பாடினன், அடா!

என்றும்,

'சொல்லுக்குச் சொல்லழகும்
ஏறுமே, அடா!-கவி
துள்ளும் மறியைப் போலே
துள்ளுமே, அடா!

என்றும்,

'நாட்டு மொழியுமவன்
பாட்டினிசையில்—மிக்க
நல்ல கற்கண்டினிமை
சொட்டுமே,' அடா!

என்றும்,

'உள்ளந் தெளியுமொரு
பாட்டிலே, அடா!-மிக்க
ஊக்கம் பிறக்குமொரு
பாட்டிலே, அடா!
கள்ளின் வெறிகொளுமோர்
பாட்டிலே, அடா!- ஊற்றுய்க்
கண்ணீர் சொரிந்திடுமோர்
பாட்டிலே, அடா!
(மலரும் மாலையும்)

என்றும் பாரதி பாடலைக் கேட்டனுபவித்த ஒரு பட்டிக்காட்டான் வாயிலிருந்து பிறக்கும்படி செய்கிறார் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. பாரதியார் பாடல்கள் கல்லாத சாமானிய மக்களையும் பிணிக்கும் அத்தனை எளிமையும் இனிமையும் வாய்ந்தன; கற்பார் உள்ளத்தைப் பிணித்து மீண்டும் மீண்டும் கற்கவேண்டும் என்னும் ஆவலை எழுப்பவல்லன.

'கவிதைகளில் ஒளி, தெளிவு, குளிர்ந்த நடை மூன்றும் இருக்க வேண்டும் என்பது கம்பனுடைய மதமாகும். இதுவே நியாயமான கொள்கை......'

'காலம் மாறமாற, பாஷை மாறிக் கொண்டு போகிறது; பழைய பதங்கள் மாறிப் புதிய பதங்கள் உண்டாகின்றன. புலவர் அந்தந்தக் கால ஜனங்களுக்குத் தெளிவாகத் தெரியக்கூடிய பதங்களையே வழங்க வேண்டும். அருமையான உள்ளக் காட்சிகளை எளிமைகொண்ட நடையிலே எழுதுவது நல்ல கவிதை'
(பாரதி நூல்கள் II, பக். 71)

என்று கவிதைக்குரிய இயல்புகளைப் 'புனர்ஜன்மம்' என்ற கட்டுரையிலே பாரதியார் குறிப்பிட்டுள்ளார். இந்த இயல்புகளெல்லாம் பாரதியாரின் கவிதைகளில் அமைந்துள்ளமையைக் கற்பார் எளிதின் உணரலாம்.

அடிமை வாழ்விலே அன்றொருநாள் மூழ்கியிருந்த மக்களைத் தட்டி யெழுப்பின பாரதியாரின் தேசீய கீதங்கள். தாய்நாட்டினிடத்தும் தாய்மொழியினிடத்தும் பேரன்புகொள்ளச் செய்தன அவரது உணர்ச்சிக் கவிதைகள். பழம் பாரதத்தை வெறுத்தொதுக்கி புதுமைப் பாரதத்தைச் சிறந்தோங்கச் செய்ய வேண்டும்;கலியுகத்திலே கிருதயுகத்தை நிலைநாட்ட வேண்டும் என்று பற்பல இடங்களிலும் வற்புறுத்திக் கூறுகிறார். பக்தி விஷயமாகவும் ஞான விஷயமாகவும் அவர் பாடிய பாடல்கள் பல. சிறந்த கற்பனை நயம்வாய்ந்த உயரிய பெரும் பாடல்களாகிய கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம் என்னும் முப்பெரும் பாடல்களையும் நமக்கு வழங்கியிருக்கிறார். இனிய தமிழில், கேட்பார், கற்பார் உள்ளங்களை யெல்லாம் கொள்ளை கொள்ளும் தமிழில் அவரது கவிதைகள் உருப்பெற்றுள்ளன. வசனத்திலும் கவிதைபோன்ற உயரிய நடையைக் கையாண்டு வழிகாட்டியுள்ளார். இங்ஙனமாக அரும்

சக்தி

பெரும் தமிழ்ச் செல்வங்களைத் தந்த கவிஞர் பெருமானே யன்றி 'பாரதியார்' என்ற சிறப்புப் பெயர் வேறு யாரைச் சுட்டக் கூடும்?

புதுமைக் கவிஞன் பாரதியை அவர் வாழ்நாளிலேயே தமிழுலகம் நண் குணர்ந்துகொள்ளவில்லை. ஆனல், அவருடன் நெருங்கிய தொடர்புடைய ஸ்ரீ பரலி, சு. நெல்லையப்ப பிள்ளை, வ. வே. சு. ஐயர், வ. உ. சிதம்பரம் பிள்ளை முதலியவர்கள் பாரதியாரின் புலமையை உள்ளபடி உணர்ந்திருந்தார்கள். 1917-ம் ஆண்டு வெளிவந்த பாரதியாரின் கண்ணன் பாட்டு-முதற்பதிப்பின் முகவுரையிலே ஸ்ரீ. பரலி, சு. நெல்லையப்ப பிள்ளை அவர்கள் இக் கவிஞரைக் குறித்து எழுதியவற்றிலிருந்து அவர்கள் பாரதியாரை அந்த நாளில் எவ்வாறு போற்றினர்கள் என்பது வெளியாகிறது.

> 'ஸ்ரீமான் பாரதியார் ஒரு பெரிய மேதாவி; மகா பண்டிதர்; தெய்விகப் புலவர்; ஜீவன் முக்தர். இவர் தமிழ் நாட்டு 'ரவீந்திரர்; இவர் எனது தமிழ் நாட்டின் தவப்பயன்; இவ்வாறு கூறுவதால் யான் எனது நண்பரை மிகுந்த உச்சஸ்தானத்தில் ஏற்றி வைப்பதாக எவரும் கருதவேண்டாம். அவருக்கு யான் கொடுக்கும் உச்சஸ்தானம் நிச்சயமானது. இதனைத் தற்காலத்தில் அறியாதவர்கள் பிற்காலத்தில் அறிவார்கள்'

என்று ஸ்ரீமான் பிள்ளையவர்கள் எழுதியுள்ளார். மேலும், அவர்கள் அம் முன்னுரையில் கூறுவதாவது:

> 'பாரதியாரது பாடல்களின் பெருமையைப்பற்றி யான் விரித்துக் கூறுவதென்றல், இந்த முகவுரை அளவுகடந்து பெரிதாய்விடும். ஒரு வார்த்தை மட்டும் கூறுகிறேன். இந்த ஆசிரியரின் காலத்திற்குப் பின், எத்தனையோ நூற்றாண்டுகளுக்குப் பின், இவர் பாடல்களைத் தமிழ்நாட்டு மாதர்களும், புருஷர்களும் மிகுந்த இன்பத்துடன் படித்துக் களிப்படையும் காட்சியை யான் இப்பொழுதே காண்கின்றேன்.

ஸ்ரீ நெல்லையப்ப பிள்ளையவர்கள் இங்குக் குறித்தபடி தமிழ்நாட்டு மக்கள் பாரதியாரின் பெருமையை உணர்ந்து கொள்ள நூற்றாண்டுகளாகிவிடவில்லை. ஆசிரியரின் காலத்திற்குப்பின் சுமார் முப்பது ஆண்டுகளுக்குள்ளேயே பாரதியாரைத் தமிழ் மக்கள் போற்றத் தொடங்கிவிட்டார்கள். 'தமிழ்நாட்டிலே புதிய கவிதையும் சாஸ்திர ஒளியும் தோன்றும்; உலகம் பார்த்து வியப்படையும்' என்று (பாரதி நூல்கள் III, பக். 73) பாரதியார் 'மறுபிறப்பு' என்னும் தமது கட்டுரையில் குறிப்பிட்டபடி தமிழ்நாடு விழிப்படைந்து எழுந்துவிட்டது என்பதற்கு இங்ஙனம் 'நினைவு நாளைப்'போற்ற முன்வந்துள்ள இச்செயலே சிறந்ததொரு சான்றும்.

> 'தமிழ்நாட்டு வீரருக்கும், கவிகளுக்கும், லோகோபகாரிகளுக்கும் இது வரை எவ்விதமான திருவிழாவையுங் காணவில்லை. பூர்வீக மகான்களின் ஞாபகத்தைத் தீவிரமான பக்தியுடன் வளர்க்காத நாட்டில் புதிய மகான்கள் பிறக்க வழியில்லை. தப்பித் தவறி ஓரிருவர் தோன்றினலும் அவர்களுக்குத் தக்க மதிப்பு இராது. பண்டைக் காலத்து சக்திமான்களை வியப்பதும், அவர்களுடைய தொழிற்பெருமையை உலகறிய முழக்குவதும், கூடியவரை பின்பற்ற முயல்வது மாகிய பழக்கமே இல்லாத ஜனங்கள் புதிய சாமான்களை என்னவகையிலே கணிப்பார்கள்.
>
> (பாரதி நூல்கள், III, பக், 381-382)

என்று 1916-ம் ஆண்டில் எழுதியிருக்கிறர் பாரதியார். இதிலிருந்து அப்பொழுது வீரரையும், கவிகளையும், லோகோபகாரிகளையும் தமிழ்நாட்டில் போற்றிவரவில்லை என்பது தெளிவாகிறதல்லவா? கவிகளையும் வீரரையும் போற்றவேண்டும் என்னும் உணர்ச்சியை நமக்கு ஊட்டிய முதல்வர் பாரதியாரே என்று கொள்ளலாம். ஏனெனில் அது முதலாகப் புலவர் விழாக்கள் கொண்டாடிவரும் வழக்கத்தை நம் நாட்டில் காண்கிறேம்.

இதற்குமுன் நமது நாட்டில் பூர்விக மகான்களைப்போற்றி வரவில்லையா என்ற ஐயம் எழலாம். நமது மூதாதையர் செயற்கருஞ் செயல்கள் செய்த பெரியோர்களைப் போற்றியே வந்திருக்கிறர்கள் என்பதற்கு எண்ணற்ற ஆதாரங்கள் உள்ளன. அந்நியர் ஆட்சிகளால் நம் நாட்டார் சுதந்திரத்தை மறந்து அடிமைகளானபோது, நமது பூர்விகப் பண்பாடுகளில் சிலவும் புதையுண்டுபோயின. மகான்களை மறந்ததெல்லாம் இடைக்காலத்தில் தான்.

பண்டைத் தமிழ்நாட்டில் போர்க்களத்திலே வீரமரணம் எய்திய பெருவீரர்களுக்குக் கல்நாட்டி, அவர் பெயரையும் புகழையும் எழுதி, அக்

கல்லை வணங்கிப் போற்றிவந்தார்கள். இந்த வீரர் வழிபாட்டுச் செய்தியை,

'காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல்,
சீர்த்தகு மரபிற் பெரும்படை, வாழ்த்தல்
[என்று
இருமூன்று மரபிற் கல்லொடு புணர...'

(தொல், பொருள். புறத். 5)

என்ற தொல்காப்பியச் சூத்திரப் பகுதி விளக்குகிறது. பண்டைத் தமிழரின் வாழ்க்கைக் குறிப்புக்கள் பலவற்றை அறிய உதவும் புறநானூற்றிலும் (221) திருக்குறளிலும் (771) இவ்வீரர் வழி பாடு பற்றிய செய்திகள் உள்ளன. சிலப்பதிகார காவியத்திலே கற்புக்கரசி யான கண்ணகிக்குச் சேரன் செங்குட்டு வன் கோவில் அமைத்து வழிபட்ட திலிருந்து, வீரர்களைப்போன்று பத்தி னிப் பெண்களையும் பரவும் வழக்கம் தெரியவரும்.

சைவம், வைணவம், பௌத்தம், ஆருகதம் முதலிய சமயக் கிளர்ச்சிகள் மேலோங்கிய காலத்தில், அந்தந்த மதத் தில் தோன்றி வழிகாட்டிய மகான் களைப் போற்றத் தொடங்கினார்கள். அம் மகான்களின் படிமங்களையும் கோவில்களில் எழுந்தருளச் செய்து வழிபட்டு வந்திருக்கிறார்கள். சைவ சம யாச்சாரியார்களையும் வைணவப் பெரி யார்களையும் கொண்டாடிவரும் வழக் கம் இன்றும் நம்நாட்டில் இருந்துவரு கிறது. சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த இராமலிங்க சுவாமிகளின் படிவத்தை யும் பற்பல இடங்களில் அமைத்து வழி பட்டு வருகிறார்கள்.

சம்பந்தர், மாணிக்கவாசகர், குலசேக ரர், இராமலிங்க சுவாமிகள் முதலி யோரை வழிபடுவது ஒரு வகையில் புலவர் வழிபாடுகளாகவே அமைகின் றன. சமயப் பெரியார்கள் அருளிய அருட் பாடல்கள் நமது மொழிக்குச் சிறந்த இலக்கியங்களாக அமைந்து பக்தி மார்க்கத்தையும் நல்லொழுக்கத்தையும் நமக்குப் போதித்து வருகின்றன. சமயப் பெரியார்களைக் கொண்டாடுவதில் அவர் களது சமயத் தொண்டு ஒன்றே கருதி அவர்களைத் தெய்வமாக வணங்கி வந் தார்களே தவிர, அவர்கள் தந்த இலக்கி யச் செல்வங்களை நினைக்கும் வழக்கம் முன்பு பெரு வழக்காக இல்லை. இப் பொழுது சில ஆண்டுகளாகத்தான் சமயப் பெரியார்களின் அருளிச் செயல் களையும் அவர்களின் பெருநாளில் போற்ற, சமய ஸ்தாபனங்கள் முன் வந் திருக்கின்றன.

சமயப் பெரியார்களைக் கொண்டாடும் போது எல்லா மக்களும் அதில் ஈடுபடுவ தில்லை. அந்தந்தச் சமயத்தார்தான் அவ் விழாக்களில் சிரத்தை கொள்ள இட மேற்படுகிறது. மத பேதங்கள் பாராட்ட இடமில்லாத திருவிழாக்கள் புலவர் பெரு மக்களின் திருவிழாக்கள்தான். திருவள்ளுவர், கம்பர், இளங்கோ, பாரதி இவர்களுடைய நினைவு நாளைக் கொண்டாடும்போது சமயச் சார்பு ஏற் பட இடமில்லை. தமிழ்ப் பெருங்கவிஞர் கள் என்ற முறையில் எல்லா வகுப்பின ரும் இவ்வகை விழாக்களில் கலந்து கொள்ள ஏதுவாகிறது.

இங்ஙனம், 'மத பேதங்கள் பாராட்ட இடமில்லாத திருவிழாக்கள் தமிழ் நாட் டில் அவசியம்' என்பதையும் பாரதியார் 1916-ல் தாம் எழுதிய 'சில கவியரசர் கள்' என்ற கட்டுரையிலே தெரிவித்தி ருக்கிறார். மேலும், அக்கட்டுரையில்,

'அறிவுடையோரையும் லோகோப காரிகளையும், வீரரையும் கொண்டா டாத தேசத்தில் அறிவும், லோகோப காரமும், வீரமும் மங்கிப் போகும். தமிழ் நாட்டில் இப்போது 'புதிய உயிர்' தோன்றி யிருப்பதால், நாம் இவ்விஷயத்தில் தமோகுணம் செலுத் தாமல், கம்பன், இளங்கோ, திருவள் ளுவர் முதலிய மகா கவிகளுக்கு ஞாபகச் சிலைகளும் வருஷோத்ஸவங் களும் ஏற்பாடு செய்ய வேண்டும்.'

(பாரதி நூல்கள் III, பக். 382)

என்றும் எழுதியுள்ளார்.

வள்ளுவர் மயிலாப்பூரிலே பிறந்தார். அங்கே திருவள்ளுவர் கோயில் ஒன்று இன்றும் உள்ளது; கம்பர் திருவழுந் தூரிலே தோன்றினார். இளங்கோ வஞ்சி நகரைச் சார்ந்தவர். இந்த வஞ்சி நகரம் திருச்சி ஜில்லாவிலுள்ள 'கரூர்' என்று ஸ்ரீ. மு. இராகவையங்கார் தீர்மானம் செய்துள்ளார். இம் முப்பெரியார்களும் பிறந்த இடங்களில் அவர்கள் பொருட்டு ஞாபகச் சின்னங்களும் ஏற்படுத்த வேண்டும் என்றும் அக்கட்டுரையிலே பாரதியார் குறிப்பிடுகிறார்.

'மயிலாப்பூரில் திருவள்ளுவர் கோயிலைச் செம்மையாகக் கட்ட வேண்டும். இப்போது ஏழை நிலைமை யிலிருக்கிறது.* திருவழுந்தூரிலும்

---

*தற்பொழுது மயிலைத் திருவள்ளு வர் கோயில் புதுப்பித்துக் கட்டப்ப டிருக்கிறது'

களூரிலும் ஞாபகச் சின்னங்கள் ஏற்படுத்த வேண்டும். ஜன்ம தினங்கள் நிச்சயப்பட வழியில்லை. ஆதலால், ஸரஸ்வதி பூஜைக்கு முன்பு அல்லது பின்பு குறிப்பிட்டதொரு தினத்தில் இந்த மகான்களின் ஞாபகத்தைக் கொண்டாடுதல் பொருத்தமுடைய செய்கையாகும். நவராத்திரி உத்ஸவங்கள் நமக்குள் வழக்கமாக உள்ளதால், அந்த சமயத்தை ஒட்டி நமது மகா கவிகளுக்குத் திருவிழாக் கொண்டாடுதல் சுலபமாக இருக்கும்...'

(பாரதி நூல்கள் III, பக். 383)

பாரதியார் புலவர்களை எவ்வாறு போற்ற வேண்டுமென்று குறிப்பிடுகிறாரோ அந்த வகையில் ஒன்று, பாரதியாரைப் பொறுத்த வரையில் நிறைவேறிவிட்டது. பாரதியார் பிறந்த எட்டயாபுரத்தில் 'பாரதியார் ஞாபகார்த்த மண்டபம்' 1948-ல் தமிழ்ப் பெருமக்கள் எழுப்பிவிட்டார்கள். ஆனால், மற்றொன்றுதான் இன்னும் நடைமுறையில் எல்லோராலும் கைக்கொள்ளப்படவில்லை. பாரதியார் மறைந்த நாளில்தான் தமிழ் நாடெங்கும் விமரிசையாக நினைவுநாள் கொண்டாடுகிறார்கள். கலாநிலையங்களும், பொதுச் சபைகளும் அவரது மறைந்த நாளைக் கொண்டாடுவதில் பேருற்சாகம் காட்டி வருகிறார்கள்.

சமயப் பெரியார்களுடைய மறைந்த நாளில் குருபூஜைகளும் விழாக்களும் இன்னும் நடைபெற்று வருகின்றன. அவர்கள் பிறந்த தினம் தெரியாமையால்தான் அவ்வாறு கொண்டாடிவரும் வழக்கம் ஏற்பட்டது. அதுவும் ஓரளவில் பிதிர்க்கடன் செலுத்துவதுபோல் அமைகின்றது. பெரியார்கள் பிறந்த பூதவுடலை நீத்தாலும் அவர்கள் மறைந்து விட்டார்கள் என்று சொல்ல முடியுமா ?

அதுமுதல் அவர்களது புகழ் பெருகி வளர்ந்து வருகிறதல்லவா? மகான்களுக்கு இறப்பேது? மகான்கள் பிறந்தார்கள்; நம்மோடு எப்பொழுதும் வாழ்ந்து வருகிறார்கள். பின்வரும் சந்ததியார்களுக்கும் வழிவழியாகத் தக்க உறுதுணையாய் நின்று உதவி வருவார்கள். ஆகவே, அவர்கள் மறைந்த நாளுக்கு அத்தனை முக்கியத்துவம் கொடுக்க வேண்டுவதில்லை. அவர் மறைந்தார் என்ற உணர்ச்சியே நமக்கு வரக்கூடாது. கண்ணன் அவதார தினத்தையும், கிறிஸ்து பெருமான் தோன்றிய திருநாளையும், காந்தியடிகளின் ஜயந்தியையும் கொண்டாடி வருகிற நாம், அமர கவிஞன் பாரதியின் பிறந்த நாள் தெரியும்போது ஏன் அந்தப் பெருநாளைப் போற்றக் கூடாது? பாரதி பிறந்த நாளைத் தமிழ் நாட்டில் தேசியத் திருவிழாவாகக் கொண்டாட வேண்டுவது அவசியமல்லவா? பாரதியார் பிறந்த பெருநாளைக் கொண்டாடினால்தான் புலவர்களைப் போற்றும் வகையில் அவர் காட்டிய வழியை நாம் முற்றுப் பெறச் செய்தவர்களாவோம்.

'மஹான்கள் கவிகளாயினும், சாஸ்திரக்காரராயினும், வேறு எவ்வகையிலே தேசத்துக்கு உபகாரம் செய்திருந்த போதிலும், அவருடைய **ஜன்ம தினத்தைக் கொண்டாடி,** சபைகள் நடத்தி ஆராய்ச்சிகள் செய்வது தேசத்தின் அறிவு வளர்ச்சிக்குப் பெருந்துணையாகும்'

(பாரதி தமிழ்-பக். 121)

என்பது பாரதியார் வாக்கு

பாரதியாரின் பிறந்த நாள் கார்த்திகை மாதம் மூல நட்சத்திரம். அவர் பிறந்த 1882-ம் வருஷக் கணக்கையொட்டி ஆங்கில ஆண்டில் சொல்லப்போனால் டிஸம்பர் மாதம் 11-ம் தேதியாகும். இந்த ஆண்டு டிஸம்பர் மாதம் 8-ம் தேதி கார்த்திகை மூலத் திருநாள் வருகிறது. இந்த நாளையோ அல்லது டிஸம்பர் 11-ம் தேதியையோ பாரதியார் நினைவு நாளாகக் கொண்டு பெரு விழாக் கொண்டாட வேண்டுவது நமது பெருங் கடமையல்லவா?

கண்ணன் பிறந்தான்—எங்கள்
கண்ணன் பிறந்தான் —

என்று கண்ணன் பிறந்த பெரு நாளை நினைத்து எக்களிப்போடு பாடுகிறார் பாரதியார். அதுபோலவே நாமும் இன்று,

பாரதி பிறந்தான்—எங்கள்
பாரதி பிறந்தான்—இந்தப்
பாரெங்கு மேயவன் புகழ் பரப்பிடுவோம்;
பாரதம் வகுத்தான்—நவ
பாரதம் வகுத்தான்—உயர்
தமிழ் தழைக்க இத் தாரணி வந்தனன்

(—பாரதி பிறந்தான்)

என்று பாரதியாரின் புகழைப் போற்றுவோமாக. ★

சென்னையில் ஒரு அதிசயம். போலீஸ்காரன் உதவியில்லாமலேயே வண்டிகள் ஒழுங்காக ஓடுகின்றன, இந்த அதிசயத்தை ஆராய்கிறது இந்த சயன்ஸ் கட்டுரை.

எழும்பூர் நாற்சந்தியில்

நா. கி. நாகராசன்

●

எழும்பூரில், நான்கு முக்கியமான பாதைகள் கூடு மிடத்தில், போலீஸ் காரரது உதவியின்றித் தானாகவே இயங்கி அந்தப் பாதைகளில் செல் லும் வண்டிகளின் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தும் நவீன சாதனம் ஒன்று அண்மையில் அமைக்கப்பட் டது. அது எவ்வாறு இயங்குகிறது என்று, என் விஞ்ஞானக் கட்டுரை களைப் படிக்கும் அன்பரொருவர் எனக்கு எழுதிக் கேட்டிருக்கிறார். இந்த அன்பரது கடிதம் எனக்கு மகிழ்ச்சி தந்தது. நம்மைச் சுற்றி யுள்ள பொருள்களையும், காட்சி களையும் பற்றித் தெரிந்து கொள் ளும் ஆர்வம் நம்மவருக்கு மிகக் குறைவு. தற் கால நாகரிக முன் னேற்றத்தின் விளைவாகத்தோன் றியுள்ள பல சாத னங்களின் இயக் கத்தைப் பூரண மாகஅறிய, அடிப் படையான விஞ் ஞானம் ஓரளவே னும் தெரிந்திருக்க வேண்டும் என் பது உண்மையே. ஆனால் அன்றாட வாழ்கையில் நாம் பார்க்கும் பலவற் றைப்பற்றிப் பொ துவாகஅறியஇந்த அறிவு இன்றியமையாததன்று. ஆகை யால் இவற்றைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற அவா இருப்பது மிகவும் வரவேற்கத் தக்கது.

எனக்குக் கடித மெழுதிய அன்பர் குறிப்பிட்டிருக்கும் 'தானியங்கிப் போலீஸ்காரனை' நான் நேரில் பார்க்க வில்லை. ஆகையால் அது எந்த முறை யில் இயங்குகிறது என்று நிச்சய மாகச் சொல்வதற்கில்லை. மேனாடு களில் பல ஆண்டுகளாகவே போக்கு வரத்தைக் கட்டுப்படுத்தும் விளக்குக் களைப் பெரிய தெருக்கள் கூடுமிடங் களில் அமைத்து வந்திருக்கிறார்கள். இதற்கெனப் பயனாகும் முறைகளில் ஒன்று தற்காலத்தில் மிகப் பொது வாக வழங்குகி றது. எளியமுறை யிலிருந்து தொட ங்கி, அதிகமாக வழங்கும் முறை வரை எல்லாவற் றையும் விளக்க முயல்கிறேன்.



முதன் முதல் அமைக்கப்பட்ட போக்குவரத்துக் கட்டுப்பாட்டுச் சாதனத்தில், பெரிய தெரு ஒன்றில் வந்து கூடும்சிறிய தெரு வின் இணைப்பில்,

பச்சை, சிவப்பு நிற விளக்குகள் இருக்கும். இவை தக்க விசைகளுடன் இணைக்கப்பட்டிருக்கும். இந்த விசைகள் ஒரு கடிகாரத்துடன் இணைந்திருக்கும். கடிகாரம் ஓடும்போது, சில நிமிஷ நேரம் பெரிய தெருவில் பச்சை விளக்கும், சிறிய தெருவில் சிவப்பு விளக்கும் எரியும். இப்போது பெரிய தெருவில் வண்டிகள் தடையின்றிச் செல்லலாம்; சிறிய தெருவிலுள்ள வண்டிகள் பெரியதை அடைய முடியாது. குறிப்பிட்ட நேரம் கழிந்தவுடன், கடிகாரம் விசைகளை மாற்றியமைத்துவிடும். இப்போது விளக்குகளின் நிறம் மாறி, சிறிய தெருவில் பச்சை விளக்கும், பெரியதில் சிவப்பு விளக்கும் எரியும். இதனால் சிறிய தெருவில் உள்ள வண்டிகள் ஆபத்தின்றிப் பெரியதை அடையலாம். இவ்வகையில் விளக்குகள் மாறி மாறி எரிந்து போக்குவரத்தைக் கட்டுப்படுத்துகின்றன. ஆனால் தெருக்களில் செல்லும் வண்டிகளின் அளவு ஒரே மாதிரியாக இருப்பதில்லை. சில வேளைகளில் ஒரு தெருவில் வண்டிப் போக்குவரத்து அதிகமாகவும், வேறு சில சமயங்களில் குறைவாகவும் இருக்கும். தவிர, எதிர்பாராத வகையில், சில சமயங்களில் தெருக்களில் வண்டிப் போக்குவரத்து மிகுதியாக ஏற்படக் கூடும். இத்தகைய மாறுதல்களுக்கேற்றவாறு விசைகளைச் சரிப்படுத்திப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவது எளிதல்ல.

இன்னொரு முறையில், ஒளி மின் கடம் என்ற சாதனம் பயன்படுகிறது. தொலைக் காட்சி (Television) என்ற அற்புதத்திலிருந்து, தாமாகத் திறக்கும் ஓட்டல் கதவுகள் வரை, ஆயிரவகையில் தற்கால நாகரிகச் சாதனங்களில் பயன்படும் ஒளிமின் கடத்தை (Photo-Electric-Cell) மின்சாரக் கண்' என்றும் அழைப்பதுண்டு. பொட்டாஸியம் போன்ற சில உலோகப் பொருள்களின் மேல் ஒளி விழுந்தால் சிறு மின்னோட்டம் ஒன்று நிகழ்கிறது. இந்த மின்சாரத்தை வலிவாக்கிப் பல வேலைகள் செய்யப் பயன்படுத்துகிறார்கள். இதுவே ஒலி மின் கடத்தின் தத்துவம். இதைப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டுச் சாதனத்தில் எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்று மட்டும் பார்ப்போம். பல தெருக்கள் கூடுமிடத்தில் ஒரு பாதையின் ஒரு பக்கத்தில், சிறு விளக்கொன்று தரைமட்டத்திற்குச் சுமார் இரண்டடி உயரத்தில் அமைக்கப்பட்டிருக்கும். இது பாதையின் குறுக்கே மெல்லிய ஒளிக்கற்றையொன்றை வீசும். இந்த ஒளி எதிர்புறத்தில் அமைக்கப்படும் ஒளிமின் கடம் ஒன்றை அடைந்து அதில் மின்னோட்டத்தைத் தொடர்ந்து தோற்றி வரும். பாதையில் வண்டியொன்று வந்தால் அது ஒளிக் கற்றையைத் தடை செய்யும். ஒளி தடைப்படுவதனால் ஒளிமின் கடத்தில் தோன்றும் மின்னோட்டம் நிற்கும். இந்த மாறுதலினால் சில விசைகள் இயங்கி விளக்குகளை மாற்றி, அந்த வண்டி கடந்து செல்ல வேண்டிய பாதையில் சிவப்பு விளக்குகளை ஏற்றி அதற்குக் குறுக்கே வரும் வண்டிகளை நிறுத்தும். வண்டி சென்ற சிறிது நேரத்திற்குப்பின் விளக்குகள் பழையபடி மாறிவிடும். பாதசாரிகள் தெருக்களைக் கடந்து செல்லும் இடங்களிலும் இத்தகைய சாதனத்தால் பாதையில் ஒரு மனிதன் இருக்கும்போது அதில் வண்டிகள் வராது தடை செய்யலாம். இந்த முறை முதலாவதைவிடச் சிறந்தது. ஆனால் இதிலும் பல அசௌகரியங்கள் உள்ளன. ஆகையால் இதுவும் அவ்வளவாகப் பயன்படுவதில்லை.

அதிகமாக வழங்கிவரும் முறையில், போலீஸ்காரர் நின்றுகொண்டு போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவதைவிட இன்னும் அதிகமான திறமையுடன் இயங்கும் சாதனங்கள் அமைக்கப்படுகின்றன. மழை, வெண்பனி (Snow), மூடு பனி முதலிய வானிலை விளைவுகளாலும் இது பாதிக்கப்படுவதில்லை. இம் முறையில், சந்தியில் சேரும் பாதைகள் ஒவ்வொன்றிலும், சில கஜ தூரத்திற்கு முன், பாதையின் குறுக்கே பட்டையான தகடு ஒன்று பாதையின் மட்டத்திற்குமேல் சிறிது மேலே எழும்பியிருக்குமாறு அமைந்திருக்கும். வண்டியின் சக்கரங்கள் இத்தகட்டைக் கடந்து செல்லும்போது

அத்தகடு சிறிது அழுந்தும். இதனல் மின்சார விசைகள் இயங்கி விளக்கு கள் எரிவது கட்டுப்படுத்தப்படுகிறது. இச்சாதனத்தின் தத்துவம் இதுதான் என்ருலும், இது மிகச் சிக்கலான அமைப்புள்ளது. மாட்டு வண்டி அல்லது கை வண்டியைப் போல் மெதுவாகச் செல்லும் வண்டிகள் பாதையில் வந்தால் அதற்கேற்றவாறு இது இயங்கி விரைவான போக்குவரத் தினல் அதற்கு ஆபத்து நேராமல் பாதுகாக்கும். மிக நெருக்கமாகப் பல வண்டிகள் ஒன்றன்பின் ஒன்ருக ஒரு தெருவில் வந்து கொண்டிருக்கும் போது இன்னெரு தெருவில் வரும் வண்டியினல் விளக்குகள் மாறி திடீ ரென்று முதல் பாதையிலுள்ள வண்டி களை நிறுத்துவதால் ஆபத்து நேரலாம். இத்தகைய தவறு நேராது தடுக்கவும் தற்செயலாக வேறு விபத்துக்கள் நேராமல் பாதுகாக்கவும் பல சாதனங் கள் இதில் உள்ளன. ஆகையால் இத்தகைய 'தானியங்கிபோலீஸ்காரன்' சந்தர்ப்பத்தை உணர்ந்தறிந்து அதற் கேற்றவாறு பணி செய்யும் திற னுள்ளது எனலாம். போலீஸ்காரரும் மனிதர் தானே! அவர் களைத்துவிட லாம்; கோபங் கொள்ளலாம்; கவனக் குறைவால் சிறு தவறுகளும் செய்ய லாம். ஆனல் இச்சாதனமோ நாள் முழுதும் சலிப்பின்றித் தனது வேலையைச் செய்யவல்லது. சம்பள உயர்வோ, வேறு சலுகைகளோ கோரி இது வேலைநிறுத்தம் செய்து விடுமோ என்றும் அஞ்ச வேண்டிய தில்லை! ★

உங்களுக்குக் கிடைக்கிறதா?

★

உங்கள் ஊர் பத்திரிகைக் கடை களில் 'சக்தி' கிடைக்கிறதா? கிடைக்கவில்லையானல் வருட சந்தா ரூ. மூன்று அனுப்புங்கள். தவருது 'சக்தி' கிடைக்க சந்தா அனுப்பிப் பெறுவதுதான் நல்ல முறை.

★

சக்தி காரியாலயம், சென்னை-14

சிலை விழிக்கிறது

○

கிருஷ்ண சந்தர்

எந்தக் கதையை இன்று நான் உங்களுக்குச் சொல்கிறேனே அந்தக் கதை நேற்றுவரை நடைபெறவில்லை. நேற்றிரவு இரண்டு மணி வரையிலும்கூட இக்கதை உதயமாவதற்கான அறிகுறி எதுவும் இல்லை. நேற்றிரவு இரண்டு மணிவரை யோசித்து யோசித்துக் களைத்தும், கதை எழுத வராததால் நான் இம்முயற்சியில் லயித்த வண்ணம் சௌபாத்திப் பக்கமாகக்கிளம்பினேன்.

அந்தச் சமயம் அங்கு அதிசயமான அமைதி நிலவியது. சமுத்திர இரைச்சல் மிகவும் கம்மியாக இருந்தது. அதுவும் அடிவானத்தின் ஆழத்தினின்று எழுந்து மத்திம சுருதியில் ஒலிக்கும் அழுகை மாதிரிக் கேட்டது. கரையில் படிந்திருந்த சிறு மணற்பரப்பு லட்சக்கணக்கான பாதங்களின் மிதியை இதயத்தில் ஏற்ற வேதனையில் மெதுவாக முனகிக் கொண்டிருந்தது. சுற்றுப்புறம் முழுவதும் ஒருவித அதிசயச் சோகத்தின் சாயை, சோர்வின் அடையாளம் படர்ந்திருந்தது. நான் இந்த அபூர்வச் சூழலின் சோக நிலையை உணர்ந்தவாறே முன்னேறிக் கொண்டிருந்தேன். திடீரென என் காதில் ஒரு குரல் ஒலித்தது.

"திலகர் பகவானே!"

திடுக்கிட்ட நான் எதிரே பார்த்தேன். திலகமகாராஜாவின்சிலை ஒருவித அதிசய கம்பீரமும், பெருமையும் துலங்க, தலை

கிருஷ்ணசந்தர் இன்றைய உருது எழுத்தாளர்களிலேயே தலை சிறந்து விளங்குகிறார். இவர் ஒரு முற்போக்குவாதி—இவரது எழுத்துக்கள் உலகின் பல மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. இச்சிறு கதையே இவரது எழுத்தின் வேகத்துக்கோர் எடுத்துக் காட்டு. இந்த அருமையான கதையைத் தமிழில் தருபவர் ஸ்ரீ. அசோகன்.

யில் தூசு படிந்து, சூழ்நிலையில் பார்வை பதித்த வண்ணம் நின்றது. அதனருகில் ஒரு நிழலுருவம் அசைவதைக் கண்டேன். அவ்வுருவத்தின் முகத்தைத் தெளிவாகப் பார்க்க முடியவில்லை, முதுகு என்னைப் பார்க்க இருந்ததால். ஆனால் நிச்சயமாக இதைத் தெரிந்துக் கொண்டேன். அந்த ஆசாமி நடுத்தர வயதினன். குள்ள உருவினன். கோதுமை நிறத்தவன். ஒரு மராட்டியன். அவனது சட்டையும் வேஷ்டியும் சில இடங்களில் கிழிந்திருந்தன. அவன் கால்களில் செருப்பில்லை. பாதங்களில் ஆழமான வெடிப்புகள் காணப்பட்டன. அவனைப் பார்த்ததும் நான் அந்த இடத்திலேயே சற்று நின்றுவிட்டேன். அவனுடைய வார்த்தைகளைக் கேட்பதற்காக அங்கேயே—அந்த மணற் பரப்பிலேயே—சாய்ந்து படுத்துவிட்டேன். என்னை அவன் பார்த்துவிட்டாலும், நான் தூங்க வந்த ஆசாமி, அவனது வார்த்தைகளைக் கேட்க வந்தவனில்லை என்று எண்ணிக்கொள்ளட்டும் என்ற அபிப்பிராயம்.

'திலகர் பகவானே!' அந்த மனிதன் திரும்பும் அழைத்தான்.

திலக பகவானின் சிலை பேசிற்று: 'விவரமாய்ச் சொல். என்ன சொல்கிறாய் நீ?'

எங்காவது பளிங்குச் சிலை பேசுமா என்ற ஆச்சர்யம் உங்களுக்கு ஒருவேளை ஏற்படக்கூடும். பிரதி அமாவாசைதினத்தன்றும், நாலா பக்கமும் கனத்த அந்தகாரம் கவிழ்ந்து தொங்கும்பொழுது, நிச்சலனமான நடுநிசி வேளையில் சிலைகள் விழிப்படைகின்றன; விழிப்படைவது மட்டுமல்ல, பேசவும் செய்கின்றன என்கிற விஷயம் உங்களுக்கு ஒருவேளை தெரியாமலிருக்கலாம். ஆனால் அவைகளை யாராவது அழைத்து, அவற்றிடம் சில விஷயங்களை வினவினால் அவை அவ்வினாக்களுக்குப் பதில்கூடச் சொல்கின்றன. ஒரு வேளை உங்களுக்கு இந்த விவரம் தெரியாமலிருக்கலாம். ஆனால் எனக்கு வெகு நாட்களாகத் தெரியும். இருந்தும் நான் ஒரு பொழுதும் சிலைகளுடன் சம்பாஷித்ததில்லை. முதலில் அன்றாட உலக விவகாரங்களுக்கிடையே மனிதனுக்கு இராத்திரி இரண்டு மணிக்குச் சிலைகளோடு பேசப் போவதற்கு அவகாசம் கிடைப்பதில்லை. மேலும், பம்பாயில் எத்தனை சிலைகள் உள்ளனவோ அத்தனையும் படே படே ஆசாமிகளுடைய சிலைகள். இவ்வளவு உயர்ந்தவர்களோடு எப்படி அன்பாகப் பேசி உறவு கொண்டாடுவது என்று மனிதனை யோசிக்கச் செய்யும் அந்தஸ்து உள்ளவைகள். எந்த வார்த்தை கண்ணியக் குறைவானதோ, யாரே கண்டது? தவிர நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னால் வேறொரு பயம் இருந்தது. இந்த மனுஷன் பால கங்காதர திலகருடைய சிலையோடு பேசிக் கொண்டிருந்தான். பிரிட்டிஷ் அதிகாரத்திற்கெதிராக இன்னும் என்னென்ன சதிகள் செய்கிறானோ தெரிவில்லை என்று சொல்லி இரகசியப் போலீஸார் எங்கே குற்றம் சாட்டிக் கைது செய்துவிடப் போகிறார்களோ என்ற பயம். ஆனால் இந்தக் காலத்திலோ! போலீஸ் அதிகாரிகள் எங்கே சுதந்திர சர்க்காருக்கு எதிராக 'தேசத் தலைவர் பாலகங்காதர திலகரையே திருப்பிவிடப் பார்க்கிறான் பார் இவன் என்று சொல்லிப் பிடித்துக் கொள்வார்களோ என்ற அச்சம். இந்த விஷயங்களை யெல்லாம் யோசித்து நான் இன்று வரை எந்தப் பெரிய தலைவருடைய சிலையோடும் சம்பாஷித்ததில்லை. என்னுடைய உலாவுதல்களின்போது எவ்வளவோ இரவுகள் வந்திருக்கின்றன, போயிருக்கின்றன. நான் மௌனமாகவே நடந்து திரும்பிவிடுவேன். இன்று, என்னுடைய வாழ்நாளிலேயே முதன் முதலாக, யாரோ சிங்கம்போல திலக பகவானுடைய சிலையுடன் வார்த்தையாடுவதைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிட்டியது. நன்றாகவும், மனது திருப்தியடையும் வரையும் அந்தப் பேச்சைக் கேட்க வேண்டும் என்று மணலில் படுத்தவாறே முன்னால் நகர்ந்து சென்றேன்.

மராட்டியன் சொல்லிக் கொண்டிருந்தான்: "என் பெயர் உத்தம ராவ் காண்டேகர். பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் பிறந்தேன்."

"நானும்கூட அந்தக் காலத்தில்தான் பிறந்தேன்" என்றார் திலகர்.

"நான் பூனா நகரில் ஒரு பள்ளிக்கூடத்தில் வாத்தியாராக இருந்தேன். எனக்குச் சரித்திரம் என்றால் மிகவும் பிரியம்" என்றான் காண்டேகர்.

"எனக்கும்கூட சரித்திரத்தில் பிரியம் அதிகம்தான்" என்றார் திலக் மகாராஜ்.

"சுதந்திரம் நமது பிறப்புரிமை என்று என்றைய தினம் நீங்கள் கோஷம் எழுப்பினீர்களோ அன்றைய தினம் நான் பள்ளிக்கூட வாத்தியாராக இருந்தேன். நான் நீங்கள் எழுதியுள்ள சகல புத்தகங்களையும் வாசித்திருக்கிறேன். உங்களுடைய பிரசங்கங்கள் பலவற்றைக் கேட்டிருக்கிறேன். சிறுவர்களுக்குச்

சரித்திரப் பாடம் கற்பித்து வந்தேன் நான். சரித்திரம் சொல்லிக் கொடுக்கக் கொடுக்க என் மனதில் நவநவமான ஆசைகள் உதித்தன. அற்புதமான—அதிசயமான—கற்பனைகள் என் மூளையில் தோன்றின. சரித்திரப் பாடங்களை முற்றிலும் புதிய கண்ணோட்டத்தோடு கற்பிக்கத் தொடங்கினேன். இப்படிப் பாடம் சொல்லிக் கொடுத்துப் புரட்சிகள் பற்றிய பாடங்களுக்கு வந்ததும்...”

“வந்ததும் என்ன?” என்று வினவினார் திலகர்.

“எனக்குப் பள்ளிக்கூடத்திலிருந்து சீட்டுக் கொடுத்துவிட்டார்கள். மேல் உத்தியோகஸ்தர்கள் புரட்சி வெறும் கலகம்தான் என்றும் தேச விடுதலைக்கான இயக்கம் அல்ல என்றும் அபிப்பிராயப்பட்டார்கள். அதனால் அவர்களுக்கு நான் பொய்யனாய்ப்போனேன். பாலகர்களுடைய ஆசார அனுஷ்டானங்களைக் குலைக்கத் திட்டமிடும் சதிகாரனாகி விட்டேன். தேச அரசாங்கத்திற்கு எதிராக வெறுப்பை விளைவிப்பவனாகி விட்டேன். இதனால் நான் பள்ளிக்கூடத்திலிருந்து வெளியேற்றப்பட்டேன். என் பிழைப்பில் மண்ணைப் போட்டுக்கொண்டேன்.”

“பிறகு நீ என்ன செய்தாய்?” என வினவினார் திலக பகவான்.

“திரும்ப வேலை தேடித் தெருத் தெருவாய்த் திரிந்தேன். ஒவ்வொரு வாசற்படியாக ஏறி இறங்கினேன். தேச பக்திக்குச் சன்மானமாக தின்ன ரொட்டி கூடவா கிடையாது போய்விடும் என்ற நம்பிக்கை! ஆனால் பலன் ஒன்றும் விளையவில்லை. இதற்காக யாரையும் குறைகூறிப் பயனில்லை. சர்க்கார் பற்றிய கிலி இவ்வளவு தூரம் மக்களிடையே பரவியிருந்தது. அதனால் எனக்கு உதவ யாரும் தயாராக இல்லை. உடனே நான் தேச விடுதலை இயக்கத்தில் மும்முரமாகப் பங்குகொள்ளத் தொடங்கினேன். என் மனைவி பெண்கள் பாடசாலை ஒன்றில் வேலை பார்த்து வந்தாள். ஆனால் முதன் முறையாக நான் கைது செய்யப்பட்ட உடனேயே அவள் வேலை போய்விட்டது. எங்களுக்கு இரண்டு குழந்தைகள். பசியால் அவை அழுத ஓலம் அதிகமாயிற்று. என் மனைவி அவளது தாயார் வீட்டிற்குப் புறப்பட்டுப் போனாள். அங்கே அந்தக் கிராமத்துத் தலைமைக்காரன் அவளுடைய அப்பா அம்மாவிடம் அவளுக்கு அங்கு தங்க இடம் கொடுத்தால், அவர்களையும் ஜெயிலுக்கு இழுத்துப் போய் விடுவார்கள் என்று சொல்லி அவளை வெளியே அனுப்பும்படி செய்துவிட்டான். வீட்டைவிட்டு வெளியே விரட்டப்பட்ட என் மனைவிக்கு பிழைப்பிற்கு ஒரு வழியும் புலப்படவில்லை. அவள் ஒரு வேசியாக மாறி வயிறு கழுவியிருக்க முடியும். ஆனால் அவளது ஆத்மா அதற்கு அனுமதிக்கவில்லை. எனவே அவள் ஆற்றில் விழுந்து உயிரைவிட்டாள். நான் ஜெயிலிலிருந்து விடுதலையடைந்தபொழுது எனக்கு எந்தவிதமான பந்தமுமில்லை. குடும்பச் சுமை எதுவும் கிடையாது. மிகவும் தீவிரமாக விவசாயிகளிடையே வேலை செய்யத் தொடங்கினேன். வரி கொடுக்கக் கூடாது என்ற இயக்கம் தொடங்கியபொழுது நான் சந்தன்வாடிக் கிராமத்தில் இந்த இயக்கத்தை நடத்திக் கொண்டிருந்தேன். முதலில் கிராமாதிகாரிகள், பின்பு போலீஸ், அதன் பிறகு பட்டாளம் என்று எல்லோரும் வந்தார்கள். வரி வசூலிக்க முயன்றார்கள். ஆனால் நான் கிராம வாசிகளை வரி கொடுக்க வேண்டாம் என்றேன். இதற்காக என்னைத் துப்பாக்கிக் கொண்டு சுட்டார்கள். நான் செத்துப் போனேன். இதோ இந்த அடையாளத்தைப் பாருங்கள். என் தேகத்தில் குறைந்த பட்சம் இருபது குண்டுகளாவது பாய்ந்த அடையாளம் இருக்கும்!”

“கேட்க மிகவும் துயரமாக இருக்கிறது. உன் பெயர் என்னவென்று சொன்னாய்?” என்றார் திலகர்.

“உத்தமராவ் காண்டேகர்.”

“இந்தப் பெயரை ஒரு போதும் கேள்விப்பட்டதில்லையே!”

காண்டேகர் பதில் சொன்னான்: “என் பெயர் எவருக்கும் தெரியாது. என் மனைவி—ஆற்றில் விழுந்து உயிர் துறந்தாளே—அவள் பெயரும் யாருக்கும் தெரியாது. பட்டினி கிடந்து கிடந்து உயிரை விட்டனவே என் இரு குழந்தைகள்—அந்தக் குழந்தைகளுடைய பெயரும் யாருக்கும் தெரியாது. பட்டாபிசீதாராமய்யா எழுதியிருக்கிறாரே காங்கிரஸ் சரித்திரம், அதில்கூட, எங்கள் பெயர் எந்த இடத்திலும் தட்டுப்படாது. இப்பொழுது எங்கள் பெயர் எங்கும் இல்லை. பூனா வாசிகள், கிராமத்துக்காரர்கள், மகாராஷ்டிர வாசிகள், அனைவருமே என்னை மறந்துவிட்டார்கள்.”

“இப்பொழுது உனது கஷ்டம் என்ன?”—திலக மகாராஜா வினவினார்.

"கஷ்டம் எதுவுமில்லை. ஒரு விருப்பம். அதைப் பூர்த்தி செய்து கொள்ளத்தான் தங்களிடம் வந்திருக்கிறேன்."

திலக மகாராஜா சொன்னார்: "நான் என்ன செய்ய முடியும்? நானே கல்லாலான சிலை!'

"நானும் அது மாதிரியாகிவிட்டால் போதும், ஒரு கற்சிலையாக. மரணமடைந்த நாள் முதலாக இன்று வரை நிம்மதியில்லாமல் அலைந்து கொண்டிருக்கிறேன். இப்பொது தங்களைப்போலவே ஒரு கற்சிலையாகிவிட்டால் தேவலை என்று தோன்றுகிறது" என்றான் காண்டேகர்.

இப்பொழுது நான் அந்த நிழலுருவம் சிலையை யொட்டியுள்ள பீடத்தின்மீது ஏறத் தொடங்குவதைக் கண்டேன்.

"என்ன சொல்கிறாய்?" என்றார் திலக் மகாராஜ்,

,'நானும் தங்களருகே நிற்க விரும்புகிறேன். எனக்கு இளைப்பாற மட்டும் கொஞ்சம் இடம். தங்கள் காலடியில் நின்று கொள்கிறேன். உயிர் வாழ்ந்த போது தாங்கள் காட்டிய பாதையில் நடந்தேன். மரணத்திற்குப் பின் ஆத்ம பந்தம் அறுந்துவிடுமா என்ன?" என்றான் காண்டேகர்.

திலக மகாராஜா சொன்னார்: "கூடாது தம்பி! இந்த விஷயம் கூடாது. உண்மையில் இந்த இடம் என்னுடையது. இந்தப் பீடம் என்னுடையது. சிலை என்னுடையது."

"அப்படியானால் எனக்கு இடம் எங்கே? சரித்திரத்தில் எனக்கு இடமில்லை. சௌபாத்தி கடற்கரையில் இல்லை. மக்களுடைய மனதில் இல்லை. நான் எங்கே போவது?" எனக் கேட்டான் காண்டேகர்.

"முனிசிபல் கார்ப்பரேஷனிடம் போ. அவர்கள் உனக்காக ஒரு சிலை செய்து நிறுத்தலாம்" என்றார் திலகர்.

"ஆனால் அவர்கள் மனிதர்களாயிற்றே! இந்த நாட்களில் மனிதர்களுக்கு ஆத்மாவின் பேச்சு எங்கே கேட்கப் போகிறது?" எனப் பதிலளித்தான் காண்டேகர்.

"உண்மையாகவே சொல்கிறேன். போய்விடு. அதுவும் சீக்கிரமாகவே போய்விடு. அதோ ஒரு போலீஸ்காரனுடைய ஆவி வருகிறது. உன்னைக் கைது செய்துவிடப் போகிறது. சொல்வதைக் கேள். உன் சிலைக்கு வேறு நல்ல இடமாகப் பார். இங்கு வேண்டாம். என் காலடியில் மணல். தலைக்கு மேலே திறந்த வெளி. வெயிலெல்லாம் தலை மேல்தான். மண்டை வெடித்துப்போகிறது. உடம்பெல்லாம் பொடிந்து போகிறது. பகல் நேரம் முழுவதும் தமாஷாக்களின் ஆரவாரம். மூர்க்கர்கள் தயிர்வடையைத் தின்றுவிட்டு மிஞ்சும் தயிரையும் இலையையும் என் பக்கமாக வீசியெறிந்துவிட்டுப் போகிறார்கள். உன்னுடைய சிலைக்கு இதைவிட நல்ல இடமாகப் பார்."

ஆனால் அந்த நிழலுருவம் போலீஸிற்குப் பயந்து மறைந்துவிட்டது. நானும் கூட சீக்கிரமாக எழுந்து அங்கிருந்து ஓட்டமாக ஓடினேன். ஓடிஓடி சர்ச்கேட் ஸ்டேஷன் வரை வந்துவிட்டேன், அங்கு வந்துதான் மெதுவாக நடக்கத் தொடங்கினேன். நடந்து நடந்து ஹாக்கி கிரௌண்ட் சமீபமாக வந்து சேர்ந்ததும் ஒரு ஆலமரத்தடியில் கொஞ்சம் இளைப்பாறித் தெம்பு பெறுவதற்காக நின்றேன். இதற்கிடையில் என் காதில் யாரோ, "கோகலே மகாராஜ்!!' என அழைப்பது கேட்டது.

நான் திரும்பிப் பார்த்தேன். எதிரே ஒரு பீடத்தின் மீது கோகலே மகாராஜின் சிலை கோட்டும் ஸூட்டும் அணிந்து நின்றது. கோட்டும், காற்சட்டையும் அணிந்த ஒருவன் பீடத்தின்மீது ஏற முயற்சித்துக் கொண்டிருந்தான். பிளாட்பாரத்தைக் கடந்து மேலே தொத்த முயல்கையில் கோபால கிருஷ்ண கோகலேயின் சிலை "நீ இன்னும் முன்னேறினால் நான் போலீஸைக் கூப்பிடுவேன்" என்றது.

"ஏன்?"

"நான் தேசியச் சின்னம். நீ என்னை அவமதிக்கிறாய்."

"அவமதிப்பல்ல, தோழரே! உம்முடன் சில வார்த்தைகள் பேச வேண்டும், அதனால்தான்" எனப் பதிலளித்தான் அந்தக் கோட்டு, டிரௌசர் ஆசாமி.

"அது சரி, மரியாதையாகக் கொஞ்சம் எட்டி நின்று சொல்ல வேண்டியதைச் சொல். நீ யார்?" என்றார் கோகலே.

கோட்டும், டிரௌஸரும் அணிந்திருந்த அந்த மனிதன், "கர்தார்ஸிங் ஸராபா என் பெயர்!' எனப் பதிலளித்தான்.

"சீக்கியன், பஞ்சாப்காரன்! இப்படியா மரியாதையில்லாமல் சாடுவது? நான் இம்பீரியல் கௌன்சில் மெம்பராக

இருந்திருக்கிறேன் என்பது உனக்குத் தெரியாதா?" என்றார் கோகலே.

"தோழரே, எந்தக் கவுன்சிலில் நீர் பணியாற்றி யிருக்கிறீரோ அந்தக் கவுன்சிலைச் சேர்ந்த அதிகாரிகள்தான் எனக்குத் தூக்குத் தண்டனை விதித்தார்கள்" என்றான் கார்தார்ஸிங்.

"இதனால் எனக்கு அபகீர்த்தி எதுவும் வந்துவிடாது. ஏறக்குறைய என் வாழ்நாள் முழுமையும் தேசசேவையில் செலவிட்டு நான் என் பெருமையை நிலைநாட்டி யிருக்கிறேன்" என்றார் கோகலே.

"எப்பொழுதாவது ஜெயிலுக்குப் போனதுண்டா?" என வினவினான் கர்தார்.

"இல்லை ?"

"எப்பொழுதாவது உண்ணாவிரதம் இருந்ததுண்டா?"

"இல்லை!"

"எப்பொழுதாவது ஜெயிலர்கள், வார்டர்களிடம் அடிபட்டது உண்டா? அந்த அடிகளால் உமது முதுகு முழுவதும் தளும்புகள் நிறைந்திருக்கின்றனவா? சவுக்குகளின் கூரிச் சுண்டுதலினால் உமது உடலின் சதை பிய்ந்து வந்திருக்கிறதா? உம் உடலின் ஒவ்வொரு அங்கமும் தண்ணீருக்காக ஏங்கித் தவித்தபொழுது, தாகத்தால் நாக்கு தொண்டையை விட்டு வெளியே பிதுங்கி விடும்போல் இருந்த நிலையில் குடிப்பவற்கு ஒரு சொட்டுத் தண்ணீர் கூடக் கொடுக்காமல் உம்மை வாட்டியிருக்கிறார்களா?"

"இல்லை. இவைபோன்ற, பைத்தியம் பிடிக்கச் செய்யும்படியான, அனுபவம் எதுவும் எனக்கு ஏற்படவில்லை."

"இந்த அமர ஆனந்த அனுபவம் அடைந்தவன் நான்," என்று சொல்லி கர்தார்ஸிங் தன் கோட்டையும் சட்டையையும் கழற்றினான். அவன் முதுகில் ரத்தம் வழிந்து கொண்டிருப்பதைக் கண்டேன். சவுக்கடியில் ஏற்பட்ட காயங்களையும் பார்த்தேன். முதுகெலும்பு வெளியே தெரியும் வகையில் ஆழமாக இருந்தன சில காயங்கள். இன்னும் அவன் கழுத்தில் ஒரு கயிறு தெரிந்தது. அதை அவன் கழுத்து 'டை' மாதிரி இழுத்து விட்டிருந்தான்.

"இது என்ன?" கோகலே மகராஜ் தன் கண்களை மேல் அங்கவஸ்திரத்தால் மறைத்தவண்ணம் கேட்டார்.

"இது தூக்குக் கயிறு. இக்கயிறு என் கழுத்தை நெறித்த சமயம் நான் வாலிபனாக, பலசாலியாக இருந்தேன். கல்கத்தாவிலிருந்து கிளம்பி மீரத், அமிர்தசரஸ் வரை வந்து சைனியங்களிடையே புகுந்து சிப்பாய்களை பிரிட்டிஷ் ஆதிக்கத்திற்கு எதிராகப் புரட்சி செய்யத் தூண்டிக் கொண்டிருந்தேன்."

"ஹிம்ஸையை அடிப்படையாகக் கொண்ட புரட்சி எனது குறிக்கோளல்ல. எனக்கு அஹிம்சையில்தான் நம்பிக்கை," என்றார் கோகலே.

அவர் வார்த்தைகளைக் கவனியாமல் கர்தார்ஸிங், "ஆனால் எங்கள் கிளர்ச்சி பயனளிக்கவில்லை. எங்கள் புரட்சி சரிவர நடைபெறவில்லை. நாங்கள் அடக்குமுறைக்குள்ளாக்கப் பட்டோம். துப்பாக்கிக் குண்டுகள் எங்கள் சுதந்திர ஆர்வத்தைக் கருக்கடித்தன" என்றான்.

"இப்பொழுது உனக்கு என்ன வேண்டும்?" என்றார் கோகலே.

"சற்று ஒதுங்கிக் கொள்ளுங்கள். இந்தப் பீடத்தில் எனக்குச் சிறிது இடம் கொடுங்கள். இதில் எனக்கும் உரிமை இருக்கிறது. ஆகஸ்ட் பதினைந்தாம் தேதியன்று உம் கழுத்தில் மாலை சூட்டப்பட்டபொழுது நான் இந்தப் பீடத்தருகே தான் நின்றுகொண்டிருந்தேன். எனக்கு யாரும் மாலை போடவில்லை. எவரும் என் கழுத்தை அலங்கரித்த தூக்குக் கயிற்றின்மீது பார்வை பதிக்கவில்லை. என் முதுகு பிளந்து காட்சி தரும் காயத்தை யாரும் கவனிக்கவில்லை. என் உடலை யாரும் உற்றுநோக்க வில்லை. பசியிலும் பட்டினியிலும் இடைவிடாது சுதந்திர கீதம் பாடிக்கொண்டிருந்த என்னை, சுதந்திரப் பாதையில் நடந்து சகலத்தையும் பறிகொடுத்த என் தீரத்தை யாரும் பாராட்டவில்லை. யௌவனத்தின் சகல இன்பங்களையும், சகல இச்சைகளையும், வாலிபத்தின் சகல நன்மைகளையும் பலியிட்ட என்னைக் கவனிக்கவில்லை. ஜனங்கள் உமக்கு மாலை

குண்டு தைரியம்

தீமையை விளைக்கக் கூடியதும், நன்மையை விளைவிப்பதுபோலத் தோன்றுவதுமான விஷயத்தை, நூலுணர்ச்சியின்றி எவர்கள் கேவலம் குண்டு தைரியத்தினால் சொல்லுகின்றார்களோ, காரியத்தைக் கெடுக்கின்ற அவர்களை, முன்னமே அரசன் ஆராய்ந்து பார்த்து, மந்திராலோசனை விஷயத்தில் பஹிஷ்காரம் செய்யக்கடவன்.

— கும்பகர்ணன்.

சூரர்கள்

நீரற்ற மேகங்கள் போல வீணுக சூரர்கள் கர்ச்சிக்க மாட்டார்கள்; போர்க்களத்திலே செய்கையினுல் நான் கர்ச்சிப்பதைத் தாங்கள் பார்க்கலாம். சூரர்கள், சத்துருக்கள் தங்களுக்குச் செய்யும் அவமானங்களைப் பொறுக்கவும் மாட்டார்கள் ஆனுல் அந்தச் சூரர்கள் இயல்பான தங்கள் வல்லமையை வெளிக்காட்டாமலே செய்தற்கு அரிய காரியங்களைச் செய்து முடிப்பார்கள்.

— கும்பகர்ணன்.

கள் அணிவித்தார்கள். ஒருவராவது என் பக்கமாக ஒரு பூ கூட விட்டெறியவில்லை. தோழரே, நான் தேசத்தின் கௌரவம்பற்றி இம்பீரியல் கவுன்ஸிலில் வாய்ப்பறை அடிக்கவில்லை. ஆனுல் தேசத்தின் கௌரவத்தை நிலைநாட்டத் தூக்குக் கயிற்றை என் கழுத்தில் வலிய ஏற்றேன். உமக்கு நான் மரியாதை செலுத்துகிறேன். உம் பெருமையைப் பாராட்டுகிறேன். ஆனுல் மிகவும் அலைந்து அலுத்துவிட்டேன். இப்பொழுது சற்று இளைப்பாற விரும்புகிறேன். கல் சிலையாக ஆகிவிட விரும்புகிறேன், உம்மைப்போல. சற்றே இடம் கொடும்.”

“இப்பொழுது நான் எதுவும் செய்ய இயலாத நிலையில் இருக்கிறேன். உனக்கு என்னருகில் இடம் தர முடியாது. காரணம் நான் அஹிம்ஸையில் பற்றுதலுள்ளவன். நீயோ ஹிம்ஸாவாதி நம் இருவர் கொள்கைகளும் முரணானவை. நீ ஏன் முனிஸிபல் கார்ப்பரேஷனுக்கு மனுச் செய்யக்கூடாது? அங்கே போ. ஒருவேளை உன் ஆசை நிறைவேறலாம். அப்படி நிறைவேறுவதாகயிருந்தால் இந்தப் பக்கத்தில் எங்காவது உன் சிலைக்கு இடம் கிடைக்காமல் பார்த்துக்கொள். எனக்கே இந்த இடத்தில் இருப்பது சங்கடமாகவிருக்கிறது. இங்கு ஆலமரம் இருக்கிறது. அதிலிருந்து பட்சிகள் என்தலைமீது எச்சமிடுகின்றன. சாதாரண நாட்களில் இந்த இடத்திற்கு அவ்வளவாக ஜனங்கள் வருவதில்லை. ஆனுல் ஹாக்கி கிரௌண்டில் யுவதிகளின் ஹாக்கி விளையாட்டுப் போட்டி நடைபெறும்பொழுது அவர்களுடைய மூடப்படாத முழங்கால் அழகைக் கண்டு களிக்க என்னைச் சுற்றிப் பெருங் கும்பல் கூடி விடுகிறது. அதனுல் எனக்கு இங்கு நிற்பதே சிரமமாகப் போய்விடுகிறது. இன்னும் இரவு பன்னிரண்டு மணிக்கெல்லாம் இந்த பிளாட்பாரத்தை யடுத்த பெஞ்சுகள், வேசிகளும் அவர்களிடம் இன்பத்தை நாடி வந்தவர்களும் முத்தங்கள் பரிமாறும் ஸ்தலமாகி விடுகின்றன.”

இதற்குமேல் கோகலே மகாராஜினுல் எதுவும் சொல்ல முடியவில்லை. காரணம் போலீஸ் சிப்பாயின் ஆவி வேகமாக வந்துகொண்டிருந்தது. அதைக் கண்ட கர்தார்ஸிங் ஸராபா ஓட்டமாக ஓடினுன். நானும் அவன் பின்னுல் வேகமாக ஓடினேன். இருந்தும் அவன் ஓடிய வேகத்தில் என்னுல் அவனைப் பிடிக்க முடியவில்லை. ஓடிஓடி மூச்சு வாங்கவே நான் குழம்பிப்போய் நின்றேன். அந்தக் குழப்பத்தினிடையே எதிரே இந்தக் காட்சியைக் கண்டேன். ஒரு அழகான தோட்டம். அதில் சாதாரணமான ஆசாமிகள் பிரசித்திபெற்றவர்களது சிலைகளைப்பற்றி ஏறி இடம் பிடிக்க முயன்று கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு மத்தியில் ஒரு பெரிய பீடத்தின் மீது தாதாபாய் நௌரோஜியின் பெரிய சிலை அன்பு ததும்பும் பார்வையுடன் அகில இந்தியாவையும் பார்த்துக்கொண்டு நிற்கக் கண்டேன்.

சிறிது நேரம், ஹிந்துஸ்தானத்தில் தேசிய உணர்ச்சியைப் பயிரிட்ட அவரைப் பார்த்துக்கொண்டே நின்றேன். அப்பொழுது யாரோ, “தாதாபாய்!” என அழைக்கும் குரல் கேட்டது.

நான் திரும்பிப் பார்த்தேன். உயரமான கறுப்புநிற ஆசாமி ஒருவன் நின்றுன். வெள்ளைக் கமிசும் காக்கி நிக்கரும் அணிந்திருந்தான் அவன். அவன் கண்கள் மூடியிருந்தன உதடுகளும் மூடியிருந்தன. தலையில் மட்டும் ஒரு துவாரம் தெரிந்தது. அதன் வழியாக ரத்தம் வழிந்துகொண்டிருந்தது. மீண்டும் குரல் ஒலித்தது. “தாதாபாய்?”

நிச்சயமாக அந்த மனிதன்தான் பேசியிருக்கவேண்டும். ஆனுல் உதடுகளைத் திறக்காமலே அவனுல் எப்படிப் பேச முடிந்தது என்பதுதான் புரியவில்லை.

நௌரோஜி கேட்டார்: “என்ன சமாசாரம் குழந்தாய்?”

“தாதாபாய். நான் மில் தொழிலாளி,” என்றுன் அந்த நெட்டையான ஆசாமி.

மிகவும் பரிவுடன், “இங்கே எந்த மில்லில் நீ வேலை செய்கிறுய்?” என விசாரித்தார் தாதாபாய்.

"இல்லை தாதாஜீ! நான் அமல்னேரில் இருந்தேன். என் பெயர் பட்டேல். எனக்கு மூன்று குழந்தைகள். ஒரு கிழத் தாயார், ஒரு கிழத் தந்தை, அவர்களைக் காப்பாற்றும் பொறுப்பு என்னைச் சேர்ந்ததுதான். இந்தக் கொஞ்ச ஊதியத்தில் அந்தப் பொறுப்பை சமாளிக்க முடியவில்லை, எஜமானே!"

"அதற்கு என்ன செய்ய வேண்டுமென்கிறாய்? சம்பள உயர்வா?" என்றார் தாதாபாய்.

"ஆம் எஜமானே! விலைவாசிகள் உயர்ந்து விட்டன. செலவு அதிகம், வாழ்வே துரதிர்ஷ்டமாகி விட்டது"

நீ ஏன் மில் முதலாளியிடம் சொல்லக் கூடாது." "அவர் கேட்பதாயில்லை"

"அப்படியானால் அரசாங்கத்திடம் முறையிடு. உன்னுடைய சர்க்காரிடம் சொல். இப்பொழுது தான் சுதந்திர சர்க்காராச்சே!"

"சுதந்திர சர்க்காரும் கேட்பதாயில்லை துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியாக்குகிறார்கள், எஜமானே! இதோ தலையில் குண்டு பாய்நத அடையாளம் இருக்கிறது-நான் அமல்நரைச் சேர்ந்த மில் கூலி. எனக்கு மூன்று குழந்தைகள்; ஒரு மனைவி வயோதிகத் தாய்; தந்தை எல்லோரையும் காப்பாற்ற வேண்டியவன் நான். என்னைக் கொன்று விட்டார்கள். இப்பொழுது அவர்களனைவரும்பட்டினி. நான் எப்பொழுதும் காங்கிரஸிற்குச் சந்தா செலுத்தி வந்தவன், சுதந்திரத்திற்காக ஹர்த்தால் செய்திருக்கிறேன். இப்பொழுது சுதந்திரம் வந்து விட்டது. சுதந்திர சர்க்காரின் முதல் துப்பாக்கிக் குண்டு என் நெற்றியில் பாய்ந்திருக்கிறது எஜமானே!"

"அதற்கு என்ன செய்ய வேண்டுமென்கிறாய்? ஒன்றுமில்லை. உங்கள் பாதுகாப்பில் கொஞ்சம் இடம் கொடுங்கள். தங்களருகில் நின்று உலகத்திற்கு என் தலையிலுள்ள இரத்தம் ஒழுகும் இந்தக் காயத்தைக் காட்ட விரும்புகிறேன். தாதாஜி. எனதுமண்டையிலுள்ள இந்தப் பிளவு ஒரு போதுமே ஒட்டாதா? என் கிழத்தந்தைக்கு யாரும் உணவு கொடுக்க மாட்டார்களா? என் கிழத்தாய்க்கு எவராவது கஞ்சி ஊற்ற மாட்டார்களா? என் தாயின் துயரத்தை எது தணிக்கும்? சொல்லுங்கள்! தாதா பாய் சொல்லுங்கள், தாதா பாய்! பார்லிமெண்டில் சிங்கம் போல கர்ஜனை புரிந்திருக்கிறீர்களே! இப்பொழுது ஏன் ஊமையாய்ப் போய்விட்டீர்கள்?"

என் கண்களில் கண்ணீர் ததும்பி விட்டது. அதற்குமேல் எதையும் கேட்க முடியவில்லை. அங்கிருந்து கிளம்பி விட்டேன். கண்ணீர் வடித்த படியே அகில இந்தியக் காங்கிரஸ் பந்தலுக்கு முன்னால் வந்து சேர்ந்தேன் அங்கு மகாத்மா காந்தியின் சிலை நின்றது. அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் கூட்டமெல்லாம் முடிந்து விட்டது. பார்க்க வந்தவர்களெல்லாம் போய்விட்டார்கள், பந்தலும்கூட பாதி பிரித்தாயிற்று. பெரிய பெரிய மூங்கில் கால்களை லாரிகளில் ஏற்றி எடுத்துப் போய்க் கொண்டிருந்தார்கள். நான் சிலையருகே போய், சோகத்தால் அடைபடும் தொண்டையில், பேசினேன்,

"பாபு" நீங்கள் ஸ்தாபித்த ராஜ்யம் எவ்வளவு இருளடைந்திருக்கிறது பார்த்தீர்களா, முழத் துண்டு தரித்த மகானே, வாருங்கள் காட்டுகிறேன். உங்கள் பெயரால் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை!" என்றேன்.

ஆனால் சிலை பதில் எதுவும் சொல்லவில்லை. ஏனென்றால் அமாவாசை இரவு கழிந்து விட்டது. செந்நிற வைகறைப் பொழுது புலர்ந்து கொண்டிருந்தது. பொழுது விடிந்து வெளிச்சம் பரவத் தொடங்கினால் சிலை பேசுவதில்லை.

என்னருகே ஒரு தொழிலாளி வந்து நின்றான் "சற்று தள்ளி நில்லுங்கள், சிலையை எடுத்துப் போகவேண்டும்" என்றான்.

"எங்கே?" என்று கேட்டேன்.

"இதை ஒரு மில் முதலாளி விலைக்கு வாங்கி விட்டார். இன்று இதை அவர் வீட்டிற்குக் கொண்டு போகப் போகிறேன்" என்றான் அவன்- ★

செருக்கு

எவன் ஒருவன் ஐசுவரியத்தின் செருக்கால் ஒரு காரியம் ஆரம்பிக்கு முன் செய்ய வேண்டிய மந்திராலோசனை முதலியவற்றைப் பின்பு செய்கின்றானோ, தான் பின்னால் செய்ய வேண்டிய காரியங்களை முன்பு செய்கின்றானோ அவன் நியாயம் அநியாயம் என்ற இவைகளை அறியாதவனாவான்.

=கும்பகர்ணன்.

தொதுவர்கள்

வ. கண்ணன்

இயற்கை யெழில் பூத்துக் குலுங்கும் நீலகிரி மலைச் சாரலில் பன்னெடுங் காலமாக வாழ்ந்துவரும் பூர்வ குடிகளே தொதுவர்கள். உதகமண்டலத்திற்கும் பைகாரா நீர் வீழ்ச்சிக்கும் இடைப்பட்டுள்ள ரமணீயமான மலைக்குன்றுகளிலே இவர்களது சிறுசிறு கிராமங்கள் உள்ளன. உதகமண்டலத்தில் உள்ள கவர்னர் மாளிகைக்குப் பின்புறமுள்ள மலைச் சாரலிலும்கூட ஒரு சிலர் வாழ்வதை உதகமண்டலத்திற்குச் சென்றவர்கள் பார்த்திருப்பார்கள். இயற்கை யன்னையின் மடியில் இயற்கையோடியைந்து வாழும் காரணத்தால் தொதுவர்கள் கட்டுமஸ்தான தேகமுடையவர்களாகவும் ஆஜானு பாகான தோற்றத்தோடும் கவலையற்று வாழ்ந்து வருகின்றனர். நீலகிரி மலைப்பிரதேசத்தைத் தவிர வேறெங்கும் இவர்கள் காணப்படுவதில்லை.

இக் கூட்டத்தின் மொத்த எண்ணிக்கையே சுமார் 400 பேர்கள்தான். ஒரு காலத்தில் தென்னாட்டின் சில பகுதிகளில் பரவி இருந்திருக்கலாம். ஆனால் இச்சமூகம் இன்று தேய்ந்து புதைகுழிக்குச் செல்லும் தருவாயிலிருக்கின்றது. இவர்கள் பேசும் மொழி நமக்கெல்லாம் புரிவதில்லை. ஆனால் இவர்கள் பேசும்போது ஏராளமான தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னட மொழிச் சொற்கள் இடையிடையே வரும். ஒருவேளை இவர்கள் பேசும் மொழிதான் தென்னாட்டின் சுத்த சுயம்பிரகாசமான திராவிட மொழியாயிருக்கலாமோ? ஆராய்ச்சிக்குரிய விஷயம்.

இவர்களின் மொத்த ஜனத் தொகையில் ஆண்கள் தான் அதிகம். பெண்கள் மிகமிகக் குறைவு. இதன் காரணமாகவே இவர்களில் ஒரே பெண்ணைப் பல ஆடவர்கள் சேர்ந்து கல்யாணம் செய்துகொள்ளும் வழக்கம் இன்றும் நிலவிவருகிறது.

சில வருஷங்களுக்கு முன்வரை மூத்த சகோதரன் ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டால், அவளே மற்றச் சகோதரர்களுக்கும் மனைவியாகக் கருதப்பட்டு வந்தாள். இவர்கள் தங்களைப் பாண்டவர்களின் வழி வந்தவர்கள் எனப் பெருமையாகக் கூறிக்கொள்ளுகின்றனர். ஒருவேளை இதுதான் காரணமாகக் கூட இருக்கலாம்.

முன் காலங்களில், பெண் குழந்தைகள் பிறந்தால், உடனே சிசுவைக் கொன்றுவிடும் பயங்கர வழக்கம் இவர்களிடையே பழக்கத்திலிருந்தது. இதனால்தான் இக் கூட்டத்தில் பெண்களே மிகமிகக் குறைவு. இன்று இந்த வழக்கம் அடியோடு மறைந்து விட்டது.

தொதுவர்கள் கள்ளங்கபடற்ற வெள்ளை உள்ளத்தினர்- இவர்களின் முக்கிய தொழில் விவசாயமும், எருமை மாடுகள் வளர்ப்பதுவுமேயாகும். நீலகிரி மலை உச்சியில் இவர்களுக்காக அரசாங்கம் இனாமாக வழங்கிய சிறு நிலப் பகுதிகளில் உருளைக்கிழங்கு சாகுபடி செய்து மார்க்கட்டுகளுக்குக் கொண்டு வந்து விற்பார்கள்.

நாமெல்லாம் தமிழ் நாட்டுக் கிராமங்களில் எருமை மாடுகளைப் பார்க்கிறோம் அல்லவா? உழவனுக்கு உயிர் ஊட்டும் 'கற்பகத் தரு' இவைகள். தொதுவர்கள் வளர்க்கும் எருமை மாடுகளுக்கும் நம்மூர் எருமை மாடுகளுக்கும் ஏராள

மான வித்தியாசம் உண்டு. நமது கிராமப் புறங்களில் வற்றி வறண்டு எலும்பும் தோலுமாக உள்ள எருமைகள் தான் இருக்கின்றன. ஆனல் தொதுவர்களின் எருமை மாடுகள் தளதளவென்று மலைச்சாரலில் வளர்ந்திருக்கும் புற்களைத் தின்று கொழுத்து, தொதுவர்களைப்போலவே வாட்ட சாட்டமாக இருக்கின்றன. இம்மாதிரி ஆஜானுபாகான எருமை மாடுகளை நாம் வேறெங்கும் காண முடிவதில்லை. தொதுவர்கள் தங்கள் சொத்துக்களை எருமைகளைக் கொண்டே கணக்கிடுகின்றனர் என்ருல் ஏன் செய்யமாட்டார்கள் பின்னே? இவர்கள் வாழ்க்கையே எருமையோடு ஒட்டியது. எருமை தான் இவர்களின் தெய்வம். தொதுவர்கள் தங்கள் உயிரும் உடலுமான எருமைகளைக் காப்பாற்ற எடுத்துக் கொள்ளும் சிரமமும், தங்கள் கிராமங்களில் இவைகளுக்காகக் கட்டப்பட்டுள்ள தொழுவங்களும்போற்றற்குரியன. எருமைகள் வளர்ப்பதால் பால், தயிர் வியாபாரமும் இவர்கள் ஏதேஷ்டமாகச் செய்கின்றனர்.

தொதுவர்கள் நல்ல வலிமை யுடையவர்கள். அழகானவர்கள். இவர்களில் பெண்களைவிட ஆண்களே நல்ல அழகர்கள். ஆண்கள் கறுத்து அடர்த்தியாக வளர்ந்திருக்கும் நீண்ட தாடிகளை அநேகமாக எல்லோரும் வைத்திருக்கின்றனர். ஆண்களின் உடலெல்லாம் ரோமம் அடர்த்தியாக வளர்ந்திருக்கும். தொதுவப் பெண்களும் நகைப் பைத்தியம் பிடித்தவர்கள்தான். இவர்கள் வெள்ளியாலான சங்கிலிகளில் நான்கணு, எட்டணு நாணயங்களைக் கோர்த்துக் கழுத்தில் மாட்டிக்கொள்ளுகிருர்கள். இவர்கள் யாருமே கடுங்குளிரையும் லட்சியம் செய்வதில்லை. கடுங் குளிர் காலத்திலும் சாதாரண முரட்டு நூலாலான ஆடைகளையே இவர்கள் அணிந்து கொள்ளுகின்றனர். கம்பளி ஆடைகளைக் கண்ணெடுத்தும்கூடப் பார்ப்பதில்லை.

தொதுவ ஆண்களை இவர்கள் பொதுவாக சிர்க்கார் என்ற பெயரிட்டு அழைக்கின்றனர். இதைப்போல பெண்கள், பாச்சி, ஸம்பப் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றனர். பெயரில் என்ன இருக்கிறது என்று சாதாரணமாகச் சொல்லுகிருேமே. தொதுவர்களுக்கு மட்டும் இந்த எண்ணமே கிடையாது சில பெயர்களில் அவர்களுக்கு அபாரமான காதல். சாதாரணமாக எல்லா தொதுவப் பெண்களுமே 'சுந்தரி' 'ஸ்திரிபில்' என்ற இரண்டு பெயர்களில் ஏதாவது ஒன்றைத் தங்கள் பெயராக வைத்திருக்கின்றனர். இவர்கள் வாழும் சிறு சிறு கிராமங்களுக்கு "மாண்ட்" அல்லது "மாட்": அதாவது மந்தை என்று பெயர். நான்கு அல்லது ஐந்து வீடுகளே இருக்கும் ஒரு கிராமத்தில். வீடுகள் என்று சொன்னவுடன் கருங்கல், செங்கல், காரை அல்லது கான்கிரீட்டாலான வீடுகளைக் கற்பனை செய்து விடாதீர்கள். இவர்கள் வீடுகள் சாதாரணக் குடிசைகள்தான். இந்தக் குடிசைகளின் அழகே அழகு! வில் போன்று வளைந்திருக்கும் இக் குடிசைகளின் கூரைகள் வைக்கோல், புல் இவற்ருல் வேயப்பட்டிருக்கும். குளிர் துளிகூட உள்ளே நுழைய முடியாது. சுமார் 10 அடி உயரமும் 18 அடி நீளமும் எட்டு அல்லது ஒன்பது அடி அகலமுமுள்ள இக்குடிசைகளுக்கு இரண்டடிக்கு ஒன்றரை அடி உள்ள சிறு கதவுகள் தான் உண்டு. இக்குடிசைகளுக்குள் செல்ல குனிந்து ஊர்ந்துதான் செல்ல வேண்டும். குடிசையின் உட்பகுதிகள் வெகு சுத்தமாக இருக்கும். இவர்கள் வணங்கும் தெய்வத்திற்கு வேட்டைக்காரச் சாமி என்று பெயர்.

இவர்கள் விசித்திரமான சில பழக்க வழக்கங்களைக் கைக்கொள்ளுகின்றுர்கள். இவர்கள் கல்யாணத்தில் ஒரு சடங்கு உண்டு. மணமகன் பெண் வீட்டிற்கு அவனது சுற்றத்தார் புடை சூழச் சென்று பெண்ணைத் தூக்கி வந்துவிடுவான் எல்லாம் முன்னேற்பாட்டோடு தான். இதேபோல இவர்கள் ஈமச் சடங்குகளும் விசித்திரமாக இருக்கும். வாலிபர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு எருமையை விரட்டு விரட்டென்று நாலாபக்கமும் விரட்டுவார்கள். கடைசியில் அதன் கொம்பைப் பிடித்து, எருமையை அடக்கிப்பிடித்து ஒரே வெட்டாக வெட்டுவார்கள். பீறிட்டு வழிந்து வரும் உதிரத்தைத் தேவாமிர்தமெனக் குடிப்பார்கள். இக்க விளையாட்டை ஒரே கோலாகலமாகச் சாவு வீட்டில் செய்வார்கள்.

இறந்தவர் ஆணுயிருந்தால், ஒரு வில், அம்பு, கைத்தடி, அரிசி, வெல்லம், தேன், தேங்காய், வாழைப்பழம், புகையிலை, மூங்கிலாலான படி, சில நாணயங்கள் இவற்றையும் பிணத்துடன் வைத்து எரிப்பார்கள். பெண்ணுயிருந்தால், சமையல் சாமான்கள், சமைத்த உணவு, நகைகள், நூல், நாணயங்கள் இவற்றை வைத்து எரிப்பார்கள்.

சூரிய அஸ்தமயம்

உலகத்தில் எங்கு பார்த்தாலும் நிறைந்து கிடக்கும் லாவண்யங்களைத் தமிழர்கள் கவனிப்பது கிடையாது. சனிக்கிழமை சாயங்காலம் தோறும் குளக்கரைகளிற் போய்க் கருடன் பார்ப்பதற் கென்றால் நம்மவர்கள் கூட்டங்கூட்டமாக ஓடுகிறார்கள். சூரிய அஸ்தமய காலத்தில் வானத்தில் தோன்றும் அதிசயங்களைப் பார்க்க ஒருவன் கூடப் போகிறதில்லை அப்போது வானத்திலே இந்திர ஜால மஹேந்திர ஜாலங்களெல்லாம் நடக்கின்றன. இந்த க்ஷணம் இருந்த தோற்றம் அடுத்த க்ஷணம் இருப்பதில்லை. உலகத்திலுள்ள திரவியமுழுவதையும் செலவிட்டு வர்ணக் காட்சிகள் ஏற்படுத்திப் பார்ப்போமானாலும், அது சூரிய அஸ்தமய காலத்தில் வானத்திலே நாம் பொருட் செலவில்லாமல் பார்க்கக் கூடிய காட்சிகளிலே கோடியில் ஒரு பங்குகூடக் காணாது. வாண வேடிக்கைகள் பார்க்க ஒரு செல்வன் பதினாயிரக்கணக்கான திரவியம் செலவிடுகிறான். அவனது செல்வத்தினாலன்றோ இந்தக்காட்சி சுலபமாகிற தென்று அதைப் பார்த்து ஆயிரம் ஏழைகள் பெருமூச் செறிகிறார்கள். சகோதரா! சூரிய அஸ்தமயத்தின் விநோதங்களைச் சென்று பார். சூரியனைப் பார்த்தால் கண்ணுக்குக் கெடுதி என்ற குருடர் நம்பிக்கையைப் பொருட்டாக்காதே. சூரியனைப் பார்ப்பது பாவம் என்று சொல்லும்மூடர் சாஸ்திரத்தைக் கண் கொண்டு பார்க்காதே.

—மகாகவி பாரதியார்

முன்னெல்லாம் பெண் குழந்தைகளைப் பிறந்தவுடன் கொன்றுவிடுவார்கள் என்று கூறினேனல்லவா? இந்த பயங்கரச் சிசுக் கொலையையும் ஒரு பெரிய கேளிக்கையாக அவர்கள் செய்து வந்திருக்கிறார்கள். வேண்டாத இந்தக் குழந்தைகளை நடுத் தெருவில் படுக்க வைத்து விடுவார்களாம். பின் எருமை மாடுகளை அக்குழந்தைகளின் மேல் விரட்டிவிடுவார்களாம். எருமைகள் குழந்தைகளைத் துவைத்து நாசம்செய்யும் போது கைகொட்டி வேடிக்கை பார்ப்பார்களாம் இவர்கள். எப்படியோ இந்த கம்ச தர்பார் நின்று விட்டது!

ஒரு மந்தையில் இருக்கும் பெண்களும், எருமைகளும் அந்த மந்தை முழுமைக்குமே சொந்தம். பொதுச் சொத்தாகவே இவர்கள் பெண்களைக் கருதுகிறார்கள். இவர்கள் திருமணத்தை ஒரு சுபச் சடங்காவே நினைக்கின்றனர். முதல் ஆண்மகனோடு கூடுவதையே இவர்கள் கொண்டாடுகிறார்கள். இதைத் தவிர இன்னொரு ஆச்சரியமான வழக்கமும் இவர்களிடம் உண்டென்று தெரிகிறது. ஒரு பெண் பூப் பெய்தியதும், அவள் திருமணத்திற்கு லாயக்குள்ளவளா என்று மந்தையிலுள்ள ஆண்களில் வலிமையானவர் அப் பெண்ணுடன் கூடிப் பரீட்சை செய்வார்கள். அவளைப் பரீட்சை செய்த வாலிபனே அவளைவிவாகம் செய்து கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் கிடையாது.

இந்த ஜாதியினர் அநேகமாக அழிந்து வருகின்றனர். இன்னும் சில ஆண்டுகளில் இச்சமூகமே இருந்த இடம் தெரியாமல் அழிந்து போனாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை, இந்த அழிநிலைக்குக் காரணம் வெள்ளைக்காரர்கள்தான். ஏழ்மையில் வாழ்ந்து வரும் தொதுவப் பெண்களை ஆங்கிலேயர்கள் தமது காம வெறிக்கு ஆட்படுத்தி இச் சமூகத்தின் அழிவுக்கே காரண பூதர்களாகிவிட்டனர். கொஞ்சம் கொஞ்சமாக நாசமாகி அழிந்து கொண்டுவரும் இந்தியப் பழங்குடிகளான இச்சமூகத்தை நல்ல நிலைக்கு கொண்டுவருவது மிக அவசியம். இவர்களுக்குத் தேவையான நிலங்களைச் சர்க்கார் இனாமாக, வரியில்லாமல் வழங்கி அவர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதின் மூலம், இச் சமூகத்தை முன்னுக்கு கொண்டுவர இயலும்.

இந்தியப் பொருளாதார நெருக்கடி

வெ, ராமசாமி

நமது தேசியத் தலைவர்களும் அரசாங்க பீடங்களில் அமர்ந்திருக்கும் தலைவர்களும் இன்றையப் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க எங்கெங்கு வாய்ப்புக் கிடைக்குமோ அங்கெல்லாம் சரமாரியாகப் பிரசங்கங்களை நிகழ்த்தி வருகிறார்கள். நமது ஒப்பற்ற தலைவர் நேருவையே எடுத்துக்கொள்ளுவோம். நமது வேலையில்லாத் திண்டாட்டத்தையும் பொருளாதார நெருக்கடியையும் பற்றி அவர் குறிப்பிடாத நாளே இல்லையென்று தினசரிப் பத்திரிகைகளைப் படிப்பவர்கள் ஒப்புக்கொள்வார்கள். ஆகையால் ஒரு பயங்கரமான பொருளாதார நெருக்கடியில் நாம் சிக்கிக் கொண்டிருக்கிறோம் என்பதை நிரூபிக்க இந்த உண்மைகளே போதுமானவை.

பொருளாதார நெருக்கடி தீவிரப்படுவதாகப் பயமுறுத்துகிறீர்களே, பொருளாதார நெருக்கடி நமக்கு மட்டுமா இருக்கிறது, உலகமுழுதும் அல்லவா இருக்கிறது என்று சொல்லலாம். வாஸ்தவம்தான். ஆனால் உலகம் என்று நாம் சாதாரணமாகச் சொல்லுவது ரஷ்யா, நவசீனா போன்ற நாடுகளை உட்படுத்தாது என்று நினைக்கவேண்டியிருக்கிறது. ஏனெனில் இந்த நாடுகளில் பொருளாதார நெருக்கடிக்குப் பதிலாகப் பொருளாதார அபிவிருத்தியே ஏற்பட்டு வருகிறதென்று அவற்றின் எதிரிகளும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். அது ஒருபுறம் இருக்கட்டும்.

பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளை எடுத்துக்கொண்டால் பொருளாதார நெருக்கடியும் அதன் பிரதிபலிப்பான வேலையில்லாத் திண்டாட்டமும் இவ்வளவு கேவலமான நிலைக்குவந்ததென்று சொல்ல முடியாது. ஆனால் நமது நாட்டிலோ லட்சக்கணக்கான ஜனங்கள் வேலை தேடிச் சுற்றித்திரிவதும், பட்டினியால் சாவதும் தினசரி நிகழ்ச்சிகளாகப் போய்விட்டன. பொருளாதார நெருக்கடியும் வேலையில்லாத் திண்டாட்டமும் இவ்வளவு தீவிரப்பட முக்கிய காரணங்கள் யாவை என்று பார்ப்பது அவசியமல்லவா?

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இருந்த காலத்தில் ஏற்படுத்திய அரசாங்க அமைப்பு முறையே சாராம்சத்தில் இன்றும் இருந்து வருகிறதென்பதை யாரும் மறுக்க முடியாது. இந்த அமைப்பு முறை இந்தியர்களைச் சுரண்டுவதற்காக உண்டானது என்பதும் தெரிந்ததே பிரிட்டிஷ் கவர்னர்களும், மந்திரிகளும் அமர்ந்திருந்த பீடங்களில், இன்று நமது தேசியத் தலைவர்கள் அமர்ந்திருக்கிறார்கள் என்பது உண்மையே. ஆனால் அது பிரிட்டிஷ் முதலாளிகளின் மறைமுகமான சுரண்டலையோ, நமது விவசாய முறையையோ ஒரு இம்மிகூட மாற்றவில்லை. விவசாயச் சீர்கேடு நாளுக்கு நாள் வளர்ந்து ஒரு பயங்கரமான நிலையை இன்று அடைந்திருக்கிறது.

இந்தக் காரணங்களை நீக்குவதற்குப் பதிலாக, நமது சுதந்திர அரசாங்கம் தெரிந்தோ தெரியாமலோ பொது மக்களின் வறுமையையும் கஷ்டங்களையும் அதிகப்படுத்தும்படியான காரியங்களையே செய்து வருகிறது. உதாரணமாக அரசாங்க விலைக் கட்டுப்பாடுகளைப் பாருங்கள். இந்த விலைக் கட்டுப்பாடுகள் பெரும்பாலும் மக்களின் எந்தப்பகுதியைப் பாதித்து வருகின்றன? ஏன், விவசாயிகள், தொழிலாளர்கள், மத்திய தர மக்கள் ஆகிய இவர்களைத்தான் என்று கண்ணை மூடிக்கொண்டு யாரும் சொல்லிவிடுவார்கள். கள்ள மார்க்கெட் விலை, கட்டுப்பாட்டு விலையைவிடக் குறைவாக இருப்பதை எத்தனையோ முறை நாம் பார்த்திருக்கிறோம். இந்த விலைக் கட்டுப்பாடுகளால் கொள்ளை லாப மடித்து வருபவர்கள், பிரிட்டன் அமெரிக்காபோன்ற நாடுகளும் பெரிய இந்திய முதலாளிகளுமே. துணி உற்பத்தியை எடுத்துக்கொள்ளுவோம். துணி உற்பத்தியில் போட்டிருக்கும் மூலதனம் 67·59 கோடி ரூபாயாகும். 1948-49ல் துணி உற்பத்தியில் கிடைத்த

இந்தியா இன்று பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிப்பதற்கு அரசாங்கத்தினரின் கொள்கைகளும், நடைமுறையுமே காரணம் என்பதைப் புள்ளிவிவரங்களுடன் கூறுகிறார் கட்டுரையாளர்.

லாபம் 100%, 1949-50ல், 50%, 1950-51ல் 40%. சணலை எடுத்துக்கொள்ளுங்கள். இந்தத் தொழிலில் போட்ட மூலதனம் 29·48 கோடி ரூபாய். இதில் கிடைத்த லாபம் 1948-49ல் 80%, 1949-50ல் 27%, 1950-51ல் 46% ஆகும். இவ்வளவு கொள்ளை லாபம் அடிக்கும்படி விலைகளைக் கட்டுப்படுத்தியதன் விளைவு, சாதாரணமான மக்கள் இந்தப் பண்டங்களை வாங்க முடியாமல் போய்விட்டது. அதனால் இந்தப் பண்டங்களுக்குள்ள மார்கட்டை அது பாதித்தது. மார்க்கட் இல்லை; துணி மார்க்கட்டில் துணிக்குநெருக்கடி என்று கூச்சல் போட்டால் அதற்கு இதுதான் காரணம். துணி பொதுமக்களுக்கு மிக அவசியமாகத் தேவைப்படுகிற ஒரு பண்டம். அதன் விலையை சாதாரண ஜனங்கள் வாங்க முடியாத அளவுக்குமேல் நிர்ணயித்திருக்கிறார்கள்.

கொரியச் சண்டையின் காரணமாக ஏற்பட்ட விலையேற்றத்தால் இந்தக் கட்டுப்பாட்டு விலைகளை இந்த அளவில் வைத்துக் கொண்டிருக்கமுடிந்தது. ஆனல் வியாபார மந்தம் தலை காட்டத் தொடங்கியபின்னரும் இந்தக் கட்டுப்பாட்டு விலைகளை அரசாங்கத்தார் குறைக்கவில்லை. விவசாயப் பொருள்கள், ஏற்றுமதிக்கான மூலப் பொருள்கள் ஆகியவற்றின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் அளவுக்கு இறக்குமதிப் பொருள்கள், உற்பத்தி செய்தபொருள்கள் ஆகியவற்றின் விலைகள் இறங்காதபடி தடை செய்து கட்டுப்படுத்திய பொறுப்பு அரசாங்கத்தையே சேர்ந்ததாகும். வியாபார மந்தத்தை எதிர்த்துப் போராடுவதாகச் சொல்லிக் கொண்டு, விலை வீழ்ச்சியின் நன்மையைப் பொது ஜனங்கள் அடைய முடியாதபடி அடித்துவிட்டார்கள் நமது அரசாங்கத்தார்கள். இதனல் நன்மை அடைந்தது பிரிட்டிஷ் அமெரிக்க வியாபாரிகளும், இந்தியாவின் பெரிய முதலாளிகளுமே ஆவார்கள்.

விலைகளை, இப்படிக் கட்டுப்படுத்திப் பொது ஜனங்களைக் கொள்ளையடிப்பது நியாயமா என்று கேட்டால், விலைகளை ஏற்றுவதற்காக ஏற்றவில்லை. அந்நிய நாட்டுச் செலாவணியைப் பெறுவதற்காகவே செய்தோம் என்று அரசாங்கத்தார் சமாதானம் சொல்லுகிறார்கள். ஏற்றுமதி செய்வதற்கு விதித்திருந்த தடைகளை நீக்கிச் சரளப்படுத்தியதால் ஏராளமாகச் சேமித்து வைத்திருந்த பண்டங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டது. அதன் விளைவாக அந்தப் பண்டங்களின் உள்நாட்டு விலைகள் உயர ஆரம்பித்தன. உதாரணமாக பாகிஸ்தானுக்குத் துணி ஏற்றுமதி அனுமதிக்கப்பட்டது. பஞ்சு ஏற்றுமதித் தீர்வை ஒரு பேலுக்கு 2400 லிருந்து ரூ. 200-க்குக்குறைக்கப்பட்டது. சணல் ஏற்றுமதி செய்வதற்கு விதித்திருந்த கட்டுப்பாடுகள் எல்லாம் நீக்கப்பட்டன. இவையெல்லாம் ஏற்றுமதிக்குப் பெரிதும் ஊக்கமளித்தது. உள்நாட்டுச் சேமிப்புகள் மிகக் குறைவான அளவுக்குக் குறைந்தன. வியாபார மந்தத்தால் வீழ்ந்து கொண்டிருந்த விலைகளைத் திரும்பவும் பழைய அளவில் நிலைநிறுத்த இது உதவியாக இருந்தது. வியாபார மந்தத்தினல் விலைகள் குறைந்து, குறைந்த விலையினல் பொது ஜனங்கள் பயனடைய முடியவில்லை. அந்நியநாட்டு முதலாளிகளும் இந்தியாவிலுள்ளபெரிய முதலாளிகளும் லாபமடையும் படியும், இந்தியப் பொது ஜனங்கள் வாழ்க்கைக்கு மிக அவசியமாகத் தேவைப்படும் பண்டங்களைக்கூட வாங்க முடியாமலும் விலைகளின் அளவைக் கட்டுப்படுத்திய பெருமையும், அதன் காரணமாகப் பண்டங்களுக்குள்ள தேவையைச் சுருக்கி, வியாபார மந்தத்தை அதிகப்படுத்தி, பொருளாதார நெருக்கடியைத் தீவிரப்படுத்திய பெருமையும் நமது அரசாங்கத்தையே சார்ந்ததாகும்.

பொருளாதார நெருக்கடியைத் தீவிரப் படுத்திய இன்னொரு காரணம் அரசாங்க வரிகள் என்று சொல்லலாம். பணவீக்கத்தைக் குறைப்பதாகச் சொல்லிக்கொண்டு கண்ட கண்ட வரிகளையெல்லாம் அரசாங்கம் விதிக்க ஆரம்பித்தது. இந்த வரிகள் பணக்காரர்களைத்தான் பாதித்தன என்பதில்லை. இவை பாதிக்காத ஜனங்களே இந்தியாவில் இல்லை என்று சொல்லிவிடலாம்.

இன்று மத்திய அரசாங்கமும் 'A' பகுதி ராஜ்யங்களும் வசூலிக்கும் வரி 1938-39ல் பிரிவினை ஆகாத இந்தியா வசூலித்த வரியைப்போல சுமார் 5 மடங்காக இருக்கிறது. அதாவது 1938-39ல் பிரிவினை ஆகாத இந்தியாவின் மொத்த வருமானம் 163·83 கோடி ரூபாய் ஆகும். 1952-53ல் மத்திய அரசாங்கமும் 'A' பகுதி ராஜ்யங்களும் வசூலித்த வருமானம் 719·80 கோடி ரூபாய் ஆகும். இத்தனை கோடி ரூபாயை வசூலித்து ஜனங்களின்வாங்கும் சக்தியை வருஷா வருஷம் குறைத்து வந்தால் அது பொருளாதார நெருக்கடியைத் தீவிரப்படுத்தாமல் வேறு என்ன செய்யும்? இந்தத் தொகையில் விற்பனை வரியின் பங்கு

எவ்வளவு என்பதை ஆராய்ந்து பார்த்தால் இந்த உண்மை வெட்ட வெளிச்சமாகத் தெரிந்துவிடும்.

'A' பகுதி ராஜ்யங்களில் விற்பனை வரி வருமானம் பின்வருமாறு

வருஷம்	ரூபாய் (லட்சத்தில்)
1938-39	இல்லை
1948-49	3295
1949-50	4630
1950-51	5134
1951-52	4774
1952-53	4567

விற்பனை வரி அழி—பண்டங்களின் விலைகளை நேரடியாக உயர்த்தி அவற்றின் தேவையைப் பெரிதும் பாதிக்கிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். விற்பனைவரி பொது ஜனங்களின் வருமானத்தை எப்படிப் பாதிக்கிறதென்பதை இன்னொரு உதாரணத்தாலும் விளக்கலாம்.

'A' பகுதி ராஜ்யங்களில் தலா வருமானமும், தலாவருமான வரியும்.

ராஜ்யங்கள்	தலா வருமானம் ரூபாய்	தலா வருமான வரி ரூபாய்
அசாம்	11·01	7·14
பீஹார்	7·07	5·50
பம்பாய்	16·43	12·99
மத்திய பிரதேஷ்	9·45	8·04
சென்னை	11·22	8·53
ஒரிஸா	8·04	5·11
பஞ்சாப்	13·39	8·49
உத்தரபிரதேஸ்	9·89	7·37
மேற்கு வங்கம்	14·49	12·07
எல்லா ராஜ்யங்களும்	11.07	8·45

மேற்கூறிய தலாவரி, மாகாணங்களில் விதிக்கும் வரியை மட்டுமே குறிக்கிறது. மத்திய அரசாங்க வரி 'A' 'B' பகுதி ராஜ்யங்களில் விதிக்கும் மொத்த வரித் தொகையையும்விட அதிகமாகும். ஆகையால் மொத்தத் தலா வரி, மாகாணத் தலா வரியைப்போல இரட்டிப்பாகிவிடுகிறது. இப்படி வரி விதித்தால் தேசத்தின் பொருளாதாரம் எப்படி உருப்படமுடியும். மேலும் இந்த வரிகளின் பளு அதைத் தாங்கச் சக்தியற்ற ஏழை எளிய மக்களின் மீதுதான் விழுகிறது. தேசிய வருமானத்தை வினியோகிப்பதில் ஏற்கெனவே உள்ள தராதம்மியமும், வரியை விதிப்பதிலுள்ள தராதம்மியமும் சேர்ந்து போருக்கு முந்திய நிலையைக்கூட அடைய முடியாத வண்ணம் ஜனங்களின் உற்பத்தி சக்தியையும் வாங்கும் சக்தியையும் குறைத்து விடுகிறது.

மேலே சொன்ன காரியங்கள் போதாது என்று, அந்நிய மூலதனத்துக்குப் பாக்கு வைத்து அழைக்கிறது நமது அரசாங்கம். அந்நிய மூலதனம் நமது சுதந்திரத்திற்கும் சுபிட்சத்திற்கும் உதவியாக இருந்தால் ரொம்ப நல்லதுதான். ஆனால் இன்று அந்நிய மூலதனம் இந்தியாவில் நுழைகிற தோரணையைப் பார்த்தால் நமது சுபிட்சமல்ல, சுதந்திரமே பறிபோய் விடும்போலிருக்கிறது. சுரங்கத் தொழில், காகிதம், வர்ணம், ரேடியோ, நூல் நூற்கும் யந்திரங்கள், மின்சார யந்திரங்கள், மருந்து வகைகள், சைக்கிள் உறுப்புக்கள், மோட்டார் கார் உறுப்புக்கள், டீசல் யந்திரங்கள் இவை போன்றவைகளை உற்பத்தி செய்யும் தொழில்களில் ஏற்கெனவே ஈடுபட்டிருக்கும் இந்தியர்களுக்குப் போட்டியாக அந்நிய மூலதனம் ஈடுபடுத்தப்படுகிறது. இந்தப் போட்டியினால் பாதிக்கப்படும் இந்திய முதலாளிகள் தங்கள் தொழில்களை அந்நியர்களுக்கு விற்று விடுவதும் சகஜமாக நடந்து வருகிறது. இதனால் இந்தியத் தொழில் அபிவிருத்தியும் இந்தியர்களுக்குள்ள லாபமும் குறைந்து, அந்நிய மூலதனத்தின் ஆதிக்கம் வலுப்பதோடு ஏராளமான பணம் வருஷா வருஷம் அந்நியர்களின் லாபமாக நாட்டை விட்டு வெளியேறுகிறது. இப்படி நம்மைச் சுரண்டி, நமது பணத்தை லாபமாக அடித்துக் கொண்டு போவதற்கு வேண்டிய எல்லா வசதிகளையும் நமது அரசாங்கம் அவர்களுக்குச் செய்துகொடுக்கிறது. நமது அரசாங்கத்தின் இந்தக் கொள்கை இந்தியப் பொருளாதார நெருக்கடியை தீவிரப்படுத்த இன்னொரு முக்கியமான காரணமாக இருந்து வருகிறது என்பது சொல்லாமலே விளங்கும்.

ஐந்தாண்டு திட்டம் வகுத்திருக்கிறோம், அது முடியும்போது பாருங்கள், இந்தியா எவ்வளவு சுபிட்சமடைந்து விடுகிறது என்று சொல்லுகிறார்கள். இந்தத் திட்டம் நிலப்பிரபுத்துவ முறையையும், அந்நிய மூலதனத்தையும், பூரணமாக நம்பியிருக்கிறது. எந்த மூலதனம் நம்மைச் சுரண்டவும் நம்மீது ஆதிக்கம் செலுத்தவும் வருகிறதோ அதை நம்பி, நமது சுபிட்சத்திற்குத் திட்டம் போடுவது எவ்வளவு பைத்தியக்காரத்தனம் என்பதையே இந்தத் திட்டம் நமக்குக் காட்டுகிறது. இதனால் பொருளாதார நெருக்கடி அதிகப்படுமே யொழியக் குறையமாட்டாது. ★

இந்திய சினிமாத் தொழில்

வி. ரோஹிணி

பம்பாய் மாகாணத்தில் சினிமாத் தொழிலில் மிகப் பயங்கர நெருக்கடி; பல படமுதலாளிகள் ஓட்டாண்டிகளாகி விட்டனர்; பிரபல நடிக நடிகைகள் இன் சால்வன்ஸி கொடுக்கக்கூடிய நிர்ப் பந்தம் ஏற்பட்டிருக்கிறது என்றெல்லாம் சில தினங்களாகப் பத்திரிகைகளில் செய்திகள் வந்த வண்ணமாக இருக்கின் றன. இந்த நிலை, பம்பாய் மாகாணத்தில் மட்டுமல்ல. இந்தியா முழுமைக்குமே பொருந்தும். சமீபத்தில் ஒரு தமிழ்ப் பட முதலாளி—நடிகரும்கூட—தான் எடுத்த படம் தோல்வி கண்டதன் காரணமாகத் தான் வாங்கிய கடனைத் திருப்பித் தர இயலாமல் கோர்ட்டில் வழக்கு நடந்த கதையை வாசகர்கள் அறிவார்கள். இந்த நிலை ஏன்? செல்வம் கொழித்து வந்த இந்தத் தொழில் சீர்கேடடையக் காரணம் என்ன? நாம் காரண காரியங் களையும் மாற்று வழிகளையும் ஆராயப் புகுமுன் இன்றைக்கு இத்தொழிலின் யதார்த்த நிலையைத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

உலகப் படத் தயாரிப்பில், இந்தியா இரண்டாவது ஸ்தானத்தை வகிக்கின் றது. 1951 வரை இந்தியாவில் சராசரி வருடமொன்றுக்கு 200 படங்கள் தயா ரிக்கப்பட்டு வந்தன. இத்தொழிலில் ஈடு பட பல பெரிய பணம் படைத்த பிரபுக் கள் போட்டி போட்டுக்கொண்டு முன் வந்தனர். ஆனல் சென்ற ஆண்டில் இந்தியா முழுமையுமே 48 படங்கள்தான் தயாரிக்கப்பட்டன. தனிப்பட்ட பல படாதிபதிகள் இருந்த இடம் தெரி யாமல் மறைந்துவிட்டனர். இருபத்தி நான்கு மணிநேரமும் சதா வேலை செய்து கொண்டு வந்த பல ஸ்டுடியோக் கள் வேலையில்லாமல் தூங்கி வழிகின் றன. ஸ்டுடியோக்களில் ஆட்குறைப்பு; பல மாதங்கள் சம்பள பாக்கி, இவைக ளெல்லாம் தினசரி நிகழ்ச்சிகளாக மாறி விட்டன.

சமீபத்தில் வெளியான புதுப் படங் கள் பல தோல்வி கண்டுவிட்டன. வசூல் என்ற கலமே பூஜ்யம். ஆகவே மார்வாரிப் பெரு முதலாளிகள், முன்னைப்போல இத்தொழிலில் முதலீடு செய்ய மீன மேஷம் பார்க்கின்றனர். அறை குறையாகப் பல படங்கள் தயா ரிப்பில் நின்றுவிட்டதையும், படத்தை முடித்துவிட்டு, வெளியிட கொட்டகை கள் கிடைக்காமல் இருக்கும் நிலைமை யையும் நாம் காண்கிறோம். எப்படி இந் நெருக்கடி ஏற்பட்டது. இதைப் போக்க என்ன வழி என்ற ஆராய்ச்சிகள் பகி ரங்கமாக நடைபெறுகின்றன.

ஓராண்டுக்கு முன்வரை, பட விநி யோகஸ்தர்கள், நடிக நடிகைகள் யார் யார் என்று பார்த்துப் பட விநியோக உரிமையை விலைக்கு வாங்கினர்கள். ஆனல், இன்றைக்கு, கதை என்ன? என்று ஆராய்ச்சி செய்கின்றனர். நல்ல கதையா? மக்கள் விரும்புவார்களா? சமூகக் கதையா? புராணக் கதையா? தொழிலாளியின் வாழ்க்கையைச் சித்த ரிக்கும் கதையா? என்றெல்லாம் கணக் குப்போட்டே பட விநியோக உரிமையை விலைக்கு வாங்குகின்றனர். நடிக நடிகை களுக்கு மூக்கியத்துவம் கொடுத்த காலம் மாறி, கதைக்கு பிரதான்யம் கொடுக்கும் காலம் வந்திருக்கிறது. இது வரவேற்கத் தக்க அம்சமே. படம் பார்க்கச் செல் லும் மகாஜனங்களினுடைய மன மாற்றமே இச்சூழ் நிலைக்குக் காரணம். மக்களின் ரஸனையை ஓரளவு படத் தயாரிப்பாளர்கள் புரிந்து கொண்டிருக் கின்றனர் என்பதை சமீபத்தில் வெளி வந்த சில படங்கள் நமக்குக் காட்டுகின் றன. ஹாலிவுட்டைக் காப்பியடித்துத் தயாரிக்கப்பட்ட காமாந்தகார ஆபாசத் துப்பாக்கிப் பயங்கரக் கதைகளும் வாழ் வோடு ஓரளவேனும் ஒட்டாத கதை களும் மக்கள் மத்தியில் எடுபடுவதில்லை. ஆபாசக் காட்சிகளைக் கண்டு ஜனங்கள் கைதட்டுவதில்லை. அதற்கு மாருக தங்கள் பிரச்னைகளைத் தொட்டுச் செல் லும் கட்டங்கள் படங்களில் வரும்போது மக்கள் ஆர்பரிக்கின்றனர். சாதாரண மனிதனின் அன்ருட வாழ்வுப் போராட் டங்கள், அவனது ஆசா பாசங்கள், இவை ஓரளவு இன்று வெளியாகும் படங்களில் தலை காட்டுகிறது. முழுக்க முழுக்க மக்களுடன் ஒன்றிய படங்கள் இன்னும் வெளிவர வில்லையானலும், இன்று காணும் ஓரளவு மாற்றமும் ஒரு நல்ல அறிகுறியையே காட்டுகிறது.

நம் நாட்டு சினிமாத் தொழிலை ஆராய்ந்து பார்த்தால் ஒரு உண்மை தெரிய வரும். சினிமா நட்சத்திரம்—பட முதலாளிகள் — கொட்டகைக்காரர்கள் இவர்களின் கூட்டுக் கொள்ளைக் கம்பெனியாகவே நமது படத் தொழில் இருந்து வந்திருக்கிறது. இந்த மும்மூர்த்திகளே பட உலகத்தை தங்கள் இஷ்டப்படி ஆட்டிப் படைத்து வந்தனர். யுத்தக் காலங்களில் அடித்த கள்ளப் பணத்தை தாராளமாக இத்தொழிலில் ஈடுபடுத்தி கொள்ளை கொள்ளையாக லாபத்தைக் குவித்து வந்தனர். மக்களுக்கு எட்டாத தேவலோகப் பிறவிகள் போல நடமாடி வந்தனர். இவர்களது ‘கொட்டம்’ இன்றைக்கு அடங்கிவிட்டது. உலகெங்கும் காணுகின்ற முதலாளித்துவப் பொருளாதார நெருக்கடியும், சமீபத்தில் வெளியான படங்கள் அத்தனையும் தோல்வியடைந்ததும் இந்த மும்மூர்த்திகளின் முதுகெலும்பையே முறித்துவிட்டன. தங்கள் ஜாலவித்தைகள் பயனளிக்காததன் காரணத்தால், படங்களில் நடிக்கப் புது முகங்களைத் தேடுவதிலும் அதன் மூலம் படத் தயாரிப்புச் செலவைக் குறைக்கத் திட்டமிடுகின்றனர். இதன் காரணமாக நட்சத்திரங்கள் என்று செருக்குடன் தலை நிமிர்ந்து நின்ற, பல நடிக நடிகைகள் செல்லாக் காசுகளாக மாறி, திறமையுள்ள பலர் முன்னணிக்கு வர முடிந்துள்ளது.

நமது படத் தயாரிப்பாளர்கள் இருக்கிறார்களே! இவர்களுக்கு மக்கள் கஷ்டப்படுவதைக் கண்டு மனம் பொருப்பதில்லை. அதற்காக அவர்கள் நமது சினிமாப் படங்களில் ஒரு பத்து பாட்டுகளைச் சேர்த்து விடுவார்கள். தேவையில்லாத இடங்களில் பாட்டுகள் வந்து நமது உயிரை வாங்கிவிடும். நமது மக்கள் சங்கீத ரஸனையுள்ளவர்கள்; அவர்களுக்கு நாட்டியம் என்றால் சர்க்கரை மாதிரி; தாங்கள் படும் கஷ்டத்தை ஓரளவேனும் மறக்கவே சினிமா பார்க்க ஜனங்கள் வருகிறார்கள்; ஆகவே அவர்களுடைய தேவையைப் பூர்த்தி செய்வது தான் நமது கடமை என்றெல்லாம் படாதிபதிகள் கூறுகின்றனர்.

நாம் உண்மையில் சங்கீத ரஸனையுடையவர்கள் தான்; இந்தியர்கள் பரம்பரையாகவே நாட்டியத்தையும் சங்கீதத்தையும் ஆதரித்து வந்திருக்கின்றனர். உலகிலேயே நம் நாட்டில் மட்டும் தான் சங்கீதக் கலைக்கும் நாட்டியக் கலைக்கும் உயரிய ஸ்தானத்தை நமது முன்னோர்கள் வழங்கி வந்திருக்கின்றனர். அவைகளெல்லாம் உண்மை. ஆனால் இன்று நாம் படங்களில் நமது பாரம்பரியத்தைப் போற்றிப் பாதுகாக்கப்படுகிறதா என்பதே கேள்வி. இல்லை என்பதை வெட்கத்துடன் ஒத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஹாலிவுட் சினிமாப் படங்களைப் பார்த்து காப்பியடித்த நாட்டியங்களும் பாடல்களும்தான் நமது படங்களில் காணப்படுகின்றன. இன்றைக்கு மக்கள் இம்மாதிரி கேலிக் கூத்துகளைக் கண்டு மனம் பொருப்பதில்லை. அவர்கள் வெறுக்கிறார்கள்.

நமது படங்கள் கலை நுணுக்கங்களில் வெகுதூரம் முன்னேறியுள்ளது என்பதை யாருமே மறுக்கமுடியாது. படப்பிடிப்பு, ஒலிப்பதிவு, காட்சி ஜோடனை எடிட்டிங், இந்த எல்லாத் துறைகளிலும் நாம் வெளிநாட்டாருடன் போட்டி போடக்கூடிய பல படங்களைத் தயாரித்திருக்கிறோம். இவைகளெல்லாம் மறுக்கமுடியாத உண்மைகள். ஆனால் இவ்வளவு நல்ல அம்சங்களும் அடிப்படையிலேயே கோளாறான கதைகளைப் பொறுக்குவதால் விழலுக்கு இறைத்த நீராக மாறிவிடுகின்றன. இக்குறைபாட்டை உடன் விலக்கத் தயாரிப்பாளர்கள் முற்படவேண்டும். அத்துடன் நமது படங்களில் தலைகாட்டும், அநாவசியமான காட்சி ஜோடனைகள் கூடுமான வரை நீக்கப்படவேண்டும். இதன் மூலம் தயாரிப்புச் செலவைக் குறைக்க முடியும்.

அர்த்தமில்லாத ராஜா ராணி கதைகளைப் பொறுக்கி, அதற்காக ஏராளமான செலவு செய்வது (உதாரணம், சந்திரலேகா, ஆன்) பொருள் நஷ்டம் மட்டுமல்ல; பலனற்ற முயற்சியும் கூட.

படக் கதை எழுதுகிறார்களே இவர்களிடம் சுயமுயற்சி என்பதைக் கடுகளவுகூடக் காணமுடிவதில்லை. வெளிநாட்டுப் படங்களை அப்படியே தழுவி கதைகள் எழுதுவது, அல்லது காலங்கடந்த அத்தை பாட்டி கதைகளுக்கு புது மெருகூட்டி தங்கள் சொந்த முயற்சி என்று விளம்பரப்படுத்துவது, இவைகளைத்தான் நாம் காண்கிறோம். இவைகள் கண்டிக்கத் தக்கன. அத்துடன். கதை எழுதும் புண்யாத்மாக்கள் கதைகளைக் கோர்வையாக எழுதவேண்டும் என்பதில் கருத்தைச்செலுத்துவதில்லை. இதன் காரணமாக டைரக்டர்கள் பூர்த்தியாகாத கதைகளுடன் படங்களைச் “சுட்டுத்தள்ளும்” முயற்சியில் இறங்கி, கோர்வை குலைந்து முன்னுக்குப் பின் முரணான கதைகள் உருவாகி அலங்கோலமாகக் காட்சியளிக்கின்றன. சில

சமயங்களில் இம்மாதிரிப் படங்களை பார்த்துவிட்டு சொப்பனவஸ்தை அனுபவித்தவர்களைப்போல கொட்டகையை விட்டு வெளிவருகிறோம். நமது வசன கர்த்தாக்களும், சினிமாக் கதை யெழுதுபவர்களும் தாங்கள் பெரும் ஊதியத்திற்கு உண்மையாக உழைக்கவேண்டும் என்று நினைக்கவேண்டும்.

இன்றைக்கு சினிமாக் கதாசிரியர்கள் ஒரு முக்கிய ஸ்தானம் வகிக்கிறார்கள். தங்களுக்குப் பிடித்த வசன கர்த்தாவின் பெயரைப் படத்தில் பார்த்ததும் பொது மக்கள் கைதட்டி ஆரவாரம் செய்வதை நாம் பார்க்கிறோம். முன் எந்தக்காலத்திலும் இல்லாத ஒரு உயரிய ஸ்தானத்தை இவர்கள் அடைந்துவிட்டனர். வரவேற்கத்தக்க அம்சம். இவர்களுடைய பொறுப்பு மகத்தானது. நமது மரபுக்கேற்ப, நமது கலை, இலக்கியம், நாடகம், மற்றும் சகல லலிதக் கலைகளையும் முன்னோக்கிச் செலுத்தக் கடமைப் பட்டிருக்கின்றனர். வட நாட்டைப் பொறுத்தவரை, அகமத் அப்பாஸ், ராஜேந்திரசிங் பெடி, கிருஷ்ண சந்தர், பண்டிட் சுந்தர்லால், ராமநாத் சாகர் போன்ற பிரபல எழுத்தாளர்கள் இன்று சினிமாத் துறையில் நுழைந்து நமது மக்களுக்கும், நாட்டிற்கும் மகத்தான சேவை செய்துவருகிறார்கள். இவர்களால் எழுதப்பட்ட படக்கதைகள் அமோக ஆதரவைப் பெற்றிருக்கின்றன. இவர்களை ஆதர்சமாக நமது தமிழ் நாட்டுக் கதாசிரியர்கள் கொள்ளவேண்டும் என விரும்புகிறோம். கதை வசனம் எழுதும் துறையில் இன்றுவரை தமிழ் நாடு ஒரு அடிகூட முன்னேறவில்லை. ஒட்டு மொத்தமாகப் பார்த்தால், நமது படங்களைப் பற்றி பெருமைப்பட பல நல்ல அம்சங்கள் இருக்கின்றன. காலப்போக்கில், நமது சினிமாக் கலைஞர்களும், மக்களுடன் ஒன்றிய படங்களைத் தயாரிக்க இன்னும் அதிகமாக முன் வருவார்கள் என நாம் நம்பலாம்.

ஆனால் நமது படத் தொழிலை அடியோடு அழித்து நாசஞ்செய்ய பல சக்திகள் முளையெடுக்க ஆரம்பித்திருக்கின்றன. இவைகளை ஆரம்பத்திலேயே கிள்ளி யெறியவேண்டும்.

நமது படத்தொழிலில் ஏற்பட்டிருக்கும் மந்த நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு வெளிநாட்டு மூலதனம் மெள்ள மெள்ளத் தலைகாட்டுகிறது. அமெரிக்கப் படத் தொழிலில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியின் காரணமாக ஹாலிவுட் பகாசுரர்கள் வெளிமார்க்கட்டை கைப்பற்ற முயற்சி செய்து வருகின்றனர். இவர்கள் கைவைக்காத இடமே கிடையாது. பிரிட்டன், பிரான்சு, இத்தாலி இந்நாடுகளில் இவர்கள் கைவரிசையைக் காட்டினர். அங்கு எதிர்ப்பு வலுக்க ஆரம்பித்தவுடன் புதுமார்க்கட்டுகளைத் தேட முனைந்தனர். இந்தியர்கள் தானே ஏமாந்தவர்கள். ஓரிரண்டு படங்கள், இவர்களது துணையுடன் இந்தியாவில் ஏற்கனவேயே தயாராகி உள்ளன. வர்ணப் படங்களின் மேல் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் புது மோகத்தை இந்த முதலாளிகள் பயன்படுத்தி, "கூட்டு வர்ணப் படத் தயாரிப்பு" என்பதாக ஸ்தாபனங்களை நிருவியிருக்கின்றனர். (பிரிட்டிஷ் படமுதலாளிகளுடைய கூட்டுறவுடன் தயாரான-ஜான்சி-கி- ராணி) அமெரிக்கப் பெரு முதலாளிகள் கை வைத்த இடம் துலங்கினதில்லை. இவர்கள் கைங்கரியத்துக்கு பிரிட்டிஷ், பிரஞ்சு இத்தாலிய சினிமாத் தொழில்கள் நமக்கு முன்னுதாரணமாகத் திகழ்கின்றன. காலம் கடப்பதற்கு முன்னர் நாம் உஷாராக வேண்டும்.

இந்த அபாயத்தைத் தவிர மற்றொரு அபாயமும் இந்தியப் படத்தொழிலை எதிர் நோக்கியிருக்கிறது. வெளிநாட்டிலிருந்து, குறிப்பாக அமெரிக்காவிலிருந்து ஏராளமான சினிமாப் படங்கள் இந்நாட்டைப் படையெடுக்கின்றன. குப்பை கூளங்களெல்லாம் இங்கு வந்து பணமாகின்றன. நல்ல நல்ல கொட்டகைகளில் இந்த அமெரிக்கக் குப்பைகள் வந்து திரையிடப்படுவதன் காரணமாக நமது படங்களுக்கு கொட்டகைகள் கிடைப்பதில்லை; நம் நாட்டுப் பணம் வெளிநாடுகளுக்கு ஏராளமாகக் கொள்ளை போகின்றன. ஆனால் அதே நேரத்தில் நமது படங்களுக்கு வெளி நாடுகளில் மார்க்கட் கிடைப்பதில்லை. வெளிநாட்டுப் படங்களுடன் சகல அம்சங்களிலும் போட்டி போடக்கூடிய படங்களுக்குக்கூட வெளிநாடுகளில் திரையிட அனுமதி கிடைப்பதில்லை.

ஜெமினி ஸ்டுடியோ போன்ற பெரிய ஸ்தாபனங்கள் வெளிநாடுகளில் தங்கள் படங்களைத் திரையிடுவதற்காக பகீரதப் பிரயத்தனங்கள் செய்து பார்த்தும் தோல்வியைத் தவிர வேறு காணவில்லை. நமது படங்களுக்கு மார்க்கட் கிடைக்காதபோது நாம் மட்டும் ஏன் மற்ற படங்களை இங்கு அனுமதிக்க வேண்டும்? இந்தக் கேள்வி இன்று நமது பட முதலாளிகளைச் சிந்திக்க வைத்திருக்கிறது. இந்த அமெரிக்க ஆக்ரமிப்புக்கு உடனடியாக முற்றுப் புள்ளிவைக்கவேண்டும். இன்றேல் நமது சினிமாத் தொழில் நாசமாகிவிடும்.

*

தச்சு மரம்

ஆர். ராம்கோபால்

மரங்கள் உயிரோடிருக்கும்போது நமக்கு வேண்டிய நிழல் தருகின்றன. கனிகள் கொடுக்கின்றன. காற்றில் உள்ள கரியமில வாயுவைத் தான் உட்கொண்டு நமக்குத் தேவையான பிராண வாயுவைக் கொடுக்கின்றன. பூமியின் உள்ளே உள்ள நீரை இழுத்துத் தன் இலைகள் மூலம் ஆவியாக மாற்றி காற்றில் உள்ள வெப்பத்தைத் தணிக்கின்றன. நம் கண்களுக்குக் குளிர்ச்சியைக் கொடுக்கின்றன. பயிர்களுக்கு உற்ற நண்பனான பட்சிகள் வந்து தங்க வசதியளிக்கின்றன. தன் பச்சை இலைகளை ஆடு மாடுகளுக்கு உணவாகக் கொடுத்து உதவுகின்றன. காய்ந்த இலைகளை நிலங்களுக்குச் சிறந்த எருவாகத் தந்து உதவுகின்றன. மனித சமூகத்துக்கு பல தொழில் துறைகளிலும் மற்ற வகைகளிலும் பயன் தரும் குலோரோபில் என்னும் பச்சையத்தையும், பிசின்வகைகளையும், மருந்துச் சரக்குகளையும் கொடுத்து உதவுகின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக நமக்கும், மற்ற ஜீவ ராசிகளுக்கும் ஜீவாதாரமான மழை மிகுதியாகப் பெய்ய உதவுகின்றன.

உயிரோடுள்ள மரங்களை நாம் வெட்டிவிட்டாலும் அவை நமக்குப் பல வகைகளில் பயன்படவே செய்கின்றன. வெட்டிய மரங்களை விறகுக்காக பயன்படுபவை, தச்சு வேலைக்காக பயன்படுபவை என்று இரண்டு பெரும் பிரிவாகப் பிரித்துவிடலாம். வீடுகள், பாலங்கள், கப்பல்கள், படகுகள், ரயில்வே காரேஜ்கள், வாகன்கள் முதலியவை கட்டுதல். கடைசல் வேலை, பொம்மைகள், கை வண்டிகள், மாட்டு வண்டிகள், சக்கரங்கள், விளையாட்டுக் கருவிகள், விவசாயக் கருவிகள், வாத்தியக் கருவிகள், ரயில்வே ஸ்லீப்பர் கட்டைகள், மின்சாரக் கம்பங்கள், பெட்டிகள், பெஞ்சுகள், நாற்காலிகள், சோபாக்கள், மேஜைகள், பீரோக்கள், அலமாரிகள் செய்தல் முதலியவற்றிற்குப் பயன்படும் மரங்கள் தச்சு மரங்கள் (Timbers) எனப்படும். தேக்கு, பலா, கருவேல், இலுப்பை, சிசு (Rose wood), வாகை (Siris) ஜாதிக்காய் (Caledonian Pine), கமலை (Trincomalee wood) தேவதாரு (White cedar or Toon), தோதகத்தி (satin wood) நாகலிங்கம் (Cannon ball), செகல்கண்டி (Ebony) நெட்டிலிங்கம் (Madras Asoka), நேராலி (Willow), வெப்பாலை (Ivory wood), கடம்பு, இலவு, நாவல், மா, சந்தனம் மகாகனி முதலியவை நம் நாட்டில் முக்கியமான தச்சு மரங்கள்.

உயிர் உள்ள ஒரு பொருளிலிருந்து உயிர் நீங்கிவிட்டால், உயிர் நீங்கிய சிறிது காலத்தில் அப்பொருள் அழிவுபடும். இயற்கையின் இந்நியதிக்கு உட்பட்டவையே மரங்களும். ஆனல் மனிதன் தன் முயற்சியால் இயற்கையின் இந்நியதியை வெகுவாக வெற்றி கண்டு, வெட்டுண்ட மரங்களை ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கெடாமல் பாதுகாக்கும் முறைகளைத் தெரிந்து கொண்டான். மரங்களைக் கெடாமல் பாதுகாக்கும் முறை இன்றோ, நேற்றோ அல்லது இவ்விஞ்ஞான யுகத்திலோ ஆரம்பமாகவில்லை. கிருஸ்துவுக்கு வெகுகாலத்துக்கு முன்பே மரங்களைப் பாதுகாக்கும் முறைகளை மனிதன் அறிந்திருந்தான். பழங்கால எகிப்தியர்கள் இக்கலையில் வல்லுனர்களாக இருந்தார்கள் என்பதற்குப் பல சான்றுகள் இருக்கின்றன. தேவதாரு எண்ணெய் (Cedar oil), ஒலிவ எண்ணெய் (Olive oil), ஸ்பைக்நார்டு எண்ணெய் (Spikenard oil) முதலியவைகளை முற்காலத்து மக்கள் மரங்

களைப் பாதுகாக்க உபயோகித்ததாக பிலினி (Pliny, the elder 23—79B. C) கூறுகிறார். மரங்களைக் கருக்கும் முறை (Charring) முற்காலத்தில் மேல் நாடுகளில் பிரபலமாக இருந்ததாகத் தெரிகிறது. நம் நாட்டிலுள்ள பழங்காலக் கோவில்களையும், கோட்டைகளையும், அரண்மனைகளையும் பார்க்குமிடத்து நம் முன்னோர்களும் மரங்களைப் பாதுகாக்கும் முறையை அறிந்திருந்தனர் என்பதே தெளிவாகிறது.

மரங்களைப் பாதுகாக்க இப்பொழுது கையாளப்பட்டு வரும் முறைகள் நவீனமானவை. இவையெல்லாம் பத்தொன்பதாவது நூற்றாண்டிலும், அதன் பிறகு இந்த நூற்றாண்டிலும் தோன்றியவையே. கடந்த நூற்றாண்டில் உலகில் பல நாடுகளில் ரயில் போக்குவரத்தும், தந்திப் போக்குவரத்தும் அபரிமிதமான வளர்ச்சியடைந்தன. இதனால் ரயில்வே ஸ்லீபர்கட்டைகளுக்கும், தந்திக் கம்பங்களுக்கும் வெகுவாகத் தேவையும் கிராக்கியும் தோன்றின. ஆகையால் இத்துறையில் பலர் ஆராய்ச்சி செய்யத் தொடங்கினர். இதன் பயனாக கி. பி. 1838-ல் மரங்களைக் கெடாமல் பாதுகாக்க நவீன முறையொன்று முதன் முதலாகக் கண்டு பிடிக்கப்பட்டது. நம் நாட்டுத்தேக்கும் ஆஸ்ட்ரேலியா நாட்டு ஜாரா (Jarrah) வும் இயற்கையாகவே நீண்ட காலம் கெட்டுப் போவதில்லை எனவும் கண்டறியப்பட்டது. இதனால் உலகில் மற்ற நாடுகளில் இம்மரங்களுக்கு வெகுவாகக் கிராக்கி பெருகியது.

மரத்தை வெட்டியதும் அதில் நீர் அம்சமே மிகுதியாக அடங்கியிருக்கும். இந் நீர் அம்சத்தை முதலில் அகற்றவேண்டும். அப்படி அகற்றாவிட்டால் மரம் கெட்டுவிடும். மரத்திலுள்ள நீர் அம்சத்தை நீக்கி அதைக் கெடாமல் பாடம் செய்வதையே "சீசனிங்" (seasoning) எனக் கூறுவார்கள். எம்மரத்தையும் முதலில் இப்படிப் பாடம் செய்ய வேண்டியது அவசியம். இப்படிச் செய்வதால் தச்சு வேலைகள் செய்ய சௌகரியமாக இருப்பதோடு மரத்தின் உறுதியும் இரண்டு மடங்காகிறது. மர அணுக்களில் (Wood cells) உள்ள நீர், நீங்கி விடுவதால் பாதுகாப்பு முறைகள் (Preservation processes) பிரயோகிக்கும்போது அங்கே பாதுகாப்புப் பொருள்கள் (Preservatives) புகுந்து மரத்தைக் கெடாமல் பாதுகாத்து நிற்க வசதியும் ஏற்படுகிறது.

நம் நாட்டில் மரங்களைப் பாடம் செய்ய சாதாரணமாக இரண்டு முறைகள் கையாளப்படுகின்றன. ஒன்று நிழல் முறை (shadow or Air seasoning) மற்றது நீர்முறை (Water seasoning) நேரடியாக வெயில் படாத நிழலான இடங்களில் காற்றுபடும்படி அடுக்கி வைத்துக் காய வைப்பது முதல் முறை. தண்ணீரில் பதினைந்து நாட்களோ அல்லது அதற்கு மேலாகவோ போட்டு வைத்திருந்து எடுப்பது இரண்டாவது முறை. இவ்விரண்டு முறைகளிலும் பல குறைபாடுகள் உண்டு. மேல் நாடுகளில் இதற்கு முக்கியமாக மூன்று விதமான முறைகள் கையாளப்படுகின்றன. நீராவிமுறை (steaming), சுடு காற்று முறை (Hot air seasoniug) மக்னீல் முறை (McNeill's process) என்பவையே அவை. முதல் முறையில் நீராவிப் பிரயோகம் சில மணி நேரம் நடக்கும். இரண்டாவது முறையில் காற்றுப் புகமுடியாத அறைகளில் மரங்களை அடுக்கி வைப்பார்கள். பிறகு 200oF, உஷ்ணமுள்ள காற்று குழாய்கள் மூலம் மூன்று நாள் உள்ளே செலுத்தப்படும். உள்ளே சென்ற உஷ்ணக்காற்று மரத்திலுள்ள தண்ணீர் அம்சத்தை தன்னிடம் உறிஞ்சிக் கொள்ளும். இப்படித் தண்ணீர் அம்சம் கலந்த காற்றை அறையிலிருந்து பம்புகளின் உதவியால் வெளியேற்றி விடுவார்கள். மூன்றாவது முறையான மக்னீல் முறைப்படி ஒரு காளவாயில் மரங்களை ஒன்றுக்கொன்று இடம்விட்டு அடுக்குவார்கள். காளவாயில் உள்ள மொத்த இடத்தில் மூன்றில் ஒரு பங்கு காலியாக இருக்கவேண்டும். மரங்களுக்கு அடியில் பாதுகாப்புப் பொருள்கள் கலந்த தொட்டிகள் இருக்கும். காளவாயை மூடி நெருப்பிடுவார்கள். மரத்தின் தரத்துக்குத் தகுந்தபடி 2 வாரத்திலிருந்து 8 வாரம் வரை நெருப்பை எரிய விடுவார்கள். இந்த முறையே மற்ற எல்லா முறைகளையும் விடச் சிறந்ததாகக் கருதப்படுகிறது. நீராவி, சுடுகாற்று முறைகளில் நம் நாட்டு முறைகளைப் போல் சில குறைபாடுகளுண்டு.

இப்படிப் பாடம் செய்த மரங்களை மழை, காற்று, வெயில், நீர் முதலியவை தாக்கும் வகையில் கப்பல்கள் அல்லது படகுகளின் அடித்தளமாகவோ ரயில்வே ஸ்லீப்பர் கட்டைகளாகவோ, வீடுகளின் மேற்கூரைகளாகவோ, கிணற்றடியிலோ உபயோகிக்க வேண்டி வந்தால் அவை சீக்கிரம் கெட்டுப்

போகும், கரையான்களும் இவற்றைச் சுலபமாகத் தாக்கி அழித்துவிடக்கூடும். சில வண்டுகளும் பூச்சிகளும்கூட தாக்கி நாசம் செய்யும் அபாயம் உண்டு. ஆகையால் இந்த அபாயங்களிலிருந்து மரங்களைக் காப்பாற்ற வேறு சில முறைகளைக் கையாள வேண்டும். இம்முறைகளைக் கையாள ஆரம்பிப்பதற்கு முன் எம்மரத்தையும் முதலில் கூறியபடி பாடம் செய்திருக்க வேண்டியது மிகமிக அவசியம்.

கரையான்களின் தாக்குதலிலிருந்து மரங்களைக் காப்பாற்ற அவற்றின் மீது கிரியோசோட் (Creosote) அல்லது சோலிக்னம் (solignum) பூசலாம். பத்துப் படி தண்ணீருக்கு ஒரு ராத்தல் காப்பர் சல்பேட் (Copper sulphate) விதம் கலந்து அக்கலவையில் சில நாட்கள் மரத்தை போட்டு வைத்திருந்து எடுத்தும் உபயோகிக்கலாம். இப்படிச் செய்தால் கரையான்கள் தாக்குவதில்லை.

கரையான் உள்பட மேலே கூறிய எல்லாவித அபாயங்களிலிருந்தும் மரங்களைப் பாதுகாக்க தர்சமயம் பிரஷ் முறை (Brush Method), பவல்முறை (Powell process), சிலிண்டர் முறை (Cylinder process), பெதல் முறை (Bethell process). லோவ்ரி முறை (Lowry process), கர்டு முறை (Curd process), ரூபிங் முறை (Ruping process) எனப் பலவகையான பாதுகாப்பு முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. இவற்றில் முதல் நான்கும் முக்கியமானவை. இம்முறைகள் எல்லாவற்றிலும் நிலக்கரித் தார் (Coal Tar), மரத்தார் (Wood Tar), மெர்க்குரி குலோரைடு (Mercuric chloride), ஜிங்க் குலோரைடு (Zinc chloride), காப்பர் சல்பேட் (Copper sulphate), கிரியோசோட் (Creosote) போன்ற ஏதாவதொரு மரப் பாதுகாப்புப் பொருளை (Wood preservative) மரத்தூள் இருக்கும் காலியான மர அணுக்களுக்குள் செலுத்துவார்கள். பாடம் செய்த மரங்களில் உள்ளே உள்ள மர அணுக்களிலிருந்து நீர் அம்சம் நீங்கி அவை காலியாக இருக்கும் என மேலே நாம் கூறினோமல்லவா? இந்தக் காலியான அணுக்களுள் மேலே கூறிய ஏதாவதொரு ரசாயனப் பொருளை நிரப்புவதுதான் முன் கூறிய ஏழு பாதுகாப்பு முறைகளின் பிரதான அலுவலாகும். ஆகையால் இம்முறை வெற்றி பெற இரண்டு முக்கிய விஷயங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும். முதலாவது பாடம் செய்த மரத்தில் உள்ளே உள்ள மர அணுக்கள் உள்பட எல்லா அணுக்களிலிருந்தும் ஈரப்பசை பூரணமாக நீங்கி பாதுகாப்பு ரசாயனத்தை ஏற்கக் காலியாக இருக்க வேண்டும். இரண்டாவது பாதுகாப்பு ரசாயனங்கள் எல்லா அணுக்களையும் சென்றடைந்து நிரப்பும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். இவ்விரண்டு காரியங்களும் அரைகுறையாக நடந்தேறி இருந்தால் பூரண வெற்றியை எதிர்பார்ப்பது முடியாது, பவல் முறை ஒன்று மாத்திரம் இதற்கு விதிவிலக்கானது. இம்முறையை அனுஷ்டிக்குமுன் மேலே கூறியபடி மரங்கள் பாடம் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்னும் அவசியமில்லை.

பிரஷ் முறையில் ஒரு தொட்டியில் வேண்டிய அளவு கிரியோசோட் ஊற்றி அதன்மேல் மரங்களை அடுக்குவார்கள் மரங்களை அடுக்குமிடம் மூடி ஒரு காளவாய் போன்றிருக்கும், தொட்டிக்கடியில் நெருப்பிட்டோ அல்லது நிராவி சுழல் குழாய்கள் (Steam Coils) உதவியாலோ மெதுவாகச் சூடு எற்றுவார்கள் உஷ்ணநிலை 90°–95° C. உயர்ந்ததும் மேலும் உஷ்ணப்படுத்துவதை நிறுத்தி குளிரும்படி விட்டு விடுவார்கள். இப்படிச் செய்வதால் மரங்கள் உப்பி அதன் உள்ளே உள்ள அணுக்களில் அடங்கியுள்ள காற்றுவெளியேறி அவ்விடத்தில் கிரியோசொட் புகுந்து தங்க வசதி ஏற்படுகிறது, பலமுறையில் சாகரின் (Saccharine) என்னும் ஒருவகை சருக்கரைக் கலவையை பிரஷ் முறைக்குக் கூறியபடி தொட்டிகளில் நிரப்புவார்கள் இதோடு சிறிது பாஷாணத்தை (Arsenic) யும் கலந்து கொள்ளுவார்கள். மற்றப்படி எல்லாம் பிரஷ் முறையைப் போலவே தான். இம்முறை ஆஸ்டிரேலியாவில் பிரபலமாயிருக்கிறது. அங்கிருந்து நம் நாட்டுக்குப் பெருவாரியாக வரும் ரயில்வே ஸ்லீபர்கட்டைகள் எல்லாம் இம்முறைப்படியே தயாரிக்கப்படுகின்றன. உருளை முறையில் 6-9 அடி குறுக்களவும், 30-160 அடி நீளமும் உள்ள உருளை வடிவமான பெரியவாலை இயந்திரங்கள் (Cylindrical retorts) இருக்கும் இதுசதுர அங்குலத்துக்கு 200 ராத்தல் அழுத்தத்தை200 (lbs, per sq inch pressure) ச் சமாளிக்கும் சக்தி பெற்றவைகளாக இருக்கும். இதன் ஒருபக்கம் திறந்து மறுபக்கம் மூடி இருக்கும். திறந்

திருக்கும் வழியாக உள்ளே மரங்களைக் கொண்டு செல்ல தண்டவாளங்கள் போட்டிருக்கும். ட்ராலிகளின் உதவியால் உள்ளே மரங்களைக் கொண்டு சென்று அடுக்கலாம். தண்டவாளங்களுக்கு அடியில் நீராவிக்குழாய்கள் பொருத்தப்பட்டிருக்கும். மேலே தனியாக மற்றொரு உருளை வடிவமான இயந்திரத்தில் ரசாயனக் கலவை இருக்கும். கீழே உள்ள சிலிண்டரில் மரங்களை அடுக்கி முடிந்ததும் அதன் வாயை காற்றுப் புக முடியாமல் மூடி மேலே உள்ள கலவையை இயந்திரங்களின் உதவியால் ஆவி ரூபமாக உள்ளே செலுத்தி சதுர அங்குலத்துக்கு 200 ராத்தல் அழுத்தமும் பிரயோகிப்பார்கள். இதனால் மர அணுக்களில் ரசாயன ஆவி புக வசதி ஏற்படுகிறது. பெதல் முறையில் மேலே கூறியபடி சிலிண்டர்களில் மரங்களை அடுக்கி சதுர அங்குலத்துக்கு 100-180, ராத்தல் அழுத்தத்தை சுமார் ஒருமணிநேரம் பிரயோகித்து பிறகு கிரியோ செட் கலவையில் சில நாட்கள் மரங்களைப் போட்டுவைத்திருந்து எடுப்பார்கள். இப்படிச் செய்வதால் ஒரு கன அடி மரம் சுமாராக 7—15 ராத்தல் கிரியோசொட்டைக் குடித்து வலுப்பெறும். லோவ்ரி முறை கிரியோ செட் முறை போன்றதே, ஆனால் ஒரே ஒரு வித்தியாசம். சிலிண்டரில் உள்ள மரங்கள் மீது சதுர அங்குலத்துக்கு 190—200, ராத்தல் அழுத்தத்தைப் பிரயோகித்து உடனே சிலிண்டருக்குள்ளேயே கிரியோசொட்டை 200 o F உஷ்ணப் படுத்திப் பாய்ச்சுவார்கள். இப்படிச் செய்வதால் ஒரு கன அடி மரம் 6—7 ராத்தல் கிரியோசொட்டை குடிக்கும் ரூபிங், கர்டு முறைகள் அவ்வளவு முக்கியமல்ல அவையும் பெரும்பாலும் பெதல் முறையை அனுசரித்தவைகளே.

இவைகளன்றி பெயின்ட், வார்னிஷ், தார், பாலிஷ் முதலியவைகள் பூசுவதும் மரங்களின் ஆயுளை அதிகரிக்கும். ஈரமான இடங்களில் நடும் மரத்தூண்களை அடிப்பக்கம் சுமார் கால் அல்லது அரை அங்குலம் சுட்டுக் கரியாக்கி நட்டால் அவற்றை ஈரம் பாதிப்பதில்லை.

சமீபத்தில் மேல்நாடுகளில் செயற்கை மரம் செய்யும் முறை ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. மரச்சேதாரங்களை (Wood Wastes) இயந்திரங்களின் உதவியால் கூழாக்கி அதோடு சில ரசாயனப் பொருள்களைக் கலந்து வேண்டிய அளவிலும் உருவிலும் மரப்பலகைகளாகவோ அல்லது மரச்சாமான்களாக்வோ வார்ப்படம் செய்கிறார்கள் இவை பார்ப்பதற்கு அழகாகவும், உறுதியாகவும் இருப்பதோடு வேண்டிய உருவில் மலிவாகக் கிடைக்கின்றன. சாதரண மரங்களால் செய்யப்படும் பொருள்களில் காணப்படும் குறைபாடுகளும் இவற்றில் இல்லை. கரையான். வணடு, பூச்சி. ஈரம் முதலியவைகளும் இவற்றை பாதிப்பதில்லை. ஆகையால் மேல் நாடுகளில் இதற்கு கிராக்கி அதிகரித்து வருகிறது. அங்கே இப்பொழுது இத்தொழிலில் ஈடு பட்டுள்ள 12 தொழிற்சாலைகள் தோன்றியுள்ளன. நம் நாட்டில் டேராடூன் வன ஆராய்ச்சிக்கழகமும் இத்துறையில் ஆராய்ச்சி செய்து வெற்றி பெற்றிருக்கிறது. அது தயாரித்த செயற்கை மரப்பலகைகள் சமீபத்தில் டில்லியில் நடந்த ரயில்வே சதாப்திகண் காட்சியில் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன. இதனால் நம் நாட்டிலும் கூடிய விரைவில் தச்சு மரத்தொழிலில் புதியயுகம் ஒன்று பூக்கலாம் என்னும் நம்பிக்கை ஒன்று இப்பொழுது தோன்றி இருக்கிறது.

★

சாஸ்திரியார் மகன்

ஒரு பிராமணப் பையன் தனது விளையாட்டு வண்டி தெருவில் ஒடிந்து போனபடியால், அதைப் பார்த்து அழுது கொண்டு நின்றான். அதைக் கண்ட ஒரு சிப்பாய் — "குழந்தாய், ஏன் அழுகிறாய் ?" என்று கேட்டான்.

பையன் :- " வண்டி ஒடிஞ்சு போச்சு "

சிப்பாய் :- " அதற்காக அழாதே. வீட்டிற்குப் போ. உன்னுடைய தகப்பனார் அதைச் செப்பனிட்டுக் கொடுத்து விடுவார்.

பையன் :- எங்கப்பா சாஸ்திரியார், அவராலே வண்டியை நேர்படுத்திக்கொடுக்க முடியாது. அவருக்கு ஒரு தொழிலும் தெரியாது. யார் வீட்டிலாவது அரிசி கொடுத்தால் வாங்கிக் கொண்டு வருவார். வேறே ஒரு இழவும் தெரியாது " என்று விம்மி விம்மியழுதான். சிப்பாய் சிரித்துக் கொண்டே போய்விட்டான்.

— **பாரதியார்**

ஊழல்களை ஒழித்த சீனு

வித்தியா பிரகாஷ் தத்

1951-ம் வருஷம் டிசம்பர் முதல் ஏப்ரல் 1952—வரை சீனு முழுதும் பெரிய இயக்கம் ஒன்று தீவிரமாக நடத்தப்பட்டது. முன் எப்போதும் காணுத ஒரு பெரிய மாறுதலை ஏற்படுத்தி விட்டது இந்த இயக்கம். நாங்கள் ஏப்ரல் மாதம் அங்கே சென்றிருந்தோம். அப்போதும் இதைப்பற்றியே எங்கும் பேச்சு. இந்த இயக்கத்திற்கு 'ஸான் பான்' அல்லது 'மூன்றுக்கு எதிர்ப்பு' இயக்கம் என்று பெயர். நிர்வாக ஊழல் பாருளை வீணுக்குதல், அதிகாரத் திமிர் இவை மூன்றையும் களைவதே இதன் நோக்கம். கூடவே "ஊபான்" அல்லது, "ஐந்துக்கு எதிர்ப்பு" என்று இதற்கு அனுசரணையான மற்ரெரு இயக்கமும் நடந்தது. அதுவே லஞ்சம், வரி கட்டாமல் தப்புதல், சர்க்காரை ஏமாற்றுதல், சுயலாபத்துக்காக சர்க்காரின்பொருளாதாரத் தகவல்களைத் திருடுதல், சர்க்காரின் உடமைகளைக் களவாடுதல், இந்த ஐந்தும் தான். சர்க்கார் இலாக்காக்களிலும், கட்சிகளிலும், வியாபாரக் கூட்டத்தாரிடையிலும், குடும்பங்களிலும் பரவிக் கிடந்த இந்தத் தீமைகளைக் களைய மக்கள் தீவிரமாக உழைத்தார்கள். 1952 ஜனவரி தொடக்கத்தில், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பல பிரமுகர்களும், பெரிய பெரிய சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் ஊழல் காரணங்களுக்காகக் கைது செய்யப்பட்டார்கள், மக்கள் முன் பகிரங்க விசாரணைக்குக் கொண்டு வரப்பட்டனர். தினசரி, பிரபல கம்யூனிஸ்டுகள் பலர் வசமாக மாட்டிக்கொண்டனர். தக்க தண்டனை கிடைத்தது. இந்த இயக்கத்திற்கு சகல மக்களும் கண்ணும் கருத்துமாகத் தீவிரமாக ஒத்துழைத்தனர். சர்க்கார் காரியாலயங்கள், பாங்கிகள், வியாபார ஸ்தலங்கள் இங்கெல்லாம் பாதி நாள் தான் வேலை நடந்தது, பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் இவற்றில் பாடமே நடக்கவில்லை என்று சொல்லலாம். மாணவர்கள் எல்லோரும் இந்த இயக்கத்தில் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொண்டதே இதற்குக் காரணம். கடைகண்ணிகள் பேருக்குத் திறந்து வைத்திருந்தார்கள் அவ்வளவுதான். ரேடியோ மூலமும், ஒலிபெருக்கி வாயிலாகவும் இதே பிரசாரம் தீவிரமாக நடந்தது. பத்திரிகைகள் தங்கள் பூரண ஒத்துழைப்பைக் கொடுத்தன. சினிமாப் படங்கள் மூலம் மக்களுக்கு ஊழல்களைத் தத்ரூபமாக எடுத்துக் காண்பித்தனர். நாடே இந்த இயக்கத்தில் பங்கு கொண்டது.

பல காலம் சீனுவில் ஊழல் என்பது தீராத நோயாக நாட்டையே சீர்குலைத்து வந்தது. அரசியலிலும், சமூகத்திலும், சுரண்டலும் தரித்திரமும் வேர்ப் புழுக்களாக இருந்து அரித்து வந்தன. இப்போது சீன சர்க்காரின் நிதி மந்திரியாக இருக்கும் போ-யி-போ என்பவரே இதை ஒப்புக் கொண்டிருக்கிறுர். ஊழல்களைக் களைய முடியாததன் காரணமாகத்தான் சியாங்-கே ஷேக் வீழ்ச்சியுற்றுர். கம்யூனிஸ்ட்டுகள், சுயநலம் இல்லாதவர்களாகவும், நேர்மையாளர்களாகவும் இருந்ததால் மக்களிடையே மகத்தான செல்வாக்கு பெற்றுர்கள். அதிகாரத்தைக் கைப்பற்றியதும் அவர்

ஊழல்களை ஒழித்துக் கட்டுவதில் இன்று சீனு நமக்கு முன்னுதாரணமாகத் திகழ்கிறது; சீனத்தின் மகத்தான இந்த சாதனையை நேரிடையாகப் பார்த்தவர் இக் கட்டுரையாளர். இவர் சமீபத்தில்சீனு சென்று திரும்பிய இந்திய தூது கோஷ்டியின் காரியதரிசி.

கள் நிர்வாகத்தை சீர்ப்படுத்தும் வேலையில் முனைந்தார்கள். இருந்தாலும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள், ஒரு நாட்டை, அதிலும், குறிப்பாக 45 கோடி மக்களைக் கொண்ட ஆசியாவிலேயே மிகப் பெரிய நாடான சீனாவை ஆள்வது என்றால் சுலபமா? ஷாங்காய், காண்டன், மூக்டன், பீக்கிங், நாங்கிங், டியன்ஸ்டின் முதலிய பெரிய பெரிய நகரங்களைக் கைப்பற்றியதும், நீண்டகாலமாக கடுமையாக உழைத்து வந்த கம்யூனிஸ்ட தலைவர்களில் பலர் சுக வாழ்க்கையில் மனம் செலுத்தினார்கள். வியாபாரிகளோடு சேர்ந்து ஊழலில் சிக்கிக் கொண்டனர். இதனால் மற்ற தலைவர்கள் இத்தனை வருஷம் பட்ட சிரமம் வீணாகிவிடுமோ என்ற கவலை ஏற்பட்டது.

1951ம் வருஷ ஆரம்பத்தில் லஞ்ச ஊழல் சம்பந்தமான பல வழக்குகள் நடந்தன. ஜூச்சுவான் பிரதேசத்தில் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்களில் பெரும்பாலோரைக் கட்சியை விட்டு விலக்கவேண்டியதாயிற்று. 1951 ஏப்ரலில் சங்செள பிரதேச ரெவின்யூ இலாகாவில் 31 அதிகாரிகள் லட்சக் கணக்கான சீன டாலர்களையும், போக்கு வரத்து இலாகாவில் 17 அதிகாரிகள் கோடிக் கணக்கான டாலர்களையும் கையாண்டு விட்டதாகத் தெரிந்தது. இவற்றையெல்லாம் விட மிகப் பெரிய மோசடி ஹோபி மாகாணத்தில் நடந்ததுதான். 20 வருஷ காலமாகத் தொடர்ந்து, பொது உடமைக்காகவே தொண்டாற்றி, மக்கள் மத்தியில் செல்வாக்குடன் விளங்கி வந்த இரண்டு பிரபல கம்யூனிஸ்ட் தலைவர்கள் அகதிகள் நிவாரணத்துக்கும், துறைமுகம் கட்டுவதற்கும் திரட்டிய பொது நிதியிலிருந்து பல கோடி டாலர்களைக் கையாண்டு விட்டார்கள்.

இந்த வழக்குகளைப் பற்றி மா-சே. துங் குக்குத் தெரிந்தவுடன் அவர் உடனே தீவிரமாக இதற்கு பரிகாரம் செய்ய முனைந்தார்.

"பழைய புரட்சி வீரர்கள் என்றால் அவர்களுக்கு என்ன வேண்டுமானாலும் சலுகை யுண்டு என்று அர்த்தம் இல்லை. ஒருவனது சென்ற கால சேவை எவ்வளவு பெரியதாக இருந்த போதிலும் சரி, பின்னால் ஊழலில் சிக்குண்டால் அவன் எதற்கும் லாயக்கற்றவனாகி விடுகிறான். இந்த மாதிரிப் பேர்வழிகளைச் சும்மா விடக்கூடாது" என்று அவர் தீர்மானித்தார். ஆகவே மக்களுக்கு அவர் வேண்டுகோள் விடுத்தார். கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்களிலும், அரசாங்கத்தில் உள்ளவர்களிலும் யார் யார் லஞ்சம் வாங்குகின்றனர்; கள்ள மார்க்கட் நடத்தும் வியாபாரிகள் யார், யார் என்று அம்பலப்படுத்தும்படி அவர் கேட்டுக் கொண்டார். பொதுமக்களிடத்தில் அவருக்கு என்றுமே குறையாத நம்பிக்கையுண்டு. சீனாவில் ஒருதரம் மானம்போய் விட்டால் அப்புறம் அவர்கள் தலை காட்டவே முடியாது. பசுத்தோல் போர்த்த பல கம்யூனிஸ்டு அங்கத்தினர்கள் கையும் களவுமாகப் பிடிபட்டு சமூகத்தில் மீண்டும் தலை தூக்க முடியாத நிலைக்கு வந்துவிட்டார்கள். புதிய சீனாவின் ஒப்பற்ற தலைவர்கள் சீனா முன்னேற வேண்டுமானால் தங்களிடமுள்ள குறைகளைக் களைந்துதான் ஆகவேண்டும் என்று உறுதி கொண்டார்கள். இப்படிப் பகிரங்க விசாரணை நடத்தினால் மானம் போய் விடுமோ என்று அவர்கள் அஞ்சவில்லை. "இந்தப் பழைய விஷப் பூண்டுகளைப் பொசுக்கினால்தான் புதிய சீனாவுக்கு விமோசனம் உண்டு" என்கிறார் சீனப் பிரதமர் சூ-என்-லாய்.

சென்ற வருஷத்தில் முதன் முதலாக மஞ்சூரியாவில் பொது மக்கள் இந்த முயற்சியில் ஈடுபட்டார்கள். மத்திய சர்க்காரிலேயே முதலில் ஊழல்களைக் களைய முற்பட்டார் மா-சே-துங். பண ஊழல்களைக் கண்டுபிடிக்க ஆரம்பித்துக் கடைசியில் பலவித ஊழல்களையும் நீக்குவது என்ற முடிவுக்கு வந்தார். "லட்சியங்களுக்காகப் பாடுபட வேண்டும், சிக்கனமாக வாழ்வு நடத்த வேண்டும்" என்று அக்டோபர் 1951-ல் நடந்த மகாநாடு ஒன்றில் மா-சே-துங் தம் உறுதியை வெளியிட்டார். இப்படி ஒரு பக்கம் லஞ்ச ஊழல் நீங்கிச் சிக்கனமும், உற்பத்தியும் பெருகவும், மறுபக்கம் பழைய சமூக அடிப்படை மாறிப் புதியதோர் சமூகம் ஏற்படவும் வழி வகுத்தார். கட்சி நிர்வாகத் திறமையினாலும் மக்களின் ஒத்துழைப்பினாலும் சந்தேகாஸ்பதமான பல பேர்வழிகளை விசாரணைக்குக் கொண்டு வந்தார். ஒவ்வொரு இடத்திலும் பட்சபாதமற்ற தலைவர்களை நியமித்து மக்கள் பயமின்றி ஊழல்களை வெளியிடலாம் என்று பறையறைந்தார்கள். இலாகாத் தலைமை அதிகாரிகள், ஆலை மானேஜர், கடைச் சொந்தக்காரர் இப்படிப் பல பிரமுகர்களை, முதலில் சிலபேர் முன்னிலையிலும், பிறகு பகிரங்கமாகவும் விசாரணை செய்தார்கள். இப்படிச் சீனா முழுதுமே நடைபெற்றது.

இந்த மாதிரி விசாரணையால் பயங்கரக் குற்றங்கள் ருஜுவாகிப் பிரபல கம்யூனிஸ்டு தலைவர்கள் மூன்று பேரைத் தூக்கிலிட நேர்ந்தது. ஒரு மாகாணத்தில் மந்திரியாக இருந்து தம் செல்வாக்கு முழுமையையும் சொந்த நலனுக்காகப் பயன்படுத்திக் கொண்ட ஒரு பெரிய வியாபாரிக்கும் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது. பிறகு நடந்த விசாரணைகளில் தூக்குத் தண்டனை நிறுத்தப்பட்டது. குற்றம் ருஜுவானதும் இனி மேல் யோக்கியமாக நடப்பதாக உறுதியளித்தவர்களுக்கு அதற்கேற்ற தண்டனை யளித்து நல்லவர்களாக மாற வாய்ப்பு கொடுத்தார்கள். "இப்படிச் செய்ததால் இனி ஒழுங்காக நடந்து கொள்ள வேண்டும் என்று பொதுவாக ஓர் அச்சம் எல்லோருக்கும் ஏற்பட்டது" என்கிறார் நிதி மந்திரி போ-பி-போ.

உள்ளூறத் தம் தவறுகளை உணர்ந்து யோக்கியமாக நடந்து கொள்ளுபவர்களை மன்னித்துவிடுகிறார்கள். மா-சே-துங்கும் அவரது சிறந்த தோழர்களும். இந்தப் பெருந் தன்மைதான் மக்களுக்கு அவர்களிடத்தில் உள்ள அபார அன்புக்குக் காரணமாகும். பலாத்காரத்தினால் ஒருவரை மாற்ற முடியாது. சீர்திருந்த வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதே அவர்களது நோக்கம். மக்களை நம்பி மா-சே-துங் ஆரம்பித்த இந்த இயக்கம் வெற்றி பெறுவதில் சந்தேகம் என்ன? அதனால்தான் புதிய சீனா இன்று ஊழல் ஒழிந்து நேர்மையோடு முன்னேறி வருகிறது. ★

குடி

ஸெனிகா சொன்னது போல குடிப்பது தன்னை வேண்டுமென்றே பைத்தியமாக்கிக்கொள்ளுவது மட்டுமல்ல, முட்டாளாக்கிக் கொள்ளுவதும்தான் என்று யாரோ சொல்லியிருக்கிறார்கள்.

—எம்மான்ஸ்

உலகத்தின் ராணுவங்களெல்லாம் சேர்ந்தாலும் குடியைப்போல அவ்வளவு அதிகமான ஆட்களைக் கொல்ல முடியாது; அவ்வளவு அதிகமான சொத்து, சுகங்களைக் கொள்ளையடிக்கவும் முடியாது.

—பேகன்

நான் விசாரித்த குற்ற வழக்குகளில், குடிப் பழக்கமில்லாதவர் செய்த குற்றங்கள் மிக மிகக் கொஞ்சம்.

—நீதிபதி காலரிட்ஜ்

கடலை விட மது அதிகமான ஆட்களை முழ்கடித்துக் கொண்டிருக்கிறது.

—பப்லியஸ் ஸைரஸ்

மதுவும் வாலிபமும் நெருப்பில் நெருப்பிட்டமாதிரி.

—பீல்டிங்

மது ஓர் அருமையான பானம்தான். அதற்கு நாம் நன்றிகூறத்தான் வேண்டும். ஆனால் அதற்கு முன்னாலேயே, உலகத்தில் தண்ணீர் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறதே!

—ஜான் எலியட்

கையில் மதுப் புட்டியை வைத்திருக்கும் வாலிபன் யோசிக்க வேண்டிய விஷயங்கள் இரண்டு. அதாவது மதுப் புட்டியை ஒழிப்பதா? அல்லது தன்னை ஒழிப்பதா?

—பிலிப்ஸ் ப்ருக்ஸ்

இந்திய ஜனத்தொகைப் பெருக்கத்தை கட்டுப்படுத்த வேண்டும் என்று கூறுகிறார் சென்ஸஸ் கமிஷனர். மூன்று குழந்தைகளுக்கு மேல் பெற்றெடுக்கும் தாய்மார்களை சமூக பகிஷ்காரம் செய்யவேண்டும் என்று ஆணையிடுகிறார்.

இவரின் வாதங்களுக்கு புள்ளி விவரங்களுடன் இக் கட்டுரை பதிலளிக்கிறது.

ஜனப் பெருக்கக் கட்டுப்பாடு நாடகம்

வ. விஜய பாஸ்கரன்

இந்தியாவின் ஜனத்தொகை பெருகி வருவதைப் பற்றி அபாய அறிவிப்பு எழுந்துள்ளது. இந்திய சென்ஸஸ் கமிஷனர் ஸ்ரீ கோபாலசாமி இந்த அபாயச் சங்கை ஊதியிருக்கிறார். இன்றைக்குள்ள வேகத்தில் ஜனத்தொகை பெருகிக்கொண்டே சென்றால் இன்னும் முப்பது ஆண்டு காலத்தில் இந்திய ஜனத்தொகை 52 கோடியாக மாறுமென்று அவர் கணக்கிடுகிறார். இந்திய சர்க்கார் வகுத்திருக்கின்ற அபிவிருத்தி திட்டங்களில் தொழில் வளர்ச்சிக்கும் உணவுப் பொருள் உற்பத்திக்கும் முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றனர்; அவர்கள் போடும் கணக்குப்படியே உணவு தானியங்கள் விளைச்சல் அதிகரித்தாலும், வளர்ந்து வரும் ஜனத்தொகையை வைத்துக் காப்பாற்ற வசதியிருக்காது; மக்கள் அரைப் பட்டினியும் கால்பட்டினியுமாகவே காலந் தள்ள நேரிடும்; வேலையில்லாத் திண்டாட்டம் பெருகும்; எனவே ஜனத்தொகை அதிகரிப்பதைக் கட்டுப்படுத்த வேண்டியது மிக மிக அவசியம்; அதற்கான திட்டங்கள் உடனடியாகத் தீட்டப்பட வேண்டும்; நமது தாய்மார்கள் மூன்று குழந்தைகளுக்கு மேல் பெற்றெடுக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றெல்லாம் சென்ஸஸ் கமிஷனர் ஸ்ரீ கோபாலசாமியின் அறிக்கை கூறுகிறது.

ஸ்ரீ கோபாலசாமியின் அறிக்கை நமக்குப் புதிதல்ல. இதற்கு முன்னரும் பலர் இதே கருத்தைக்—கருத்தடை அனுஷ்டிப்பை கட்டாயமாக அமுலாக்குவது—கூறி வந்திருக்கின்றனர். குறிப்பாக சென்ற சில வருஷங்களாகவே இம்மாதிரி பேச்சுக்களும், ஆராய்ச்சிக் கட்டுரைகளும், பிரசங்கங்களும் அதிகரித்து வந்திருக்கின்றன. நமது வறுமைக்கு அடிப்படைக் காரணமே ஜனப்பெருக்கம் தானென்று பிரபல அரசியல் தலைவர்களிலிருந்து பொருளாதார பண்டிதர்கள் வரை சகலரும் முழக்கி வருகின்றனர். இந்தப் பிரச்னையைப் பற்றி சட்டசபைகளிலும், பத்திரிகைகளிலும் நீண்ட வாதப் பிரதி வாதங்கள் நடைபெற்று வருகின்றன. கருத்தடையைப் பற்றி விஞ்ஞான பூர்வமாகக் கற்றுத் தருவதற்கான சாத்தியக் கூறுகளை ஆலோசித்து வருகின்றனர் அரசாங்கத்தார். இது ஒரு தேசியப் பிரச்னை என்று பிரமாதப் படுத்தப்படுகிறது. அமெரிக்காவிலிருந்து கருத்தடை நிபுணர்கள் இந்நாட்டில் இறக்குமதி செய்யப்படுகின்றனர். இம்மாதிரி அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 'நிபுணர்' ஒருவரே ஆப்ரஹாம் ஸ்டோன் என்பவர். இவர், இந்திய சர்க்காரிடம் இந்திய ஜனத்தொகையைக் குறைக்க வழி முறைகளை வகுத்துத் தந்திருக்கிறார். இந்த நிபுணர்கள் குடும்பக் கட்டுப்பாடு பற்றி ஓயாமல் பிரசங்கமாரிகள் பொழிகின்றனர். கருத்தடை முறைகளைப் பரிட்சார்த்தமாக அனுஷ்டித்துப் பார்க்க இந்திய அரசாங்கம் ஐந்தாண்டுத் திட்டத்தில், 65 லட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. இதற்கான திட்டம் தீட்டப்பட்டு செயல்படவும் தொடங்கிவிட்டது. இந்தத் திட்டங்களும், இதற்காகச் செலவிடப்படும் ரூபாய்களும் அவசியமா என்ற கேள்வி இன்று எழுகிறது. ஸ்ரீ கோபாலசாமியின் அறிக்கையை முழுதும் ஊன்றிப் படித்த பிறகு இப்பிரச்னையைப் பற்றி வாதப் பிரதிவாதங்கள் பலமாக பத்திரிகையில் அடிபடுகின்றன. ஸ்ரீ கோபாலசாமியின்

அறிக்கையைப் பற்றி இந்தியப் பிரதமர் ஸ்ரீ. நேரு தமது அபிப்பிராயத்தைக் கூறும்போது இது அநாவசிய பீதி என்று கூறினர்.

"இந்தியா ஒரு பெரிய நாடு. எனவே ஜனத்தொகை அதிகரிப்பும் அதிகமாக இருக்கிறது. ஆனல் ஜனத்தொகைப் பெருக்க வேகம் சாதாரணமாக எல்லோரும் நினைப்பதைப் போல அவ்வளவு தீவிரமாக இல்லை" என்று நேரு குறிப்பிடுகிறார்.

ஸ்ரீ கோபாலசாமியின் அறிக்கையின் சாராம்சம்தான் என்ன?' 1921-ம் வருடம் வரை ஜனத்தொகை அதிகரிப்பு, நமது உணவுப் பொருள்களின் உற்பத்தியுடன் ஒட்டியேயிருந்தது. பிறப்பும் இறப்பும் சரிக்கட்டிக் கொண்டு போய் விட்டன. 1921-ம் வருடத்திற்குப் பின் நிலைமையில் மாற்றம் கண்டுவிட்டது. பிறப்பின் வேகம் அதிகரிக்காவிட்டாலும், மரணத்தின் விகிதம் குறைந்துவிட்டது. வியாதிகளைத் தடை செய்வதற்கான நவீன மருத்துவ வசதிகளும், ஆரோக்கியமான வாழ்வு வாழ வசதிகள் அதிகரித்திருப்பதுவுமே இந்த மரண விகிதம் குறைந்ததற்கு காரணமாகும். 1921-ம் ஆண்டுக்கு முன்னல் ஏற்பட்ட பயங்கரப் பஞ்சங்களைப்போல நாட்டில் பஞ்சம் பரவலாக ஏற்படவில்லை. காலக் கிரமத்தில் இன்னும் பல வசதிகள் ஏற்படுவதின் காரணமாக மரண விகிதம் அதிகமான அளவுக்குக் கட்டுப்படுத்தப்படும். குழந்தைகள் பிறப்பது குறையாமல் இருக்கும்போது மரண விகிதம் மட்டும் குறைந்தால் அநாவசியமாக ஜனத்தொகைப் பெருக்கம் ஏற்பட ஏதுவாகும். வருடமொன்றுக்கு அரைக் கோடி மக்கள் வீதம் ஜனத்தொகை அதிகரிக்கும். இம்மாதிரி வேகமாக ஜனத்தொகை அதிகரிப்பதால் மக்கள் எல்லோருக்கும் பிழைப்புக்கு வழி ஏற்பட முடியாது. சகலருக்கும் நல் வாழ்வு வாழ வசதிகள் கொடுக்க இயலாமல் போய்விடும். அதனல் பஞ்சமும் பட்டினியும் வேலையில்லாத் திண்டாட்டமும் பெருகும். இதை மாற்ற ஒரே சஞ்சீவி மருந்து ஜனத்தொகையைக் குறைப்பதே. குடும்பக் கட்டுப்பாட்டை அமுல் நடத்த வேண்டும்! ஒரு பெண்ணுவது மூன்று குழந்தைகளுக்கு மேல் பெற்றெடுக்கக் கூடாது என்று கண்டிப்பு இருக்க வேண்டும். இன்றேல் இந்தப் பயங்கர நெருக்கடியை சமாளிக்க முடியாது என்று கோபாலசாமி கூறுகிறார். இதுதான் ஸ்ரீ கோபாலசாமி அறிக்கையின் சாராம்சம். அவர் கணிப்பு சரியா? இதை ஆராயுமுன் நாம் உலக ரீதியாக இம்மாதிரி நடைபெறும் பிரசாரங்களையும் ஓரளவு ஆராய வேண்டும்.

"ஜனத்தொகையைக் குறை" என்ற கூக்குரலை முதன் முதலில் எழுப்பிய மகானுபாவர் ரெவரண்ட் தாமஸ் ராபர்ட் மால்துஸ் என்பவர். இவர் பிரிட்டிஷ் பாதிரியார். இவர் 18-ம் நூற்றுண்டில் வாழ்ந்தவர். இவர் 1798-ம் ஆண்டில் ஜனத்தொகைப் பிரச்னையைப் பற்றி ஒரு புத்தகம் எழுதினர். இந்தப் புத்தகத்தில் இவர் மிதமிஞ்சிய ஜனப் பெருக்கமே பசி பட்டினிகளுக்குக் காரணம் என்று கூறினர். சமுதாய அமைப்பில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை மூடி மறைத்து நடைமுறையில் உள்ள சமூக அமைப்புக்கு வக்காலத்து வாங்கியது இவரது புத்தகம். இதனல்தான் அன்றை ஆளும் வர்க்கம் இவரைப் போற்றிப் புகழ்ந்தது. ஜன சமூகத்தைக் காக்க முன் வந்துள்ள அவதார புருஷர் என்று இவர் வர்ணிக்கப்பட்டார். எந்த கால கட்டத்தில் இவர் இக்கருத்தை வெளியிட்டார்.

18-ம் நூற்றுண்டின் இறுதியில் நடைபெற்ற பிரஞ்சுப் புரட்சி உலகையே ஒரு குலுக்குக் குலுக்கிவிட்டது. பிற நாடுகளிலுள்ள மக்கள் மத்தியில் ஒரு பெரிய எழுச்சியை அது உண்டுபண்ணியது. சகல பகுதி மக்களையும் தட்டியெழுப்பிய இந்தப் புரட்சியின் சங்க நாதத்தைக் கண்டு அன்றை பிரிட்டிஷ் ஆளும் வர்க்கம் கதி கலங்கி நின்றது. பிரிட்டனில் வர்க்கப் போராட்டங்கள் அதன் உச்ச கட்டத்தை அடைந்து நின்றது. அக்காலத்தில், பிரிட்டிஷ் கலோனியல் ஆட்சிக்கு அடிகோலப்பட்டது. காலனிச் சுரண்டல் ஆரம்ப காலம். இந்த கால கட்டத்தில்தான் மால்துஸின் புத்தகம் வெளியானது. மால்துஸின் வாதங்கள் அன்றைய ஆளும் வர்க்கத்திற்கு பேராயுதங்களாக உதவியது. காலனிச் சுரண்டல் முறைகளுக்கு நியாயம் கற்பித்தது இவரது கருத்துக்கள்.

தொழிலாளர் படும் துயரத்திற்கு காரணம் அவர்களே என்று கூறியது மால்துஸின் வாதங்கள். சுருக்கமாகக் கூறினல் மால்துஸின் தத்துவங்கள் ஆளும் வர்க்கம் செய்யும் அக்கிரமங்களுக்கு திரையாகவே உபயோகப்பட்டன.

இவர் தமது தத்துவங்களை விஞ்ஞான ரீதியில் வரையறுத்துக் கொள்ளவில்லை. அவர் காலத்திலேயே இவரது கருத்துக்களின் சூன்யம் அம்பலமாகிவிட்டது. விஞ்ஞானிகள் எவரும் இவரை ஒத்துக் கொள்ளவில்லை.

செத்துச்சுண்ணாம்பாகி, புதைகுழியில் கிடக்கும் இந்தத் தத்துவங்களுக்கு உயிர் ஊட்ட அவ்வக் காலங்களில் முயற்சிகள் நடைபெற்றன. எப்போதெப்போது முதலாளித்துவ உலகில் நெருக்கடி முற்றித் தீவிரமாகிறதோ அப்போதெல்லாம் மால்துஸின் வாதங்களைப் பிரசாரம் செய்வது பலமாக இருக்கும்.

முதலாளித்துவப் பொருளாதாரத்தில் ஏற்படும் நெருக்கடி, பெருவாரியாக வேலையில்லாத் திண்டாட்டத்தையும், மக்களின் வாழ்க்கைத் தரத்தின் வீழ்ச்சியையும், கோடிட்டுக் காட்டுகிறது. மக்களைச் சுரண்டி வாழும் கூட்டம் இந்த நேரத்தில் தங்களது சுரண்டலுக்கு நியாயம் கற்பிக்கவும், தங்களது இரும்புப் பிடியை பலப்படுத்தவும், அவர்கள் நடத்தும் யுத்தங்களுக்கு நியாயம் கற்பிப்பதற்கும் மால்துஸிய வாதங்களை ஆளும் வர்க்கம் உபயோகப்படுத்தி வருகிறது.

சமீப காலத்தில் பிரிட்டிஷ் அமெரிக்க ஏகாதிபத்தியங்களின் கைக்கூலி விஞ்ஞானிகள் மால்துஸின் தத்துவங்களுக்கு புது மெருகு கொடுத்து பிரதான்யப் படுத்துகின்றனர். ருஷ்யாவிலும் சீனாவிலும் மக்கள் சுபிட்சத்தை நோக்கி முன்னேறுவதைக் கண்ட இந்தப் பிற்போக்குப் பிண்டங்கள், தங்கள் காலடியில் அழுந்திக் கிடக்கும் மக்களை ஏமாற்றி அவர்கள் புரட்சிகரமான பாதையில் செல்லுவதைத் தடுத்து நிறுத்துவதற்காக ஜனத்தொகைக் குறைப்புப் பிரசாரத்தில் இறங்கியுள்ளனர்.

உலகத்தின் உணவு 'உற்பத்தியைக் கணக்கிலெடுத்துப் பார்த்தால் இன்றைக்குள்ள உலக ஜனத்தொகையான 200 கோடி மக்களையே காப்பாற்றுவதற்கு இயலாது என்றும் ஆகவே உலகின் ஜனத்தொகையை சரி பாதியாகக் குறைக்க வேண்டுமென்றும் இவர்கள் கணக்கிடுகின்றனர். மற்றொரு புது மாதிரியான சித்தாந்தத்தையும் இவர்கள் உலகின் முன் வைக்கின்றனர். இந்த சித்தாந்தத்தை ஜூலியஸ்ஹக்ஸ்லி என்ற பிரிட்டிஷ் விஞ்ஞானி கிளப்பியிருக்கிறார். இவர், ஏழை மக்கள்தான் பிரஜா விருத்தியில் அதிகமாக ஈடுபடுகின்றனர். ஆனால் அதே நேரத்தில் சொகுசுக்காரர்கள்—மேல் வர்க்கத்தார்-குறைவாகவே பிரஜா விருத்தி செய்கின்றனர். இதன் காரணமாக மனித ராசியே நாளுக்கு நாள் க்ஷீணித்து வருகிறது என்று கூறுகிறார். உலகில் பெருவாரியான கருப்பர்கள் அதிக அளவு விருத்தியடைவது மனித குலத்திலேயே உயர்ந்தோரான வெள்ளையர்கள் பட்டினியால் மடிவதில் கொண்டுவிடும் என்று நீண்ட நாட்களாகவே கூறப்பட்டு வரும் நாஜிக் கூற்று இது. ஆகவேதான் இந்தத் தத்துவ போதகாசிரியர்கள் தாழ்ந்த வகுப்பு மக்கள் அதிகமாக அதிகமாக, அவர்களின் தேவையும் அதிகமாகிக் கொண்டே செல்லுமென்றும், எனவே பெருவாரியான மக்களுக்குத் தேவையான உணவுப் பண்டங்களின் விலைவாசிகளை உயர்த்திக்கொண்டே செல்ல வேண்டுமென்று உயர்ந்த ரக மக்களான வெள்ளையர்களுக்கு உபதேசம் செய்து வருகின்றனர். அமெரிக்காவில் "உபரியாக உள்ளவை" என்று ஏராளமான உணவுப் பொருட்களை நாசம் செய்யும் கோரத்தை வருடா வருடம் நாம் பார்த்தே வருகிறோம். இவைகளெல்லாம் இவர்களின் சுயரூபத்தை நமக்கு அம்பலப்படுத்துகிறது. ஜனப் பெருக்கத்தைப் குறைக்க வேண்டும் என்று காட்டுக் கூச்சல் போடுவதெல்லாம் இவர்களின் சுரண்டலை மறைக்கச் செய்யும் சதியே தவிர வேறில்லை என்பது நமக்கு நன்கு நிரூபணமாகிவிட்டது. இவர்களின் சதித் திட்டங்களுக்கு ஆதரவாகத்தான் மால்துஸின் சித்தாந்தங்கள் பயன்படுகின்றன.

இவர்கள் ஜனத் தொகையைக் குறைக்க என்ன வழி வகுத்திருக்கின்றனர். "பிறந்தவன் இறப்பது உறுதி; அது அவன் விதி. நோய் நொடிகளின் மூலம் லட்சக் கணக்கான மக்கள் வருடா வருடம் மரணமடைகின்றனர்; இது இயற்கை. ஜன சமூகத்தை ஒரு கட்டுக்கோப்புக்குள் வைத்துக் கொள்வதற்காகவே ஆண்டவனால் அளிக்கப்பட்டிருக்கும் வரப்பிரசாதம் நோய் நொடிகள் என்பவை. ஆனால் நவீன வைத்திய முறைகளால் நோய் நொடிகளைக் கட்டுப்படுத்தப் பட்டிருக்கின்றன. இச்செய்கை இயற்கைக்கு விரோதமானது; ஆண்டவனின் இச்சைக்கு மாறானது; காலரா, பிளேக் போன்ற கொள்ளை நோய் பரவினால் அதைத் தடுக்க தடுப்பு முறைகள் கைக்கொள்ளக் கூடாது. அப்போதுதான் இயற்கையின் சமனப்படுத்தும் வேலைக்குத் தடங்கல் ஏற்படாது" என்று கூறுகின்றனர். ஆகவே முதன் முதலில் இந்தத் தத்துவ ஞானிகளின் கொள்கைப்படி செய்ய வேண்டியது, இருக்கும் ஆஸ்பத்திரிகளை மூட வேண்டியது; டாக்டர்கள் குறைக்கப்பட வேண்டியது; டாக்டர்கள்தான் இன்றைய நெருக்கடிக்குக் காரணம். அவர்கள்மட்டும்ஜனங்களுக்குகுறிப்பாக

ஏழை மக்களுக்கு—வைத்தியம் செய்யா மலிருந்தால் ஜனத்தொகைப் பெருக்கத் தின் வேகத்தைக் கட்டுப்படுத்தியிருக்க முடியும்.

மற்றொரு வழி யுத்தம். யுத்தம் நடை பெற்றால்தான் அதிகப்படியாக உள்ள ஜனத்தொகையைக் குறைக்க முடியும். ஒன்று யுத்தம் அல்லது வியாதிகளைப் பரப்புவது இந்த இரண்டு முறைகளால் மட்டுமே, மனித சமுதாயம் இன்று சிக்கித் தவிக்கும் நெருக்கடியிலிருந்து காப்பாற்றப்படும். இதுதான் நவீனமால் துஸியன்களின் மருந்து. இந்த இரண்டு வழிகளும் கைக்கொள்ள சாத்தியமில்லை யானால் சுலபமான வழி ஒன்றே ஒன்றி ருக்கிறது அதுதான் கருத்தடை. இந்த மூன்று வழிகளில் ஏதாவது ஒரு வழி யைக் கடைப் பிடிக்காதவரை மனித குலத்தின் அழிவைத் தடுக்க முடியாது இவர்களின் இக்கருத்துகள் உண்மை யில் யாருக்கு உபயோகமாக இருக் கிறது? யுத்த வெறியர்களுக்குத்தான் என்பதில் சந்தேகமே யில்லை. ஏனென் றால் இவர்கள் வாதப்படி இன்றைக் குள்ள உபரி—ஜனத் தொகையைக் குறைக்க யுத்தம் ஒன்றுதானே வழி. அதனால்தான் அமெரிக்க யுத்த வெறியர் கள் மால்துஸியன் கொள்கைகளைத் தலை மேல் தூக்கி வைத்துக் கொண்டாடுகிறார் கள். உலக ரீதியில் மக்கள் குலத்திற்கு எதிராக நடைபெறும் இத்தகைய நாச காரப் பிரச்சாரத்தையே இந்தியாவில் ஸ்ரீ கோபாலசாமி எதிரொலிக்கிறார். இவர் கொடுக்கும் புள்ளி விவரங்களையே ஆராய்ந்தால் இவர் வந்துள்ள முடிவுகள் எத்தனை அபத்தமானது என்பது விளங்கும்.

இவர் கொடுக்கும் புள்ளி விவரங்களி லிருந்து ஒரு உண்மை புலனாகிறது. இந்திய ஜனத்தொகையில் ஆண் மக்கள் எண்ணிக்கைத்தான் அதிகம், பெண் களின் எண்ணிக்கை வருடா வருடம் குறைந்துகொண்டே வருகின்றன என் பது இவர் கொடுக்கும் புள்ளி விவரங் கள். இதைக் கொண்டு பார்த்தால் இவர் கூறும் வருடமொன்றுக்கு அரைக் கோடி ஜனத்தொகை அதிகரிப்பு என் பது எப்படிச்சாத்தியம். அதுமட்டுமல்ல ஜனத்தொகையில் வயது வந்தவர்கள் எவ்வளவு பேர், வயது வராதவர்கள் எவ்வளவு பேர், என்ற கணக்கு கொடுக் கப்படவில்லை. ஆண்களில் வயது வந்த வர்கள் அதிகமாகவும் பெண்களில் குறைவாகவும் இருந்தால் சென்ஸஸ் கமிஷனரின் கணக்குப்படி ஜனத் தொகைப் பெருக்கம் அளவுக்கு மீறி எப்படி ஏற்படும்? சரி, அப்படியே கட்டுப் படுத்த முடியாத அளவு ஜனப் பெருக் கம் ஏற்படும் என்றே வைத்துக்கொண் டாலும் இவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய இந்தியாவால் இயலுமா இயலாதா? இயலும் என்றே நாம் நினைக்கிறோம்.

இன்றைக்கு நமது நாட்டில் விளையும் 700 லட்சம் டன் தானியத்திற்குப் பதி லாக 940 லட்சம் டன் தானியம் விளை விக்கப்பட வேண்டும் என்று ஸ்ரீ கோபாலசாமி கூறுகிறார். அவர் கணக் குப்படி 1951-ல் நமது பற்றுக்குறை 34 லட்சம் டன்கள். அதாவது அன்றைக்கு நமது மொத்த விளைச்சல் 556 லட்சம் டன். நமக்குத் தேவையாயிருந்தது 590 லட்சம் டன். அதாவது ஒரு ஆண்டில் இந்திய ஜனத் தொகைக்கு 21 நாட்கள் தேவையான உணவுப் பொருள்தான் பற்றுக்குறையாக இருந்தது. நமது ஜனப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தா விட்டால் நாம் இன்னும் அதிகமாக 1961-ம் 21 சதமானம் அதிகமாகவும், 1971-ல் 37 சதமானம் அதிகமாகவும், 1981-ல் 54 சதமானம் அதிகமாகவும் உணவு தான்யம் உற்பத்தி செய்ய வேண்டும். இந்த அளவு அதிக உற் பத்தி நம்மால் செய்ய முடியாது என் பது சென்ஸஸ் கமிஷனரின் வாதம். ஏன் முடியாது என்றுஸ்ரீ.கோபாலசாமி கூறுகிறார்?

இந்தியாவின் மொத்த நிலப்பரப்பு 812,568,320 ஏகரா நிலம்; இதில் காடு மலைப்பகுதிகளை நீக்கிவிட்டால் 504,423,912 ஏகரா நிலம் சாகுபடிக்கேற் றவை. அதாவது சராசரி ஒரு இந்திய னுக்கு 1·40 ஏகரா நிலம் கிடைக்கிறது. சாகுபடிக்கேற்ற இந்த நிலங்களில் சுமார் 268,429 ஆயிரம் ஏகர் நிலத்தில் தான் இன்று சாகுபடி செய்கின்றனர். சாகுபடிக்கேற்ற நிலங்களிலேயே ஏராளமான அதாவது சுமார் பாதி பகு திக்கு மேற்பட்ட நிலங்கள் இன்றும் தரி சாக இருக்கின்றன. இவை தவிர, சாகு படிக்கேற்ற நிலங்களல்ல என்று இவர் கள் கூறும் கணக்கே தவறானது என்றே நாம் அபிப்பிராயப் படுகிறோம். மலைப்பிரதேசங்களில் இருக்கும் நிலங் களும், காடுகளை ஒட்டியுள்ள நிலங்க ளும் சாகுபடிக்கேற்றவை யல்ல என்ற வரிசையில் இவர்கள் சேர்க்கின்றனர்.

உலகிலுள்ள மக்கள் எல்லோருக்கும் போதுமான உணவு அளிப்பதற்கு ஒவ் வொரு நபருக்கு இரண்டரை ஏக்கரா நிலம் தேவை யென்றும் ஆனல் யதார்த் தத்தில் ஒரு நபருக்கு ஒன்றரை ஏகர்

நிலம் வீதம் தான் இன்று சாகுபடியாகிறதென்றும் அமெரிக்க நிபுணர்கள் கணக்கிடுகின்றனர். இந்தக் கணக்கே தவறுதலானது. நாம் விவாதத்திற்கு இவர்கள் நிர்ணயிப்பு உண்மையானதென்றே எடுத்துக்கொள்ளுவோம். அப்படிப் பார்த்தாலும்கூட இந்தியாவின் சாகுபடிக்கான நிலப்பரப்பைக் கணக்கிட்டால் சுமார் 44 சதவிகிதப் பகுதிதான் இன்றைக்கு சாகுபடிக்கு உபயோகிக்கப்படுகிறது. நல்ல மழை உள்ள பகுதிகளில்மட்டும் சாகுபடி செய்தாலே இன்றைக்குள்ள ஜனத்தொகையைப்போன்று மூன்று மடங்கு மக்களை இந்தியாவால் காப்பாற்ற முடியும். விவசாய நிலப்பகுதிகளை மூன்று மடங்கு நான்கு மடங்காக்க முடியும். அதாவது இந்திய மக்களுக்கு இன்றைய நிலைக்கு மாறாக ஆளுக்கு மூன்று ஏகரா சாகுபடி நிலம் கிடைக்கும் சென்ஸஸ் கமிஷனர் கூறும் அதிகபட்ச 52 கோடி ஜனங்களுக்கு மாறாக 90 கோடி ஜனப் பெருக்கம் ஏற்பட்டாலும் எல்லோருக்கும் உணவுகொடுக்க நம்மால் இயலும்.

நாம் இங்கே கூறும் கணக்கெல்லாம் இன்றைய அறுவடை அளவை அடிப்படையில் கொண்டது. தற்காலம் இந்தியாவில் சராசரியாக ஒரு ஏகரருக்கு 12·5 மணங்கு நெல் சாகுபடி செய்யப்படுகிறது. சமீபத்தில் உணவு உற்பத்திப் பெருக்க இயக்கத்தின்படி இந்தியாவிலேயே...150 மணங்குக்குமேல்நெல் மகசூல் கண்டு பரிசு பெற்றவர்கள் ஏராளம். இன்றுள்ள வசதிகளையே திறமையாக உபயோகிப்பதின் மூலமும் தக்க அளவு எரு இடுவதின் மூலமாகவும் இவர்கள் தங்கள் மகசூலை அதிகப்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே இன்றைய கணிப்புக்கு அடிப்படையாக இருந்த அறுவடை அளவைப்போல கிட்டத்தட்ட 12 மடங்கு அதிகமாக அறுவடையை அதிகக் கஷ்டமில்லாமலேயே பெறமுடியும் என்பது தெளிவாகிறது. இது இன்றைக்கு சாகுபடியில் உள்ள நிலங்களை மட்டும் கணக்கிலெடுத்தால் நாம் காண்பது. இதற்கு மாறாக இந்தியாவில் தரிசாக உள்ள நிலங்களை சாகுபடிக்கேற்ற நிலங்களாக மாற்றி இந்த புது முறைகளின் மூலம் அறுவடை அளவை அதிகப்படுத்தினால் சென்ஸஸ் கமிஷனர் கூறுவதைப்போல 45 கோடி மக்களுக்கு மட்டுமல்ல 150—200 கோடி ஜனங்களுக்குப் போதுமான உணவை நாம் விளைவிக்க முடியும்.

நமக்கு இது எந்த உண்மையைக் காட்டுகிறது? விஞ்ஞான முறையில் விரிவான அளவில் நமது விவசாய முறையில் மாற்றங்களைச் செய்யாமலேயே, இன்றைக்கிருக்கிற வசதிகளைக்கொண்டே இந்திய ஜனத்தொகை இரண்டு மடங்கு அதிகமானால்கூட அத்தனை பேருக்கும் உணவளிக்க முடியும். ஆகவே சென்ஸஸ் கமிஷனர் பயப்படுவதைப்போல நிலைமை ஒன்றும் பயங்கரமாக இல்லை.

அதிக உணவு விளைச்சல் செய்வதில் உடனடியாக அரசாங்கம் அக்கரை காட்டவேண்டும். அதற்கான வழிமுறைகளை உடனே வகுக்க வேண்டும் என்று அவர் அரசாங்கத்திற்கு கூறியிருந்தால் அவர் இந்த அறிக்கையை தயார் செய்ய எடுத்துக்கொண்ட சிரமத்திற்கு பலனுண்டு. அதை விடுத்து மால்தூசியன், சாக்குருவி வேதாந்தம் படிக்க முற்பட்டது கண்டிக்கத்தக்கது. இதற்காக அவர் அதிகக் கஷ்டப்பட்டிருக்க வேண்டியதில்லை. வறுமையையும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஒழித்துக்கட்டி மக்களுக்கு சுபிட்ச வாழ்வை யளித்துள்ள சீனத்தையும். சோவியத் யூனியனையும் அவர் முன்னுதாரணமாக எடுத்திருக்கலாம்.

நேற்றுவரை இந்தக் காட்டுமிராண்டி சித்தாந்த வாதிகள் தங்களது வாதங்களுக்கு சீனத்தை உதாரணமாகக் காட்டிவந்தனர். பிற்போக்குப் பிண்டங்களின் ஆட்சியில் சீனம் தன்னுடைய மக்கள் அத்தனை பேருக்கும் சோற்றுக்கு வழி செய்ய இயலாமல் இருந்தது. பஞ்சமும் நோயும் நித்திய சம்பவங்களாக இருந்து வந்தன. சீனத்தின் வறுமைக்கும், அதன் கஷ்ட நஷ்டங்களுக்கும் அதிக ஜனத் தொகைதானென்றும் ஆகவே அவசியமற்ற ஜனங்களை ஒழிக்க வேண்டுமென்றும் இந்த ஏகாதிபத்தியப் பாதுகாவலர்கள் புத்திமதிகள் கூறிவந்தனர். ஆனால் மக்களது ஆட்சியை ஏற்படுத்திய சீனா ஜனப்பெருக்கத்தை தடைசெய்ய நடவடிக்கைகளை எடுக்கவில்லை. அதற்கு மாறாக உணவுப்பொருள் உற்பத்தியில் அக்கறை காட்டிற்று. விவசாய சீர்திருத்தங்களின் மூலம் 1949ம் வருடத்தைவிட 42 சத விகிதம் உணவு உற்பத்தியை உயர்த்தியிருக்கிறது. தங்கள் தேவைக்குப் போக இந்தியா போன்ற நாடுகளுக்குத் தானியங்களை ஏற்றுமதியும் செய்கிறது; பருத்தியின் விளைச்சல் மும்மடங்கு அதிகரிக்கப்பட்டிருக்கிறது; நோய் நொடிகள் கட்டுப்படுத்தப்பட்

டுள்ளன. எங்கும் மக்கள் சுபிட்சத்தை நோக்கி முன்னேறுகின்றனர்; மக்களது வாழ்க்கைத்தரம் மேலும் மேலும் முன்னேறுகிறது; இவைகளெல்லாம் மூன்றே ஆண்டுகளுக்குள் நடத்திக்காட்டிய மகத்தான சாதனைகள்.

இன்றைய உலகத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் வறுமையையும், நோயையும் போக்கி மக்களுக்கு நல்வாழ்வு கொடுத்துள்ள நாடுகள் சோவியத் யூனியன், சீனா, கிழக்கு ஐரோப்பிய மக்கள் ஜனநாயக நாடுகள் இவைகளே. மற்றப் பகுதிகளில் வாழும் மக்கள் முதலாளித்துவப் பொருளாதாரப் பிடிப்பில் வாழ்கின்றனர். முதலாளித்துவம் செத்தொழிந்துகொண்டிருக்கும் முறை. அங்குள்ள ஆளும் வட்டாரங்கள் தங்கள் பணப்பையை நிரப்புவதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். தங்கள் கீழ் உள்ள மக்களின் சுபிட்சத்தில் அக்கறை இவர்களுக்குக் கிடையாது எந்த அளவு தங்கள் சுரண்டல் யந்திரத்தை முடுக்கி மக்களைக் கசக்கிப் பிழிய முடியுமோ அந்த அளவு இந்த அசுரக் கூட்டம் முயற்சி செய்கிறது. இதன் காரணமாகத்தான் முதலாளித்துவ உலகில் மக்களது பிரச்னை ஒன்று கூடத் தீர்க்கப்படுவதில்லை. தினே தினே வேலையில்லாதார்களின் பட்டியல் நீண்டுகொண்டே வருகின்றன. பஞ்சமும் நோயும் தினசரி சம்பவங்களாக இங்கே கோர நர்த்தனம் இடுகின்றன. ஆகவே மக்கள் அந்தந்த இடங்களில் தங்கள் நல்வாழ்வுக்கான போராட்டங்களைத் தீவிரமாக நடத்த முற்படுகின்றனர்.

மக்களது பிரச்னைகளைத் தீர்க்க வழியற்ற முதலாளித்துவ சுரண்டல் கூட்டம், பஞ்சமும் பட்டினியும் நாட்டில் நிலவி வருவதற்குக் காரணம் தங்கள் சுரண்டல் முறைதான் என்பதைச் சொல்லுவதில்லை. அதற்கு மாறாக ஜனத்தொகைப் பெருக்கமே இந்தத் தீவினைகளுக்கெல்லாம் காரணம் என்று கதையளக்க ஆரம்பித்துவிடுகின்றனர். மக்களது கவனத்தை வேறு பக்கத்திற்குத் திருப்பி, தங்கள் கையாலாகாத்தனத்தையும் சுரண்டல் முறைகளையும் பட்டுத்திரையிட்டு மூடி மறைக்கின்றனர்.

மக்களுக்குத் தேவையான உணவு உற்பத்தி செய்யமுடியவில்லை; ஆகவே ஜன சமூகத்தைக் குறைக்க வேண்டும் என்று இன்றைய மால்தூஷியன்கள் கூறுகின்ற அதே நேரத்தில் அவர்கள் யாருக்குப் பாதுகாவலர்களாக இருக்கின்றனரோ அந்த வர்த்தகச் சூதாடிகளும் முதலாளித்துவக் கழுகுகளும் மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களை நாசம் செய்து விலைவாசிகள் வீழ்ச்சி யடையாமல் பாதுகாக்கின்றனர். பசித்த வாய்க்குச் சோறில்லாமலடித்துத் தங்கள் சுரண்டலைப் பலப்படுத்தும் இந்த முதலாளித்துவ முறை ஒழியவேண்டும்; முதலாளித்துவம் ஒழிக்கப்படுவதின் மூலம்தான் தாங்கள் கதிமோட்சம் அடையமுடியும்; என்பதை 'அவசியமில்லாத' ஜனங்கள் உணர ஆரம்பித்துவிட்டனர். இவர்கள் உணர்வு செயல்படத் தொடங்கினால் அபாயம் என்று உணர்ந்தவுடன் தான் இந்தக் கொள்ளைக்காரர்கள் மால்தூஸின் வேதாந்தத்தைப் படிக்கின்றனர். இந்த ஏமாற்று வித்தைகள் நீடித்து நிற்பதில்லை. மக்கள் சோஷலிச நாடுகளில் இந்த 'மால்தூஸ்' சித்தாந்தங்களை கடைப்பிடிப்பதில்லை அங்கே அதிகமாகக் குழந்தைகள் பெற்றெடுக்கும் தாய்மார்களைக் கவுரவிக்கின்றனர்; ஜனத்தொகைப் பெருக்கமும், அதே நேரத்தில் விவசாய அறுவடையும் போட்டி போட்டுக்கொண்டே வளர்கின்றன என்பதைக் காணும் மக்கள் இந்த மால்தூஸ் 'டானிக்'கை உட்கொள்ளமாட்டார்கள்.

நாட்டில் பரவிக்கிடக்கும், நிலங்களைப் பண்படுத்தி விவசாயத்திற்கு ஏற்ற, நிலங்களாக மாற்றியும் நிலங்களை விவசாயிகளுக்குப் பகிர்ந்து கொடுத்தும் காட்டாற்று வெள்ளத்தைக் கட்டுப்படுத்திப் புதுப் புது கால்வாய்கள் வெட்டியும், ஆங்கிலோ அமெரிக்க ஏகாதிபத்தியங்களுக்கு நம் நாட்டின் மேலுள்ள பிடிப்பை நீக்கி, நாட்டை உடனடியாகத் தொழில்மயமாக்கவும் இந்திய அரசாங்கம் முன்வரவேண்டும். இந்திய வறுமையையும், பசி பட்டினியையும், தீராத நோய்களையும் தீர்த்து மக்களை நல்வழிப்பாதையில் இட்டுச் செல்லுவதற்கு இது ஒன்றே மார்க்கம். நம் முன்னுள்ள அவசரப் பிரச்னைகளைத் தைரியமான நடவடிக்கைகளின் மூலம் தீர்க்க முன்வரவேண்டுமே யொழிய சென்ஸஸ் கமிஷனர் கூறுவதுபோல ஒரு பெண் மூன்று குழந்தைகளைமட்டும்தான் பெற்றெடுக்கவேண்டும்; கருத்தடை செய்யவேண்டும்; மூன்று குழந்தைகளுக்கு மேல் பெறும் தாய்மார்களை சமூகம் பகிஷ்கரிக்க வேண்டும் என்றெல்லாம் கூறி அபாயச் சங்கு ஊதுவதில் எவ்வித பயனும் இல்லை. ★

குழந்தை இலக்கியம்

★

வை. கோவிந்தன்

இன்று ஒரு சிறு பையனுக்குப் பத்து வயது நிரம்புகிறது. இன்னும் பத்து வருடங்களில் அவனுக்கு வயது இருபது. சிறு பையன் பெரியவராகிவிடுகிறார். அவருக்கு ஓட்டுப் போடும் உரிமை கிடைத்து விடுகிறது. அவர்தான் நம் நாட்டை ஆளப் போகிறார்; நம் நாட்டை வளம்படுத்தப் போகிறார்; கல்வியின் தரத்தை உயர்த்தப் போகிறார்; மருத்துவ வசதியைப் பெருக்கப் போகிறார்; குடியிருப்பு வீட்டு வசதியைப் பெருக்கப் போகிறார்; அணைக்கட்டுகள் போன்ற பல திட்டங்களை உருவாக்கி நாடெங்கும் பொன்விளையும் நிலங்களைக் காணப் போகிறார், இன்னும் பல வகையிலே நம் நாட்டைப் பெருமைப் படுத்தப்போகிறார்.

அவனுக்கு இன்று பத்து வயதாகிறது. அவனுக்குப் பெற்றோர்களாகிய நாம் கொடுக்கும் அறிவைப் பொறுத்திருக்கிறது அவனுடைய முன்னேற்றமெல்லாம்.

இவ்வளவு பெரிய காரியங்களைச் செய்யப் போகும் நமது குழந்தைகளைப் பற்றி கொஞ்சமாவது கவனம் செலுத்துகிறோமா நாம்? இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஏதோ உத்தியோகம் பார்த்து பையன் சம்பாதிக்க வேண்டுமே என்பதற்காக அவனைப் படிக்க வைக்கிறோம். அவனுக்குக் கொடுக்கும் உணவு, உடை எல்லாமே அவன் நலத்துக்காகக் கொடுக்கப்படுவதில்லை. பக்கத்து வீட்டுக்காரர் மெச்சுவதற்காகத் தான் அவனுக்கு உடை கொடுக்கிறோம், உணவு கொடுக்கிறோம். சாதாரணத் துணி கொடுத்தால் போதும் என்றிருக்கும்போது எதற்காகப் பட்டுத் துணி கொடுக்கிறோம்? கீரை சாப்பிட்டால் போதுமே? எதற்காக சாக்கலெட் கொடுக்கிறோம்? நம் பெருமையை அடுத்த வீட்டுக்காரர் அறிவதற்காகத் தானே?

சரி இவை, போகட்டும். அவர்களுக்காக—அவர்கள் அறிவு விரிவடைவதற்காக, புஸ்தகம் வாங்கிக் கொடுக்கிறோமா? ஆம் என்று சொல்லுவார்கள். அது தான் இல்லை. பையன் பாஸ் ஆவதற்காக பாடப் புத்தகங்களும், 'நோட்ஸ'ும் தான் வாங்கிக் கொடுக்கிறோம்.

நாட்டை ஆளப்போகும் நம் குழந்தைகளின் அறிவு பாடப் புத்தகங்களாலும், பாடப் புத்தகங்களின் 'சட்னி' நோட்ஸினாலும் வளரவே வளராது.

அவர்களுக்குப் பாடப் புத்தகங்களைத் தவிர அறிவு விரிவடைய வேறு புத்தகங்களைப் படிக்கக் கொடுக்க வேண்டும்.

"வேறு புத்தகங்கள் எங்கே இருக்கின்றன? தமிழிலே குழந்தைகள் படிப்பதற்காகப் புத்தகங்களே கிடைக்கவில்லையே. ஆங்கிலத்தில் அழகழகாகக் கண்ணைப் பறிக்கும்படியான முறையில் புத்தகங்கள் விற்கிறார்களே? தமிழில் இல்லையே" என்று ஒரு நண்பர் கேட்கிறார்.

நண்பர் சொல்வது ஓரளவு உண்மை தான். தமிழிலே குழந்தைகள் புத்தகம் இல்லை என்றே சொல்லிவிடலாம். நல்ல முறையில், அழகிய அமைப்பில், படங்களுடன் பேர் சொல்லக்கூடிய மாதிரியில் ஒரு ஐம்பது புத்தகங்கள்தான் வெளிவந்திருக்கின்றன. இரண்டணா நாலணா விலைகளில் ஒரு இருநூறு புத்தகங்கள் படங்களுடன் வெளி வந்திருக்கின்றன. குழந்தைகள் புத்தகம் என்ற பெயரில் 'குப்பைகள்' பல வெளி வந்திருக்கின்றன. 'குப்பை'களைத் தவிர நல்ல புத்தகங்கள் போதாதுதான். இருந்தாலும், வந்த இந்தப் புத்தகங்களே விற்பனையாகவில்லை எனப் பதிப்பாளர்கள் படுத்துவிட்டார்கள்.

பெற்றோர்களாகிய நாம் குழந்தைகளின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதற்காக அவர்களின் உடம்பு, மனம் எல்லாம் கெடுவதாக இருந்தாலும் பணம் செலவு செய்யத் தயங்குவதில்லை. சாக்கலெட் வாங்கிக் கொடுக்கிறோம், பல் போய் விடுகிறது. உடம்பு மெலிவடைகிறது. தீபாவளிப் பட்டாஸ் வாங்கிக் கொடுக்கிறோம், பையனின் உயிருக்கே அபாயம் வருகிறது. சினிமாவுக்கு அனுப்பி வைக்கிறோம், அவன் திருடனாகவும் கொலைகாரனாகவும் ஆகலாம். இன்றைய சினிமாப் படம் அப்படித் தான் இருக்கிறது. நகை செய்து போடுகிறோம், நகையை அபகரிக்கக் குழந்தையையே கொன்றுவிடுகிறான் திருடன்.

இந்த மாதிரி அபாயகரமான விஷயங்களுக்குச் செலவு செய்யும் நாம் நம் குழந்தைகளின் அறிவு விரிவடைய மாதம் ஒரு ரூபாய் புத்தகங்களுக்காக—நல்ல புத்தகங்களுக்காகச் செலவு செய்யக் கூடாதா?

★

—ஈசாப்

1

வேட்டை நாயும் முயலும்

ஒரு வேட்டை நாய் ஒரு முயலைத் துரத்தியது. முயல் வேகமாக ஓடியும் கூட வேட்டை நாய் விடாமல் வேகமாய்ப் பின் தொடர்ந்தது. கடைசியாக நாய்க்கு ஓட்டத்திலே மூச்சுத் திணறியது. அதனால் ஓட்டத்தை நிறுத்தியது. முயல் தப்பி விட்டது. இதைப்பார்த்த எஜமான் நாயைக் கேலி செய்தான். முயலைப் பிடிப்பதற்குப் போதிய சக்தி நாய்க்கு இல்லை என்றான்.

நாய் சொல்லியது:- "எஜமானே! என்னைப் பார்த்து நீங்கள் சிரிக்க வேண்டுமானால் சிரியுங்கள். ஆனால், முயலுக்கும் எனக்கும் ஓட்டத்தின் நோக்கத்தைப் பொறுத்த வரையில் ஒருவித வித்தியாசம் உண்டு. முயல் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடியது. நானோ வெறும் உணவிற்காக ஓடினேன். உயிரைக் காப்பாற்ற ஓடும்போது அதிக சக்தி ஏற்படுவது இயற்கை"

அபாயம் ஏற்படும் போது சக்தி அதிகமாகிறது

2

சேவலும் திருடர்களும்

ஒரு வீட்டுக்குள் திருடர்கள் நுழைந்தார்கள். அங்கே திருடுவதற்கு ஏதும் அகப்படவில்லை. ஒருசேவல்மட்டும்கிடைத்தது. அதை எடுத்துக்கொண்டு போகும் போது அது சொல்லிற்று:- "மனிதர்கள் எல்லாரும் காலையில் தங்கள் வேலைகளைப் பார்ப்பதற்காக, காலையில் எழுந்திருக்க நான் கூவுகிறேன். இவ்வளவு உபயோகமாக நான் இருக்கும்போது என்னைத் தூக்கிக் கொண்டு போகலாமா?"

திருடர்கள் சொன்னார்கள்:- "இல்லை, இல்லை, உன்னுடைய உபயோகமுள்ள வேலைகளைப் பற்றி ஒன்றும் பேசாதே. வாயை மூடிக்கொண்டிரு. நீ கூவுவதால் மக்கள் தூங்காமல் விழித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் விழித்திருப்பதால் எங்களால் திருட முடியவில்லை."

"நல்லவைகளைக் கெட்டவர்கள் வெறுக்கிறார்கள்"

3

இரண்டு பிரயாணிகள்

இரண்டு பிரயாணிகள் ஒரு காட்டு வழியாகப் போய்க் கொண்டிருந்தார்

ஈசாப் : சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்னர் கிரேக்க தேசத்தில் வாழ்ந்த இந்த ஆசிரியரைப் பற்றிய பூராத் தகவல்களும் நமக்குக் கிடைக்கவில்லை. இப்பெயரில் ஒருவர் இருந்தாரா என்ற சந்தேகம் நீண்ட நாட்களாகவே இருந்து வந்திருக்கிறது. இவர் ஒரு அடிமையாக இருந்ததாகவும், இவரது தத்துவங்களை எதிர்த்தவர்கள் இவரைக் கொன்று விட்டனர் என்றும் கூறுவாருமுளர்.

கள். கீழே ஒரு கோடாலி கிடப்பதை ஒரு பிரயாணி பார்த்தான். அவன் சொன்னான்:- "நான் ஒரு கோடாலியைக் கண்டு எடுத்தேன்"

மற்றவன்:- "நான் எடுத்தேன் என்று சொல்லாதே. நாங்கள் எடுத்தோம் என்று சொல்லு. நாம் இருவரும் கூட்டாளிகள். ஆகவே கிடைப்பதில் நம் இருவருக்கும் பங்கு உண்டு."

முதல்வன்:- "அதற்கு நான் சம்மதிக்க முடியாது. இது எனக்குத்தான்.

இருவரும் சிறிது தூரம் போனார்கள். கோடாலியின் சொந்தக்காரன் கோபமாக இவர்களைக் கூப்பிட்டான்.

இதைக் கேட்டதும் கோடாலியை எடுத்தவன் சொன்னான்:- "இனி நமக்குத் தொல்லை வரும் போலத் தெரிகிறது."

மற்றவன்:— "நமக்குத் தொல்லை என்று சொல்லாதே. உனக்குத் தொல்லை என்று சொல்லு. கோடாலியில் எனக்குப்பங்கு இல்லை என்றுதான் சொல்லிவிட்டாயே? ஆகையால் இப்பொழுது வரும் தொல்லையிலும் எனக்குப் பங்கு கிடையாது, முழுவதும் உனக்குத்தான்."

பிறருக்கு உதவி செய்யாதவர்கள் பிறர் உதவியை எதிர்பார்க்க முடியாது

4

சேவலும் நரியும்

ஒரு நாள் காலையில் ஒரு மரத்தின் மீது சேவல் உட்கார்ந்து இருந்தது. காலை நேரம் ரம்மியமாய் இருந்தபடியால் உற்சாகமாய்ச் சேவல் கூவியது. இதைக் கேட்ட நரி அங்கே வந்தது. நரி பசியாய் இருந்தது. ஆனால், சேவல் மரத்தின் மீது இருந்தபடியால் அதைப் பிடிக்க முடியவில்லை. இதற்காக ஒரு தந்திரம் செய்ய நினைத்தது. உடனே சேவலைப் பார்த்துச் சொல்லியது:— "சகோதரனே, வணக்கம். ஒரு நல்ல செய்தி நீ கேள்விப் பட்டாயா? பறவைகளுக்கும் மிருகங்களுக்கும் ஒரு சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டது. இனி ஒருவருக்கு ஒருவர் சண்டை போட்டுக் கொள்ளக் கூடாது. அன்பாய் நடந்து கொள்ள வேண்டும், சகோதரப்பான்மையைவளர்க்க வேண்டும். நீ கொஞ்சம் கீழே வாயேன். இந்த நல்ல செய்தியைப் பற்றிப் பேசுவோம்"

நரியின் தந்திரப் பேச்சைச் சேவல் புரிந்து கொண்டது. அதை வெளியே காட்டவில்லை. தூரத்தில் எதையோ பார்ப்பதைப்போல தலையைத் தூக்கிப் பார்த்தது. இதைக்கண்ட நரி கேட்டது: "ரொம்ப அக்கரையாக எதையோ பார்க்கிறாயே? அங்கே என்ன இருக்கிறது?"

சேவல் சொல்லியது:- "அங்கே சில வேட்டை நாய்கள் வருவது மாதிரித் தெரிகிறது. வேட்டை நாய்கள்தானா என்பதைச் கவனிக்கிறேன்"

நரி:- "அப்படியானால் நான் போய் விடுகிறேன்"

சேவல்:- "போகாதே நண்பா. நான் இதோ கீழே வருகிறேன். நாயைக் கண்டு ஏன் பயப்படுகிறாய்? இப்பொழுதுதான் சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னாயே!"

நரி:- "அந்த ஒப்பந்தத்தைப் பற்றி அநேகர் இன்னும் கேள்விப்பட்டிருக்க மாட்டார்களே! அந்த நாய்களுக்குத் தெரியாமல் இருந்தால் நான் என்ன கதி ஆவது? நான் போகிறேன்"

நரி ஓட்டம் எடுத்தது. சேவல் சிரித்தது.

கெட்டிக்காரன் புளுகினாலும் அது வெளிப்பட்டுவிடும்

5

கிணற்றுக்குள் நரி

ஒரு நரி கிணற்றுக்குள் விழுந்து விட்டது. மேலே வரமுடியவில்லை. தண்ணீரில் மூழ்கி விடாமல் இருப்பதற்காக முகத்தைத் தண்ணீருக்கு மேலே நீட்டிக் கொண்டிருக்கப் பிரயாசைப் பட்டது. இச்சமயம் அப்பக்கமாக ஒரு ஓநாய் வந்தது. கிணற்றுக்குள் பார்த்தது. சுவரைப் பற்றிக்கொண்டுமூஞ்சி மட்டும் வெளியில் தெரிகிற மாதிரி இருந்த நரி தென்பட்டது அதுசொல்லியது:-"நண்பர்நரியாரேஉமக்கா இந்தக் கதிவரவேண்டும்? தண்ணீரில் ரொம்பக் குளிராய் இருக்குமே! ஐயோ நீர் எப்படி விழுந்தீர்? எத்தனை மணிக்குவிழுந்

தீர்? எல்லாவற்றையும் கொஞ்சம் விபரமாய்ச் சொல்லுமே! அவற்றைக் கேட்டாவது என் மனம் கொஞ்சம் நிம்மதி அடையட்டுமே! தயவுபண்ணிச் சொல்லும் ஐயா நரியாரே!"

நரி சொல்லிற்று: —"நான் மூச்சுக் குத் திண்டாடும் போது எப்படி விழுந் தேன், எத்தனை மணிக்கு விழுந்தேன் என்ற விபரங்களைச் சொல்லும்படி கேட்கிறீர். நீர் மேலே இருந்து கண்ணீர் வடிப்பதைவிட ஒரு கயிற்றை கிணற்றுக்குள் தொங்க விட்டால் அது தான் எனக்குப் பெரிய உபகாரமாய் இருக்கும். நான் மேலே வந்த பிறகு எல்லா விபரங்களையும் சொல்லு கிறேன்"

அநுதாபம் காட்டுவது சுலபம். உதவி செய்வது தான் முக்கியம்.

6

சிப்பாயும் குதிரையும்

ஒரு சிப்பாய் யுத்த காலத்தில் தன் குதிரையை மிக்க கவனமாய்ப் பேணி வந்தான். நல்ல தீனி போட்டான். குதிரை நல்ல பலத் தோடு இருந்தது. அதனால், யுத்தத்தில் நல்ல சேவை செய்தது. யுத்தம் முடிந் ததும்சிப்பாயின் சம்பளத்தைக் குறைத் தார்கள். அவனால் முன் போலக் குதி ரைக்குத் தீனி போட்டு வளர்க்க முடிய வில்லை. அதனால் வேலை செய்வதற் காகக் குதிரையை வாடகைக்கு விட் டான். கடுமையான வேலையும் குறை வான தீனியும் இருந்தபடியால் குதிரை மெலிந்து போயிற்று. இச் சமயத்தில் திடீரென்று மறுபடியும் யுத்தம் வந் தது. குதிரை கூலிவேலைக்கு செல்வதை நிறுத்தி அதற்கு நல்ல தீனி போட ஆரம்பித்தான். ஆனால் பல நாட்கள் தீனி இல்லாமல் கிடந்த குதிரையை சில தினங்களுக்குள் பழைய நிலைமைக்குக் கொண்டுவர முடியவில்லை. இதனால் யுத்தத்தில் அதன் பழைய சக்தியைக் காட்ட முடியவில்லை. காலில் பலமில்லா மல் திடீரென்று ஒரு நாள் யுத்த களத் தில் கீழே விழுந்து விட்டது. அச்சமயம் அது சொல்லியது:-

"நீ என்னைக் கழுதை செய்யும் வேலையைச் செய்யும்படி செய்தாய். திடீரென்று மறுபடியும் எப்படி என்னைக் குதிரை யாக்கிவிட முடி யும்?"

இடிப்பது சுலபம். கட்டுவதற்குப் பல நாட்கள் ஆகும்.

7

கரடியும் தேன்கூடும்

ஒரு கரடி ஒரு தோட்டத்திற்குள் போயிற்று. அங்கே தேன்கூடுகள் ஏராளமாய் இருந்ததைப் பார்த்தது. தேன் குடிப்பதில் அதற்கு ரொம்பப் பிரியம். அதனால் தேன்கூடுகளைப் பிடுங்கி அதில் உள்ள தேனைச்சாப்பிடத் தொடங்கியது. இதைக் கண்டதேனீக் கள் கரடி மீது பாய ஆரம்பித்தன. அது சமயம் அது ஓடி இருந்தால் பிழைத்துப் போயிருக்கும் ஆனால் தேனீக்களை அது அலட்சியம் செய் தது. இந்த அற்பத் தேனீக்கள் என்ன செய்துவிடமுடியும் என்று நினைத்தது. கொஞ்ச நேரத்தில் எல்லாத் தேனீக் களும் ஒன்று சேர்ந்து கரடியின் முகத் தில் வந்து கப்பிக் கொண்டன. கப்பிக் கொண்டு அவை கொட்டுகொட்டென்று கொட்டின. கரடியால் வேதனை தாங்க முடியவில்லை. முகத்தில் இருந்த தேனீக் களை நசுக்கிப் பார்த்தது. எவ்வளவு நசுக்கினாலும் இன்னமும் ஏராளமாய் இருந்து கொட்டின. கரடிக்குக் கோபம் அதிகமாகயிற்று. அந்தக் கோபத்தினால் முகத்தில் இருந்த தோலையே உரித்து விட்டது. அதனால் கரடி மாண்டது.

சிறியோர் என்று அலட்சியம் செய் யக் கூடாது.

8

நரியும் ஓநாயும்

ஏராளமான தீனி கிடைத்ததால் ஓநாய் குகையை விட்டு வெளியே வரவே இல்லை.

வெளியிலே வராமல் இருந்ததைப் பார்த்து நரி சந்தோஷப்பட்டது. தீனி நிறையக் கிடைத்திருக்கும் என்று நினைத்தது. அதில் தானும் கொஞ்சம் தின்னலாமே என்று எண்ணி ஓநாயின் குகைக்குப் போயிற்று. வாசலில் நின்று

கொண்டு "சகோதரரே சுகந்தானா?" என்று கேட்டது. அப்படிக் கேட்டால் தன்னை உள்ளே சாப்பிடுவதற்கு ஓநாய் அழைக்கும் என்று நினைத்தது ஆனால், ஓநாய் அப்படிச் செய்யவில்லை. நரியை உள்ளே அழைத்தால் வீணைக் தீனிக்கு நஷ்டம் வரும் என்று எண்ணியது. அதனால் உள்ளே இருந்தபடியே சொல்லிற்று :--

"எனக்கு உடல் நலம் சரியாய் இல்லை. அதனால் யாரையும் பார்த்து நான் பேச முடியாது."

இதைக் கேட்டதும் நரிக்குக் கோபம் வந்தது. "இந்த ஓநாய்க்கு உலை வைக்கிறேன்" என்று சொல்லிக் கொண்டு ஒரு மேய்ப்பனிடம் போயிற்று. அது சொல்லிற்று. "ஒரு தடியை எடுத்துக் கொண்டு என்னோடு வாரும். உமது ஆடுகளைத் தின்று கொண்டிருக்கும் ஓநாயைக் காட்டுகிறேன்"

மேய்ப்பன் தடியோடு நரியுடன் போனான். குகையில் ஓநாயைக் கண்டு பிடித்துக் கொன்றான். நரி அந்தக் குகைக்குக் குடியேறி ஓநாய் சேர்த்து வைத்திருந்த தீனிகளைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தது. ஒரு நாள் அப்பக்கமாகப் போன மேய்ப்பன் குகைக்குள் நரி இருப்பதைப் பார்த்தான் அதையும் கொன்றான்.

பிறரைக் கெடுப்பவன் தானும் அழிந்து போவான்.

9

மேய்ப்பன் வியாபாரியானான்

ஒரு மேய்ப்பன் தன் ஆடுகளை கடற்கரைப் பக்கம் மேயவிட்டான். ஒரு குன்றுமீது ஏறி உட்கார்ந்து கொண்டு கடலைப்பார்த்தான், நீல நிறத்தில் சாந்தமாகவும் அழகாகவும் கடல் விளங்கியது. அதில் போய்க் கொண்டிருந்த படகுகள் ரம்மியமாய் இருந்தன. அவன் நினைத்தான் !-" "நானும் ஏன் படகில் ஏறிப் போகக் கூடாது? பல நாடுகளுக்குச் செல்லாம். விசித்திரங்களைப் பார்க்கலாம். இந்த அமைதியான கடலில் படகில் போவது ஆபத்து ஒன்றும் இல்லை. வியாபாரம் செய்தால் நல்ல லாபம் வரும். அதைக் கொண்டு சிறப்பாய் வாழலாம்."

மேய்ப்பன் தன் ஆடுகளை விற்றான். அந்தப் பணத்தைக் கொண்டு பேரீச்சம் பழ மூட்டைகளும்படகும் வாங்கினான் பிரயாணம் ஆரம்பித்தான். படகு கொஞ்ச தூரம் போனதும் அமைதியாய் இருந்த கடலில் திடீரென்று கொந்தளிப்பு ஏற்பட்டது. படகைக் காப்பாற்றுவதற்காகப் பாரத்தைக் குறைக்க வேண்டியதாயிருந்தது. பேரீச்சம்பழ மூட்டைகளை ஒவ்வொன்றாய்க் கடலில் தூக்கி எறிந்தான். எல்லா மூட்டைகளும் போய் விட்டன. அப்புறமும் படகை சரியாய் நடத்த முடியவில்லை. ஒரு பாறைமீது படகு மோதி துண்டு துண்டாய்உடைந்து போயிற்று. ரொம்ப சிரமப்பட்டு மேய்ப்பன் உயிர் தப்பினான். ஊருக்கு வந்ததும் யாரிடம் தன் ஆடுகளை விற்றானோ அவனிடம் அதே ஆடுகளை மேய்ப்பதற்குக் கூலிக்கு அமர்ந்தான். ரொம்ப சிக்கனமாய்ச் வாழ்ந்து பணம் சேர்த்து சில மந்தைகளை மீண்டும் வாங்கினான். முன்னால் எந்த இடத்தில் கடலின் அழகு அவனைக் கவர்ந்ததோ அதே இடத்தில் ஒரு நாள் மந்தைகளை மேய்த்துக் கொண்டிருந்தான். கடல் கரையில் நின்று கடலைப் பார்த்துக்கொண்டிருந் போதுஒரு அலைவந்து அவன் காலைத்தொட்டது. உடனே கடலைப்பார்த்து அவன் சொன்னான் :-"அட ஏமாற்றுக் கடலே! நான் மீண்டும் உன்னிடம் வருவதற்கு என்னைக் கழுதை என்று நினைத்துக் கொண்டாய்? உனக்கு இன்னும் பேரீச்சம் பழம் வேண்டும் என்று ஆசையாய் இருக்கிறதோ ? சரி, சரி, வேறே மடையன் யாரையாவது கண்டு பிடி !"

அநுபவம் தான் சிறந்த வாத்தியார். ★

புத்திசாலி !

பயந்தவர்களும், புத்தியற்றவர்களும் தங்களைப் புத்திசாலிகளென்று தங்களைத் தாங்களே மெச்சிக் கொள்வார்கள்.

— கும்பகர்ணன்

பற்களைப் பிடித்திருக்கும் சகல வியாதிகளையும் போக்கும் சஞ்சீவி மருந்து இவைகள் என்று விளம்பரப்படுத்தப்படும் பற்பசைகளை உபயோகித்து ஏமாந்தவர்கள் நம்மில் பலர். பணத்திற்குப் பணம் நஷ்டம்; பற்களுக்கும் கெடுதல் அநேகம். அநாவசியமாக ஏராளமான பணம் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி யாவதுதான் மிச்சம். காசு அதிகச் செலவில்லாமல் பற்களைப் பாதுகாப்பதற்கும், ஆரோக்கியத்தை வளர்ப்பதற்கும் ஒரு வழி இருக்கிறது. சுலபமான வழி. அதிகச் செலவில்லை. ஆரோக்கியத்துக்கு ஆரோக்கியம் அழகுக்கு அழகு.

வெற்றிலை போடுங்கள்

வை. கோ.

'வெற்றிலையைப் போட்டுக் கண்ட கண்ட இடங்களில் துப்புகிறார்கள் சார் இந்த அநாகரிகம் பிடித்தவர்கள்' என்று பல தடவை சொல்லக் கேட்டிருக்கிறோம். என்ன சொன்னாலும் அவர்கள் வெற்றிலை போட்டுக்கொள்வதை நிறுத்தவும் இல்லை, துப்புவதை விட்டபாடும் இல்லை. வெற்றிலை போடும் பழக்கம் கீழ் நாட்டு மக்களிடையே பல நூற்றாண்டுகளாக பழக்கத்திலிருந்து வருகிறது. பல்லை வெள்ளையாக வைத்துக்கொள்வதற்காகவும். கண்ட இடங்களில் துப்பாமல் இருப்பதற்காகவும் இப்பொழுது நம் நாட்டில் வெற்றிலை உபயோகிக்கும் பழக்கம் குறைந்து வருகிறது. குறைந்து வருவது ஒரு அபசதனம் இல்லை. உடல் நலம் குறைந்து வருகிறது; வாய் நாற்றம் பெருகி வருகிறது; பல்களும் வேண்டிய அளவு பிடுங்கப்பட்டு வருகிறது; பல் வைத்தியர்களும் பெருகி வருகிறார்கள். ஏனைய நாடுகளைக் காட்டிலும் நம் நாட்டில் பல் வியாதி குறைவு என்பதை ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும்.

வெற்றிலை போடாத இவர்கள் பல்லைச் சுத்தமாக, வெண்மையாக வைத்துக் கொள்வதற்காக வெளி நாடுகளில் இருந்து பெரிய தடபுடலான விளம்பரங்கள் பெற்ற பல் பசைகளைக் கொண்டு, 'உயர்தரமான' பிரஷ்களால் பல் விளக்கி வருகிறார்கள். அவர்கள் கண்ட பலன் வெகு சீக்கிரம் பல் வலி வந்து உடனே டாக்டரிடம் போய் டாக்டர் மூலம் பல்லைப் பிடுங்கி 'நகல்' பல்வைத்துக் கொண்டதுதான். இப்பொழுது வரும் பல் பசைகளில் 'குளோரோபில்' சேர்ப்பதாகவும் அதனால் வாய் நாற்றம் போகும் என்றும் விளம்பரம் செய்யப்படுகிறது. 'குளோரோபில்' சேர்ந்த பல் பசை இப்பொழுது ஏராளமான விற்பனை— நம் பல் சுத்தமாக இருப்பதற்கும், வாய் நாற்றம் இல்லாமல் இருப்பதற்காகவும் ஒவ்வொரு வருஷமும் கோடிக்கணக்கான ரூபாய்களை வெளிநாடுகளுக்கு, பல்பசை, பல்பொடி பிரஷ்கள் வாங்குவதற்காகப் போய்க் கொண்டிருக்கிறது.

வாய் நாற்றம் இருப்பவர்களிடம் சாதாரணமாக மற்றவர்கள், 'நீங்கள் வெற்றிலை போடுங்கள்; வாய் நாற்றம் போகும்' என்று சொல்வதை நாம் அறிவோம். அவர்களுக்கு வெற்றிலையிலே இயற்கையான 'குளோரோபில்' இருக்கிறது என்பதை அறிந்து அவர்கள் சொல்லவில்லை. நீண்ட காலப் பழக்கத்தில் வெற்றிலை சாப்பிடுவது இருந்து வருவது ஒன்றேதான்.

வெற்றிலையிலுள்ள சத்து பற்றிச் சொல்லிவிட்டு நான் விடை பெற்றுக் கொள்கிறேன்.

சத்து விபரம்	வெற்றிலை	முட்டை கோஸ்
புரோட்டின்	3·07	1·75
கொழுப்பு	0·08	0·11
தாதுப்-பொருள்	2·25	0·61
எரிபொருள்	6·14	6·38
கால்சியம்	0·227	0·034
இரும்பு	5·74	0·076
100 கிராமில் உள்ள காலோரி	44·0	33·5
வைடமின் A	9,635	2000
,, C	3·8	124·2

நிறையச் சத்து இருப்பதாக நாம் வாங்கிச் சாப்பிடும் முட்டைக் கோஸ் கீரையைக் காட்டிலும் எல்லா வகையினும் அதிகமாகச் சத்துப்பொருள் இருக்கிறது வெற்றிலையில்.

வெற்றிலைச் சாறு உடம்பில் சேருவதால் கபம், சீதளம், காணாக் கடியின் துர்க்குணம், திரிதோஷகோபம் இவைகள் ஒழியும் என்று குணபாடம் கூறுகிறது.

இதை எல்லாம் பார்த்துவிட்டு 'சிலர் நாள் பூராவும் வெற்றிலையை மென்று கொண்டிருப்பார்களே', அவர்களைப் போல நாமும் மெல்லலாம் என்று நினைத்துவிடாதீர்கள். தினம் இரண்டு மூன்று முறை வெற்றிலை போடலாம். வெற்றிலை போட்ட கொஞ்ச நேரத்தில் நன்றாக வாயைக் கொப்பளிக்க வேண்டும். வாய் கொப்பளிக்காவிட்டால் பல் இடுக்குகளில் பாக்குத் துண்டு மாட்டிக்கொள்ளும். குச்சி எடுத்துக் குத்துவீர்கள். பிறகு பல் வலி—இத்யாதி. பல் வைத்தியருக்கு யோகம்! உங்கள் வாயும் பொக்கை வாய் ஆகும்! ஜாக்கிரதை!

சக்தி

பொங்கல் மலர்

★

வழக்கம் போல அறிஞர் பலரின் கட்டுரை, கதை, கவிதை-கண்ணை கவரும் படங்களுடன் ஜனவரி 14-ந் தேதி வெளிவருகிறது

128 பக்கம், விலை அணா 8

தபால் செலவு சேர்த்து ஒன்பதணா தபால்தலை அனுப்பிப் பெறலாம் டிசம்பர் 30ந் தேதிக்குள் ரூ. மூன்று வருட சந்தா செலுத்துபவர்கள் பொங்கல் மலருக்கு அதிகப் பணம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை

★

சக்தி காரியாலயம்

சென்னை-14

அரிய நூல்கள்

★

பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை எழுதிய நூல்கள்

	ரூ.	அ.
வழிவழி வள்ளுவர்	1	8
வேலும் வில்லும்	1	4
தமிழ் விருந்து	2	0
ஊரும் பேரும்	5	0
தமிழின்பம்	3	0
தமிழர் வீரம்	2	0
வேலின் வெற்றி	(அச்சில்)	

★

நாமக்கல் கவிஞர் நூல்கள்

அவளும் அவனும்	6	0
இலக்கிய இன்பம்	3	8
மலைக் கள்ளன்	4	12
மாமன் மகள்	(அச்சில்)	
எவளும் எவனும்	(,,)	

தபால் செலவு தனி

★

பழநியப்பா பிரதர்ஸ்,

4, வெங்கடேச நாயக்கன் தெரு,

சென்னை-5

பணம் எமிலி போர்ன்ஸ்

பணம் என்றால் என்ன? அதன் தன்மை என்ன? அதன் பூர்விகம் என்ன? இன்றைய சமுதாயத்தில் அதன் இடம் என்ன? அதன் எதிர்காலம் என்ன? என்ற விஷயங்களை அலசி ஆராய்ந்திருக்கிறார் ஆசிரியர். வெ. ராமசாமியின் ஆற்றொழுக்குப்போன்ற தமிழ் மொழிபெயர்ப்பு. ரூ. ஒன்றரை

தபால் செலவுடன் ரூ 1—10

அணுவை அறிக

நா. கி. நாகராசன்

அணுவைப்பற்றிய அறிவு தற்கால பௌதிகத்திற்கே அடிப்படையானது. பொருளின் அமைப்பு, மின்சாரத்தின் தன்மை, ஒளியின் பண்பு, அணு குண்டின் பேயாற்றல், முதலிய விஞ்ஞான உண்மைகளை உணர அணுவின் தன்மை அறியவேண்டும் பழங்கால இந்தியத் தத்துவ ஞானிகளது கற்பனையிலிருந்து ஹைடிரஜன் குண்டு பற்றிய ஆராய்ச்சிவரை இந்த புத்தகத்தில் ஆசிரியர் விளக்கி இருக்கிறார். ரூ. ஒன்றரை

தபால் செலவுடன் ரூ. 1—10

நான்கு முட்டாள்கள்

அணில் அண்ணன்

வேடிக்கையான கதை விறுவிறுப்பான கதை. குழந்தைகள் கதையைப் படித்தால் விழுந்து விழுந்து சிரிப்பார்கள். பெரியவர்களும் படிக்கலாம். இது குழந்தைக் கதைப் புத்தகம். அணா 4

தபால் செலவுடன் அணா 5

சக்தி காரியாலயம், சென்னை-14

சென்னை 600 008

காய்கறித் தோட்டம்



தோட்டம் போடுவது எப்படி
விதை விதைப்பது எப்படி
எரு இடுவது எப்படி
காய்கறிகளிலுள்ள உணவுச்
சத்து யாது

என்ற விஷயங்களை
அறிய வேண்டுமா?

கத்தரி வகை, அவரை வகை,
கீரை வகை, பூசணி வகை, கிழங்கு
வகை, சீமைக் காய்கறி வகை

பயிரிடக் கற்றுக்
கொள்ள வேண்டுமா?

இதற்கேற்ற புத்தகம்
காய்கறித் தோட்டம்
மு. அருணாசலம் எழுதியது

விலை ரூ. ஐந்து
தபால் செலவு தனி

சக்திகாரியாலயம்

தபால் பெட்டி : 660
ராயப்பேட்டை, சென்னை - 14

★ ★ ★ ★

Edited and Published by Vai Govindan, SHAKTI Karyalayam 115E Mowbray's Road, Madras, 14. Printed by A. Ganapathy at Asian Printers, 4, Venkatesa Naicken St., Chepauk, Madras-5.

குழந்தைகளின் வாரப் பத்திரிகை

அணில்

ஆசிரியர்: **அணில் அண்ணன்**

•

★ குழந்தைகளுக்காக முதன் முதலில் தோன்றிய வாரப் பத்திரிகை அணில்

★ தொடர்கதை, பாட்டிகதை, துப்பறியும்கதை, வீரக்கதை, சரித்திரக்கதை, இன்னும் பல.

★ பெரியோர், விஞ்ஞானிகள், அறிஞர், வீரர், அரசியல் தலைவர்கள் சரித்திரங்கள்.

★ வேடிக்கைக் கணக்கு, விடுகதை, பழமொழி, உலகத்துச் செய்திகள்.

★ எட்டுப் பக்கம், பத்திரிகை அளவு, இரண்டு கலரில் படங்கள், டிசம்பர் 20௳ வெளி வருகிறது. விலை ஓரணா. வருட சந்தா ரூ. மூன்று.

எல்லா ஊர்களிலும் ஏஜண்டுகள் தேவை

சக்தி காரியாலயம்

ராயப்பேட்டை, சென்னை-14.

Learn PHOTOGRAPHY with a Free LOAN CAMERA

Join ↓ K & P

Here are the advantages:

- Borrow a camera free, complete with flash light equipment.
- Get your films developed in our fine grain cold developing plant.
- Get expert criticism of your photographic efforts, free.

Ask for details:

FREE CAMERA LOAN SERVICE

KLEIN & PEYERL
30, MOUNT ROAD, MADRAS-2.

PHONE: 84167

QUALITY SERVICE FOR 72 YEARS

BLOCKS · PHOTOGRAPHS

AIR CONDITIONED STUDIO.

Asian Printers, Madras-5.